டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி



தன்னம்பிக்கையும் உயர் தர்ம நெறிகளும்

கங்கை புத்தக நிலையம்

தன்னம்பிக்கையும் உயர் தர்ம நெறிகளும்

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

கங்கை புத்தக நிலையம்

13 (புதிய எண் : 23), தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை–600 017

முதற் பதிப்பு	:	டிசம்பர்,	1985
பதினோறாம் பதிப்பு	:	செப்டம்பர்	2000
பதினேழாம் பதிப்பு	:	ஏப்ரல்	2001
பதினெட்டாம் பதிப்பு	:	நவம்பர்	2001
பத்தொன்பதாம் பதிப்பு	:	மே	2002
இருபதாம் பதிப்பு	:	ஜனவரி	2003
இருபத்தி ஒன்றாம் பதிப்பு	:	ஜனவரி	2003
இருபத்தி இரண்டாம் பதிப்பு	:	ஆகஸ்ட்	2003
இருபத்தி மூன்றாம் பதிப்பு	:	மே	2004
இருபத்தி நான்காம் பதிப்பு	:	பிப்ரவரி	2005
இருபத்தி ஐந்தாம் பதிப்பு	:	ஜனவரி	2006

விலை : ரூ.32.00

❄ Title	:	**THANNAMPIKKAIYUM UYAR THARMA NERIGALUM**
❄ Author	:	M.S. Udhayamoorthy
❄ Language	:	Tamil
❄ Subject	:	Self-Improvement
❄ Edition	:	Twenty Fifth Edition, January 2006
❄ Pages	:	192
❄ Publised by	:	**GANGAI PUTHAKA NILAYAM** 13, Deenadayalu Street, Thyagaraya Nagar, Chennai - 600 017.
❄ Price	:	**Rs.32.00**

Laser Typeset at : Laser Link Systems, Chennai - 17. ☎ 2435 6548
Printed at : Ragavendra Agencies, Chennai - 5 ☎ 28446891, 28446166

காணிக்கை

எண்ணங்களின் தன்மையையும்
வலிமையும் வாழ்வின் உண்மைகளையும்
தனது புத்தகங்கள் மூலம் வாரி வழங்கும்
ஞானாசிரியர் காலஞ்சென்ற
உயர்திரு ஜேம்ஸ் ஆலன் நினைவாக.

- உதயமூர்த்தி -

உயர்வோம்! உயர்த்துவோம்!

ஒரு பிராமண இளைஞர் கிராமத்திலுள்ள சேரிக்குச் சென்று, ஹரிஜன மாணவர்களுக்காக ஓர் ஆரம்பப் பள்ளியைத் துவங்குகிறார், ஹரிஜனங்களைத் தனிமைப் படுத்தி வைத்து அவர்களைத் தீண்டத்தகாதவர்களாக நடத்திய ஊரில்— ஹரிஜனக் குழந்தைகள் மாடு மேய்ப்பது மட்டுமே தெரிந்த தொழிலாக வளர்ந்துகொண்டிருந்த ஊரில்—

ஒரு கிறிஸ்துவ அம்மையார், தெருவில் கேட்பாரற்று நோயாலும் பட்டினியாலும் மாண்டுகொண்டிருந்தவர்களுக்கு, அவர்களைப் பேணும் ஓர் இடத்தைத் துவங்குகிறார். சாப்பாட்டிற்காக, தண்ணீருக்காகச் சாலையில் போவோரை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்த நோயாளிகளை, 'சர்வசகஜமான சாலை ஓரக் காட்சிகள்' என்று கண்டும் காணாமல் போய்க்கொண்டிருக்கும் மனித இனம் வாழ்கின்ற ஊரில்—

"என் வாழும் உரிமையை நீ பறிக்க முடியாது. சிறையில் தள்ளுவாய், சுட்டுக் கொல்லுவாய் என்பதற்காக அஞ்ச மாட்டேன். கடைசிவரை போராடுவேன். அநீதிக்கெதிராக எல்லா மக்களையும் எழுப்பிவிடுவேன்" என்று

போராடுகிறார் ஒரு தென்னாப்பிரிக்கப் பெண்மணி, 'இருப்பதை ஏற்றுக் கொள்', 'மிதக்கிற படகை ஆட்டாதே' என்று மக்கள் அதிகாரத்திற்கும் ஆணவத்திற்கும் பயந்து வாழும் ஊரில்—

ஒரு பிராமண இளைஞன்— ஒரு கிறிஸ்து அம்மையார் ஒரு தென்னாப்பிரிக்கா வாழ்இந்தியர் – இவர்கள் மூவரும் அப்படி என்ன செய்தார்கள்?

தனக்குமேல் உயர்ந்தார்கள்; தனிமனித எல்லைகளை மீறினார்கள்; தர்ம நெறிகளைக் கடைப்பிடித்தார்கள்.

நாமும் வாழ்கிறோம். சமுதாயத்தின் ஒரு பிரஜையாக வாழ்கிறோம், வாழ்நாளை ஓட்டுகிறோம்.

நம்மில் எத்தனை பேருக்கு இத்தகைய செயல் செய்யத் துணிவு வரும்? தியாக உள்ளம் உண்டு? படித்த நல்லவற்றை வாழ்வில் கடைப்பிடிக்க முயலும் ஆர்வம் உண்டு?

வாழ்வை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

அடிப்படைத் தேவைகள்: உணவு, உடை, இருப்பிடம், பாதுகாப்பு என்ற வாழ்க்கையின் அன்றாடத் தேவைகள் நிறைந்த வாழ்வு.

உயர்நிலைத் தேவைகள்: மனித ஆத்மா எழுப்பும் தேவைகள்—உண்மை, நியாயம், சமத்துவம், சுதந்திரம், அன்பு, அழகு என்ற தேவைகள்— அன்றாட வாழ்வை மீறிய தேவைகள், உண்மைக்காக, நியாயத்திற்காக, சமத்துவத்திற்காக, சுதந்திரத்திற்காக மனிதன் வாழ்கிறான்; போராடுகிறான். அதற்காகத் தன் வாழ்வையே அர்ப்பணிக்கத் தயாராயிருக்கிறான்.

வாழ்வில் அன்பை, பாசத்தை, கருணையை எங்கும் பரப்புகிறான். காணும் இடங்களிலெல்லாம் அழகை ஆராதிக்கிறான். "தீக்குள் விரலை வைத்தால் நின்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதையே நந்த லாலா" என்று பாடுகிறான்.

மனித வாழ்க்கை, தேடிச் சோறு நிதம் தின்னும் வாழ்க்கை அல்ல. பல சின்னஞ்சிறு கதைகள் பேசி, தன் புகழைப் பாடி பல கிசுகிசுக்களைப் பரப்பி அதிலே மகிழ்ந்து வாழ்ந்து முடிக்கும் ஒன்றல்ல. பிறர் வாடப் பல செயல்கள் செய்து தன் காரியத்தை மட்டுமே கணித்துக் குறியாய் வாழ்ந்து போகும் தர்மமல்ல. வாடிப் பல மிக உழன்று, இல்லாததற்கெல்லாம், ஏங்கிக் கஷ்டப்பட்டுக் குமைந்து கவலைப்பட்டு வாழ்வை நரகமாக்கிக்கொள்ளும் முயற்சி யல்ல.

பின் எது வாழ்க்கைத் தர்மம்?

மனித எல்லைகளை மீறுவதில்தான் வாழ்க்கைத் தர்மம் அடங்கி இருக்கிறது. விரிவடையும் இப்பிரபஞ் சத்தின் நியதிக்கேற்ப ஆத்மா விரிவடைந்து, ஞானம் பெற்று பூரணத்துவம் பெறுவதில்தான் வாழ்க்கைத் தர்மம் அடங்கி இருக்கிறது. ஒன்றையொன்று தழுவி நிற்கும் இவ்வுலகில் நாம் நம்மை உயர்த்திக்கொள்வதில், வாழும் ஏனையோருக்குக் கைகொடுத்து அவர்களையும் உயர்த்து வதில்தான் வாழ்க்கைத் தர்மம் அடங்கி இருக்கிறது.

வாழ்க்கை— மேல்நோக்கி— உயர்நிலையினை நோக்கி மலையேறும் முயற்சி; இது ஒரு பரிணாம வளர்ச்சி, இதில் நாம் இருக்கிறோம்; நம்மைச் சுற்றி, நம் குடும்பம், தொழில், அடிப்படைத் தேவைகள் என்ற சூழ்நிலை இருக்கிறது. இதைத் தாண்டி சிந்திப்போமானால் நாம் ஏன் பிறந்தோம்,

நமக்கும் இப்பிரபஞ்சத்திற்குமுள்ள தொடர்பு என்ன என்ற கேள்விகளின் ஞானம் கொடுக்கும் தெளிவு இவ்வுலக வாழ்வை மேம்படுத்துகிறது.

வாழ்வின் காரணத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எந்த உண்மையில் இவ்வுலகம் இயங்குகிறது என்ற அறிவை நாம் பெறவேண்டும். பிறகு நாம் அதைப் பயிலவேண்டும்; நாம் கண்டுபிடித்த உண்மைகளை நாம் அப்பியசிக்க வாழ்வில் கடைப்பிடிக்க முயலவேண்டும்.

நமது முயற்சியில் நாம் தவறிப் போகலாம். பூரணமாக நாம் வெற்றி பெற்றிருக்க மாட்டோம். அது பெரிய விஷய மல்ல. "நமது முயற்சிகளின் வலிமையைத்தான் நாம் விரும்பும் முடிவுகளின் பலனாக நாம் கருதவேண்டும்" என்று எழுதுகிறார் தத்துவஞானி ஜேம்ஸ் ஆலன்.

வாழ்வை நடத்திச் செல்லும் தர்மநெறிகளை உணர்ந்து கொள்வது எளிதல்ல.

அதற்குத் தேவை: அறிவு, அனுபவம், (வயது) உலக ஞானம் என்ற இந்த மூன்றும். சுயமே சிந்திப்பதன் மூலமும் நமக்கு முன்னே வாழ்ந்தோர் விட்டுவிட்டுப் போயிருக்கும் ஞானமார்க்க நூல்களிலிருந்தும் நாம் அறிவைப் பெறலாம். நம் அனுபவம், பிறர் அனுபவம் நமக்குப் பலவற்றைக் கற்றுக் கொடுக்கின்றன. இதுவன்றி, வயதேற ஏற நமக்கு ஓர் 'உலகஞானம்' ஏற்படுகிறது. தனித் தனியாகத் தென்பட்ட பல பகுதிகளும் ஒன்றிணைந்து இயங்கும் பிரபஞ்சமாய்த் தோன்றுகிறது.

இவ்வுலகம் காரணகாரியத் தொடர்பு கொண்டிருக் கிறது. அப்படியெனில் நாம் வந்ததற்கும் ஒரு காரணம் இருக்க வேண்டும்.

அந்தக் காரணத்தைத்தான் ஒரு பிராமண இளைஞனும், கிறிஸ்துவ அம்மையாரும், தென்னாப்பிரிக்கா வாழ் இந்தியரும் உணர்ந்தார்கள்.

பிறருக்காகவும், ஊர் உலகத்திற்காகவும் வாழும்போது தான் உலகம் உயர்கிறது—நாமும் உயர்கிறோம். கிராமத்தில் ஆரம்பப் பள்ளிக்கூடம் மூலம் சேவை செய்வதானாலும் சரி, நாட்டு விடுதலைக்காக ஆங்கிலேயருக்கெதிராக மகாத்மா காந்தி போர்க்கொடி உயர்த்திய விஷயமானாலும் சரி, தன்மையில் இரண்டும் ஒன்றுதான். லட்சியத்தின் கனத்திற்கேற்ப பலன்கள் சிறிய அளவிலோ பெரிய அளவிலோ கிடைக்கின்றன.

எண்ணங்கள் காந்த சக்தி கொண்டவை. உயர் நிலைத் தேவைகளைச் சுற்றி உங்கள் எண்ணம் வியாபிக்கும் போது ஒத்த சக்திகளையும் பலன்களையும் அந்த எண்ணங்கள் உருவாக்குகின்றன.

வாழ்வின் உண்மைகளைப் புரிந்துகொண்டு உயர, நாம் நம் சொந்த வாழ்வை முன்னேற்றிக்கொள்ள வேண்டும்.

நம் எல்லோருக்கும் விஷயங்கள் புரிகிறது! "இது சாப்பிடலாம் இது சாப்பிடக்கூடாது, இந்த உணவைச் சாப்பிட்டால், வீண் சதை போடும்!" என்று தெரிகிறது. ஆனால் நெறி நம்மில் பலரிடம் இல்லை. அந்த நெறியை, (Discipline) கட்டுப்பாட்டை நாம் கொஞ்சம் கொஞ்சமாக வளர்த்துக்கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட வயதுக்குப்பின் வாழ்வை நாம் செக்கு மாட்டுப் பயணம்போல்— செய்தவைகளையே செய்து கொண்டு— நமது எண்ணப் பழக்கமே சரியானது என்ற நினைவில் வாழ்வை ஓட்டி முடித்துக்கொள்கிறோம்.

இதை நாம் மாற்றவேண்டும். நம் தேவை, நம் லட்சியம் இவற்றை முன்வைத்து – அவற்றை அடைய 'நாம் எப்படி நமது பழக்கங்களை மாற்றிக்கொள்ள வேண்டும், எப்படி எப்படிச் செயல்பட வேண்டும்' என்று சிந்தித்துத் திட்டமிட்டு நாம் மாறவேண்டும். கட்டுப்பாடு நெறிகள்– என்ற திட்டங்கள் மூலம்தான் நாம் நம் காரியத்தை அடைய முடியும். இது இரண்டாவது.

நம்மில் பலர் செயலில் இறங்குவதில்லை. லட்சியங் களைப் பற்றி நாம் ஆசைப்படுகிற அளவுக்கு, நம் ஆர்வம் இருக்கிற அளவுக்கு நாம் காரியம் செய்வதில்லை.

காரியம்–செயல்–ஒன்றுதான் பலனைக் கொடுக்கும். வெறும் விருப்பம் மட்டும் எதையும் செய்யாது. ஒன்றைத் தீர்மானித்து விட்டார்களானால் அமெரிக்கர்கள் செயல் படுகிறார்கள். நமது ஊரில் நாம் அதிகம் யோசிக்கப் பழக்கப்பட்டிருக்கிறோம். அதில் செயல்பட அல்ல.

கீழை நாட்டு கலாசார வேறுபாடுகளை ஆராய்ந்த ஒரு ஜப்பானியப் பேராசிரியர், "சீனர்கள் எதையும் நடைமுறைக் கேற்ப சிந்திக்கும் வழிமுறைகளைக் கடைப்பிடிப்பவர்கள் என்றும், இந்தியர்கள் தத்துவ ரீதியில் விசாரணை நடத்து பவர்கள் என்றும் சிந்திப்பதை ஓர் அறிவாக அதிகம் பயன்படுத்துபவர்கள்" என்றும் குறிப்பிடுகிறார்.

அறிவு, மனோபாவம், செயல்.

ஒரு விஷயத்தைப் பற்றிய அறிவு அதைப் பற்றிய பயத்தைப் போக்கி, நமக்கு ஒரு தொடர்பை ஏற்படுத்தி விஷயங்களை எளிதாக்குகிறது. ஆகவே வாழ்வின் தாத்பரியம் பற்றிய அறிவை நாம் முதலில் பெறவேண்டும்.

இரண்டாவது: நமது மனோபாவம்; ஒரு நெறி; அதாவது முடியும் என்ற ஓர் உற்சாகமான மனோநிலை.

மூன்றாவது: செயல், முயற்சி, காரியம் என்று ஈடு பட்டாலொழிய பலன் வராது. உயிரின் இயல்பு சதா செயல் படுவதுதான் என்று ஒரு குறுந்தொகைப் பாட்டு கூறுகிறது.

உயர் நெறிகளை வாழ்ந்து காட்டியவர்கள்தான் சங்கரர், முகம்மது, ஏசுபிரான், புத்தர், காந்தி என்ற பெரியோர்கள். இவர்கள் நமக்காக வாழ்ந்து காட்டிய முன்னோடிகள். இவர்களது சிந்தனையும், சொல்லும், செயலும்தான் உலகையும் நம்மையும் உயர்த்திச் செல் கின்றன. உயர் சிந்தனைக்கு– உயர்நெறிகளுக்கு அவர்கள் நமது முன்னோடிகள்.

அந்த தர்ம நெறிகளால் உயர்வோம், உயர்த்துவோம்.

எம்.எஸ். உதயமூர்த்தி

மக்கள் சக்தி இயக்கம்
17-A, சௌத் அவென்யு,
காமராஜ் நகர், திருவான்மியூர்,
சென்னை – 600 041.

வாழ்க்கைக் குறிப்பு

எம்.எஸ். உதயமூர்த்தி விளநகர் என்ற கிராமத்தில் மயிலாடுதுறை தாலுக்காவில், தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர். மயிலாடுதுறை உயர்நிலைப் பள்ளியில் படித்த பின் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் இளநிலை பட்டப்படிப்பும் முதுநிலை பட்டப் படிப்பும் பெற்றார். சென்னை பல்கலைக் கழகத்தில் தனது பாடமான வேதியியலில் மற்றோர் முதுநிலைப் பட்டம் பெற்றபின் மேற்படிப்புக்கு அமெரிக்கா சென்றார்.

அமெரிக்கா செல்லுமுன் குடந்தை அரசினர் கல்லூரி யிலும், கிண்டி பொறியியல் கல்லூரியிலும் (இன்றைய அண்ணா பல்கலைக் கழகத்திலும்) வேதியியல் (Chemistry) உதவிப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

அமெரிக்காவில் விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தில் மருத்துவ ரசாயனத்தில் டாக்டர் பட்டம் பெற்று ஒரு பத்தாண்டுகள் விஸ்கான்சிலுள்ள மவுண்ட் செனாரியோ கல்லூரியிலும், மின்னசோட்டா, ஐடகோ பல்கலைக்கழகங் களிலும் பேராசிரியராகப் பணியாற்றினார்.

பின், ஆசிரியத் துறையை விட்டு விலகி விஸ்கான்சினில் உணவு தயாரிக்கும் நிறுவனம் ஒன்றில் அதன் தலைமை நிர்வாகியாக நான்காண்டுகள் பணியாற்றினார். 1982இல் பார்க்கிளே கெமிகல்ஸ்(Barclay Chemicals) என்ற தனது சொந்த ரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்யும் நிறு வனத்தைத் துவங்கினார். அந்நிறுவனத்தைத் தனது குமாரரிடம் ஒப்படைத்துவிட்டு 1987இல் நிரந்தரமாக இந்தியா வந்தார். இன்று சென்னையில் வசிக்கிறார் அவர்.

சிறந்த ஆசிரியர் என்ற விருதும், 'புல்பிரைட்' அறிஞர் (FullBright Scholar) என்ற கௌரவமும், அமெரிக்காவில்

தொழில் துறையில் உள்ளவர்களில் 'யார் யார்' என்ற நூலில் அவரது பெயர் இடம் பெற்ற பெருமையும் அவருக்குண்டு.

தன் கட்டுரைகளின்மூலம், பேச்சின்மூலம், செயல்களின் மூலம் ஆக்கப்பணிகளைச் செய்து வருகிறார்; மக்களைத் தட்டி எழுப்பி வருகிறார்.

தனது அறிவுக்கும் திறமைக்கும் ஏற்ற ஒரு புதிய சமுதாயத்தைத் தமிழகம் பெறவேண்டும் என்று விரும்புகிறார் எம்.எஸ். உதயமூர்த்தி

எம்.எஸ். உதயமூர்த்தி ஒரு எழுத்தாளர்.

மனவியலைப் பற்றித் தொடர்ந்து, கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் தமிழ்ப் பத்திரிகைகளில் எழுதி வந்தவர், எழுதி வருபவர் – டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி. மனோதத்துவங்களை வாழ்க்கைக்கு எப்படிப் பயன்படுத்துவது என்பதைச் சுமார் 14 நூல்களில் வடித்துத் தந்திருக்கிறார் அவர்.

எம்.எஸ். உதயமூர்த்தியின் உந்துதல்கள் கன்னியாகுமரியிலிருந்து கிருஷ்ணகிரி வரை, வேதாரண்யத்திலிருந்து வால்பாறை வரை இளைஞர்களை, பெண்களை– படித்த மக்களை—ஒரு உத்வேகம் பெறச் செய்திருக்கிறது. சமீபத்தில் டைரக்டர் பாலசந்தர் 'உன்னால் முடியும் தம்பி' என்ற தலைப்பில் ஒரு திரைப்படத்தை வெளியிட்டிருக்கிறார். அப்படத்தின் கதாநாயகன் பெயர் உதயமூர்த்தி. இப்படி பாலசந்தரிலிருந்து பள்ளி இளைஞர்கள் வரை—அவரது எழுத்துக்கள் ஒரு பாதிப்பை—ஒரு உத்வேக உணர்வை—ஒரு நம்பிக்கையை—உருவாக்கி இருக்கின்றன; ஒரு அமைதியான மாற்றம் நாட்டில் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

எழுத்து என்னவெல்லாம் செய்யும்?

பொறுத்திருந்து பார்ப்போம்!

பொருளடக்கம்

இரண்டாவது பகுதி

தர்மத்தின் அடிச்சுவட்டில்...

தன்னம்பிக்கையும் லட்சியமும்...

வாழ்வின் ஜீவத்துடிப்பு இருக்கிறதே, அதன் ஆணிவேர் தன்னம்பிக்கைதான். தன்னம்பிக்கை உள்ள மனிதன் வாழ்க்கையின் கடைசி நிமிடம் வரை போராடுகிறான். ஒரு நிறைவோடு வாழ்கிறான்.

'இந்தக் காரியம் என்னால் முடியும்' 'இந்த நோயிலிருந்து நான் தப்பித்துக் கொள்வேன்' 'இந்த சங்கடங்களெல்லாம் என்னைப் பாதிக் காது', 'நான் என் லட்சியத்தை அடைந்தே தீருவேன்' என்கிற எண்ணமெல்லாம் தன்னம் பிக்கையின் ஆதாரத்தில் பிறந்தவை.

லட்சியம் நம்மால் முடியாத அளவுக்குப் பெரிதாக இருக்கும்போது நாம் நண்பர்களை, உறவினர்களை, கடவுளைத் துணைக்கழைத்துக் கொள்கிறோம். 'ஆண்டவன் என்னுடன் துணைக் கிருக்கிறான். ஆண்டவன் என் கட்சியில் இருக்கிறான்' என்பது நமது பலகீனமான மனித சக்திக்குப் பன்மடங்கு உரம் அளித்து நம் கைகளை உறுதிப்படுத்துகிறது. தன்னம்பிக்கை தான் மனிதனை வாழ்விக்கிறது.

நம்பிக்கை ஏற்படும்போது மனிதன் தன் லட்சியங்களுக்கேற்ப சாதனை புரிகிறான். அவனது லட்சியம், கிராம முன்னேற்றத்திற்காக ஒரு சங்கம் அமைப்பது என்றால் அதை அவன் அடைகிறான். அவன் லட்சியம் படிப்பது, வேலை பெறுவது, திருமணம் செய்து கொள்வது என்றால் அவற்றை அவனால் அடைவது சாத்தியமாகிறது. லட்சியம், 'நாட்டு விடுதலைப் புரட்சி' என்றால், அதற்கேற்ற சூழ்நிலைகளை நமது லட்சியம் அமைத்துக் கொடுக்கிறது.

லட்சியம் ஒரு மகத்தான சக்தி. நாட்டு மக்கள் ஒவ்வொருவரிடையேயும் அதே லட்சியம் துடிக்கும்போது நாட்டின் மொத்த சக்தி கூடுகிறது. அந்த ஐக்கிய சக்தி சாதிக்க முடியாதவற்றையெல்லாம் சாதிக்கிறது. ஆகவே தான் ஒரு நாட்டுத் தலைவனின் பொறுப்பு—நாட்டு மக்களை லட்சியத் தீயால் தொட்டு எழுப்பி, அனைவரையும் ஒரே நோக்கோடு கொண்டு செல்லும் திறன் தலைவனுக்கு எளிதாகிறது. அப்போது தலைவன் மகத்தான தலைவனாகிறான். அத்தகைய தலைவனுக்கு ஓர் கனவு ஓர் லட்சியம்—அதில் ஈடுபாடு (Vision) இருக்கிறது. ஒரு தலைவன் தன் மனதில் அந்த நாட்டு லட்சியத்தைப் படம் பிடிக்கும்போது — அப்படித் தான் கண்டதை மக்களிடை கூறி ஒரு விழிப்பை ஏற்படுத்தும் போது—நாடு ஜொலிக்கிறது.

தலைவனின் லட்சியம் நாட்டின் வளமான வாழ்வு என்றால், நாடு வளம் பெறுகிறது; மக்கள் வாழ்க்கை நிலை உயர்கிறது. நாட்டின் அந்நியப்

பிடி ஒழிந்து புரட்சியும் விடுதலையும் ஏற்பட்டால் நாடு சுதந்திர நாடாகிறது. சரித்திரத் தலைவர்கள் எல்லாம் அப்படித் தான் செயல் பட்டிருக்கிறார்கள். வெற்றிக்கு வழி தன்னம்பிக்கை— லட்சியம்.

1930 வாக்கில் அமெரிக்காவில் ஒரு பெரிய பொருளாதார மந்தம் ஏற்பட்டது. உற்பத்தியில்லை. பொருள் தட்டுப்பாடு, வேலை வாய்ப்பில்லை. நாடு அல்லலுற்றது. மக்கள் வழியறியாது திண்டாடினார்கள். அப்போது பிராங்களின் ரூஸ்வெல்ட் அரசியலில் புகுந்தார்.

"பயம்தான் நம்மைப் பயமுறுத்துகிறது. பயத்தை உதறி எறிவோம்!" என்று வீர கர்ஜனை செய்தார். புத்தி சாலித்தனமான இளைஞர்களைக் கூப்பிட்டுப் புதுத்திட்டங்கள் தீட்டச் சொன்னார். தொழில் துவங்க, உற்பத்தி அதிகரிக்க எல்லாவிதங்களிலும் பணம் வழங்கப் பட்டது. அரசாங்கம் கடன் கொடுத்தது. நான்காண்டுகளில் நாடு மறுவாழ்வு பெற்றது — மலர்ச்சி பெற்றது.

1850 பிரிட்டிஷாரின் கீழ் அமெரிக்கா ஒரு காலனியாய் வாழ்ந்த காலம். சில படித்தவர்கள், புத்திசாலிகள் வாஷிங்டனின் தலைமையின் கீழ் திரண்டார்கள். பிரிட்டிஷ் அரசாங்கத்தைத் தூக்கி எறிவோம் என்றார்கள். தூக்கி எறிந்தார்கள்— அந்தத் தூக்கி எறியும் செயல் பிரிட்டனிலிருந்து வந்த டீ பொட்டலங்களைக் கட்டுக் கட்டுகளாகக் கடலில் தூக்கி எறியும் ஒரு

அடையாளப் பணியில்— சிறு காரியத்தில் துவங்கியது. அமெரிக்கா விடுதலை பெற்றது.

“கடல் நீரை எடுத்து உப்பைக் காய்ச்சுவோம், உப்பு வரி கொடுக்கமாட்டோம்” என்று மகாத்மா காந்தி தன் மானத்துடன் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு எதிராகப் போராடினார். சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து மூட்டை கட்டிக்கொண்டு கிளம்பியது. இந்தியா விடுதலை பெற்றது.

பொருளாதார மந்தத்தைப் போக்குவோம் என்றார் ரூஸ்வெல்ட்— முடியும் என்ற தன்னம் பிக்கை.

அடிமை ஆட்சியை– மாற்றான் ஆட்சியை ஏற்றுக்கொள்ள முடியாது என்று முழங்கிக் கிளம்பினார்கள் வாஷிங்டனும், காந்தியும். நாடுகள் விடுதலை பெற்றன.

காரியம் சாதித்தது எது?

தன்னம்பிக்கை லட்சியம்.

தலைவர்கள் ‘சும்மா பதவியிலிருப்போம் அதுவே சுகம்’ என்று எண்ணும்போது; ‘அடடா! அகப்பட்டதைச் சுருட்டக் கிடைத்ததே வாய்ப்பு!’ என்று எண்ணும்போதும்; ‘நான் ஐந்தடி நாலங்குலம்தான் உயரம், எனக்குத் தொப்பை வேறு, என்னால் என்ன முடியும்?’ என்று எண்ணும்போதும், நாடு எங்கும் போவ தில்லை. நாடு நகர்கிறது; ஊர்கிறது. மக்கள்

தங்கள் சிந்தனையில் செயலில் நம்பிக்கை இழக்கிறார்கள். 'ஏதோ ஓடுகிறது' 'ஆண்டவன் படியளக்கிறான்' என்று நாடு போகிறது; மக்கள் சிரம ஜீவனம் நடத்துகிறார்கள்.

தன்னம்பிக்கை இல்லாத ஒரு தலைவனால் நாடே தேங்கி நிற்கிறது. லட்சியமில்லாத ஒரு தலைவனால் நாடே திசை தெரியாமல் சுவரில் முட்டிக்கொள்ளும் குருடனின் நிலையில் நிற்கிறது.

ஒரு நாட்டுக்குத் தலைவன், முன் மாதிரி, ஜனநாயக நாடுகளில் ஒரு நாட்டின் தலைவனை 'நாட்டின் முதல் குடிமகன்' என்பார்கள். அவன் மக்கள் பார்வையில் பார்வைபடும் இடத்தில், உயரத்தில் இருக்கிறான்', மக்கள் அவனைப் பார்க்கிறார்கள், கேட்கிறார்கள்.' தெளிவடைகிறார்கள். வீரம் பெறுகிறார்கள், அவன் காட்டும் பாதையில் நடக்கிறார்கள்.

தன்னம்பிக்கையும் சுதந்திர மனோபாவமும்

லட்சியமில்லாத தலைவனின் ஆட்சி 'அன்றாடங் காய்ச்சி' ஆட்சியாகத்தானிருக்கும். 'பிரச்சனை வரட்டும்; வரும்போது பார்த்துக் கொள்வோம்' என்று பிரச்சனைகளுக்காகக் காத்துக் கிடப்பவன் அவன். ஏனெனில் அவனுக் கென்று ஒரு தெளிவில்லை. நோக்கமில்லை. மேலே இருக்கும் தலைவன் காமத்திலும் போதை யிலும், மது—மாமிசம், மங்கையிலும் ஈடுபட்டுப் பொழுதைக் கழிப்பானானால், (அது அவன் சொந்த வாழ்க்கையாயிருந்தாலும்கூட). நாடும் அதே கதியில்தான் செல்லும்.

உதாரணம்; யாஹ்யாகான்—பாகிஸ்தானத்து முன்னாள் ஜனாதிபதி. நாட்டின் பிரபல பாடகி யைத் தன் அரண்மனைக்கு வரச்சொன்னாராம். யாஹ்யா கான் பாடகிக்கு 'கீதா' என்று பெயர். உள்ளே நுழையும் போது அரண்மனைக்குள் எளிதில் செல்ல முடியவில்லை. அத்தனை கெடு பிடி, அரண்மனையிலிருந்து திரும்பி வரும் போதோ ஏகப்பட்ட உபசாரம்.

"இவ்வளவு கெடுபிடி செய்தீர்களே நுழை வதற்கு" என்று அவர் காவல்காரர்களை அதட்

டிக் கேட்டபோது, காவல்காரர்கள் சொன்னார்கள்: "அம்மா! நீ போகும் போது வெறும் கீதாவாய் சென்றாய். திரும்பி வரும் போதோ தேசியகீதமாய் திரும்பி வந்தாய்!" என்றார்கள்.

யாஹ்யாகான் நாடாண்ட லட்சணம் எப்படியிருந்தது என்பதை யாரும் சொல்லத் தேவையில்லை. அவர் ஆட்சியில் பாகிஸ்தான் துண்டுபட்டது.

நாட்டுச் சரிவுக்கு முன் ரோம் சாம்ராஜ்யம் காமப் பாதையிலும், கள் போதையிலும்தான் காலத்தைக் கழித்து வந்தது. ஜார் ஆண்ட ரஷ்யா அப்படியே இன்பக் கேளிக்கைகளில் தன்னை மறந்து கம்யூனிஸ்ட் புரட்சிக்கு வித்திட்டது.

அதேபோல் திருடுபவர்கள், ஏமாற்றுக்காரர்கள், அகப்பட்டதைச் சுருட்டுபவர்கள் ஆட்சித் தலைமையில் இருந்தால் நாட்டின் கடைசித் தொண்டன் கேட்பான்: "பத்து சதம் லஞ்சம் வாங்கிக்கொள்வதில் என்ன தவறு?" என்று! பத்து சதம் லஞ்சம் பெறுவதும், நூறு சதம் லஞ்சம் பெறுவதும் ஒரே அயோக்கியத்தனம் தான்.

தெருவில் இருக்கும் ஒரு வீட்டைப் பார்க்கும் போது குறிப்பாக நம் கண்கள் அவ்வீட்டை நோக்கினாலும் பின்புலமான தோட்டங்களும், அடுத்தடுத்த வீடுகளும், வானமும் தெரியாமல் இருப்பதில்லை. அதுபோலத்தான் தலைவனின் செயல்கள். தலைவனின் பின்புலம் நாட்டின் விதியாகச் செயல்படுகிறது. அவனது பல கீனங்கள் நாட்டைப் பலகீனப்படுத்துகின்றன.

அவனது தன்னம்பிக்கை இன்மை நாட்டின் தேக்கமாகப் பிரதிபலிக்கிறது. அவனது லட்சிய மின்மை நாட்டின் இருண்ட யுகமாக முடிகிறது.

அதே கண்ணோட்டத்தில் மகாத்மா காந்தி யைக் கொஞ்சம் எண்ணிப்பாருங்கள். 'நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்த நாட்டின் தந்தை அவர் என்பதுடன், நம் கண்முன் அவரது எளிமை வருகிறது. உண்மை வருகிறது. அவரது வலிமை, ஆத்மிக ஒளி எல்லாம் பின்புலமாய் நமக்குத் தெரிகின்றன.

ஒரு காந்தி என்ற தனிமனிதரது, தலைவரது, நிழல் நாட்டில் எப்படிப் படிந்தது பாருங்கள்.

நாடு பூராவிலும் ஒரு தியாக உணர்வு, ஓர் ஒழுக்க உணர்வு, ஒரு நேர்மை உணர்வு, ஓர் ஆத்மிக உணர்வு பரவி நின்றது. அந்த உயர் பண்புகள் நாட்டு மக்களின் வாழ்க்கையை, ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் தொட்டன.

ஆகவேதான் தன்னம்பிக்கையையும் லட்சிய மும் மட்டும் போதாது; கற்பனையும் துணிச்சலும் மட்டும் போதாது; படிப்பும் திறமையும் மட்டும் போதாது; மனிதனுக்கு 'கேரக்டர்' வேண்டும். 'கேரக்டர்' இல்லாத கவிஞன், 'கேரக்டர்' இல்லாத தலைவன், 'கேரக்டர்' இல்லாத ஆசிரியன், 'கேரக்டர்' இல்லாத மதபோதகன் —

இவர்கள் எல்லாம் தன்னையும், மக்களையும், நாட்டையும் ஏமாற்றுபவர்கள் ஆவார்கள் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

'அரசன் எவ்வழி; அவ்வழி மக்கள்' என்பது பழ மொழி. நாட்டுத் தலைவனுக்கு உயர் பண்புகள், ஒழுக்க நெறிகள் அவசியம். அது இல்லாத போது அந்தக் குறை நாட்டின் நிழலாக நாடுமீது விழுகிறது. ஒரு நாட்டுத் தலைவனுக்கு தன்னம்பிக்கையும் லட்சியமும் தேவை. தன்னம்பிக்கை தலைவனுக்கில்லாதபோது நாட்டு மக்களும் தன்னம்பிக்கை இழக்கிறார்கள்.

மற்றோர் வழியிலும் ஒரு நாடு தன்னம்பிக்கை பெற்று, லட்சியம் பெற்று முன்னேற முடியும். ஒரு நாட்டில் தன்னம்பிக்கையும் லட்சியமும் கொண்ட தனிமனிதர்கள் நிறைய இருக்கும்போது. நாடு தலைவனை லட்சியம் செய்வதில்லை, தலைவனையும் மீறி நாடு முன்னேறுகிறது.

இன்றைய அமெரிக்காவை எடுத்துக் கொண்டால், நாட்டில் அப்படி ஒரு நிலை நிலவுவதைச் சொல்லவேண்டும். எந்த நாட்டில் அடிப்படைத் தேவைகள் வெகுவாகப் பூர்த்தி செய்யப்பட்டு, சுதந்திர மனப்பான்மை நிலவுகிறதோ அந்த நாட்டில் மக்களின் சுதந்திரத் தன்மை வாழ்வின் ஒவ்வொரு துறையையும் தொடுகிறது. அந்தச் சுதந்திர மனோபாவம், ஓர் ஆசிரியனை சிறந்த ஆசிரியனாகும் லட்சியத்தில் உந்தித் தள்ளுகிறது. அந்தச் சுதந்திர மனோபாவம், தொழில் அதிபர்கள் புதிய பொருளை— அதிகம் உற்பத்தியைச் சொந்தச் சவாலாக எடுத்துக் கொள்ளும்படி செய்கிறது.

பொறியியல் துறை, வியாபாரம், மருத்துவம், போக்கு வரத்து, ஆராய்ச்சி என்று ஒவ்வொரு துறையிலும் மனிதன் அதி உச்சத்தை எட்டிப் பிடிக்க அப்போது ஆசைப்படுகிறான். இதனால் தலைவனும், தலைமைப் பதவியும் முக்கியத்துவம் இழக்கின்றன.

“இந்தத் தலைவன் எப்படி என்னை விடச் சிறந்தவன்?” என்ற எண்ணம் மக்களிடை ஏற்படும்போது சாதனையில்லாத தலைவனை நாடு மதிப்பதில்லை. தலைவன்பாடு திண்டாட்ட மாகிறது. அப்படியொரு சூழ்நிலை இன்று அமெரிக்காவில்; அப்படியொரு சூழ்நிலை ஜிம்மி கார்ட்டருக்கு. ஜிம்மி கார்ட்டர் இதனால் மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார் என்று கணிக்கிறார்கள்.

அமெரிக்காவில் மக்கள் நிலை உயர்ந்து விட்டது; தரம் உயர்ந்துவிட்டது.

தன்னை மதியுங்கள்...

தன்னம்பிக்கை உள்ளிருந்து புறப்படும் ஒரு மாபெரும் சக்தி. அது, உள்ளவர்களை அவர்கள் பேச்சின் மூலம், செயலின் மூலம், நடையுடை பாவனைகள் மூலம் உடனே அறிந்து கொண்டு விடலாம்.

தன்னம்பிக்கை இல்லாதவர்களும் அதே போலத்தான். எல்லாவற்றிலும் ஒரு தயக்கம். பேச்சில் தயக்கம்: நடை உடை பாவனைகளில் ஒரு தயக்கம்; பயம். ஒரு நகைச்சுவை சம்ப வத்தை விவரிக்கும்போதுகூட அவர்கள் முகம் அலைபாயும். பிறர் என்ன நினைப்பார்களோ, சிரிக்காமலிருந்து விடுவார்களோ என்ற பயம் அங்கே தெரியும். நம் ஹாஸ்யத்தைக் கேட்டுப் பிறர் சிரிக்காமல் இருந்துவிட்டால் என்ன குடி முழுகிப் போய்விட்டது...?

கூட்டத்திலிருந்து சற்று வேறுபட்ட சட்டை போட்டுக்கொண்டு போக இவர்கள் தயங்கு கிறார்கள். எனக்குத் தெரிந்த ஒருவர், தான் வாங்கியிருக்கும் புதுச் சட்டையை எடுத்தவுட னேயே தண்ணீரில் நனைத்து அதை ஒரு பழகிய சட்டையாக்கிய பின்தான் அணிந்து கொள்வார்.

புதிய சட்டை போட்டுக்கொண்டு போனால் பிறர் கவனித்து விடுவார்களாம்; எல்லோரும் இவரைப் பார்ப்பார்களாம்; இவர் போட்டிருக் கிற புதுச் சட்டையைப் பற்றியே பேசிக் கொண்டு விடுவார்களாம். தன்னை அழித்துக் கொள்ளும் ஒரு கேவலம் இது. புதுச்சட்டை பற்றி யாராவது கேட்டால் அதைப் பற்றி பெருமை யாகக் கூற வேண்டியதுதானே...? ஏன் அதுபற்றி ஒளித்து மறைத்து அவமானப்பட வேண்டும்?

மனோதத்துவ நிபுணர்கள் கேட்கிறார்கள்.

"சபையில் நீங்கள் கடைசி பெஞ்சில் போய் யாரும் அறியாமல் உட்கார்ந்துவிட்டு வர வேண்டும் என்றால், யாரும் உங்களைக் கண்டு கொள்ளப் போவதில்லை. 'இது எனக்கு அதிகம் தெரியாது' என்று ஆரம்பித்தீர்களானால், நீங்கள் அடக்கத்திற்காக அதைக் கூறினாலும் உலகம் உங்களுக்கு ஒன்றும் தெரியாது என்றே எடுத்துக் கொள்ளும். நீங்கள் உங்களை எப்படி மதிப்புப் போடுகிறீர்களோ அது போலத்தான் உங்களை மதிக்கும். இது உலக இயல்பு" என்று.

"நான் யாருக்கும் தெரியாமல் போவேன்; வாழ்வேன்: எனக்கு ஒன்றும் தெரியாது" என்றால் நீங்கள் முன்னுக்கு வருவதைப்பற்றி ஆசைப்படக்கூடாது. மனிதன் தன்னையே சிறுமைப்படுத்தி வாழும் அவல வாழ்க்கை இருக் கிறதே அதற்கு எல்லையே கிடையாது.

சமீபத்தில், 'ஒரு மந்திரத்தால் மாங்காய் வர வழைக்கும் மகானுபாவர்' உலகிற்கு அறிவுரை வழங்கியிருந்தார்.

"கடவுளிடம் உன்னை ஒப்படை. அந்த நினைவில் உன்னைச் சிறுமைப்படுத்திக் கொள்" என்கிறார் அவர்.

கடவுள் என்பது எத்தகைய பெரிய தத்துவம்! கடவுள் தன்மை நம்முள் எல்லோரிடமும் இருக்கிறது. அத்தகைய ஓர் ஆத்மக் கோயிலை, ஆத்ம பூரணனை நாம் சிறுமைப்படுத்துவதா? நாம் ஆண்டவனை நண்பனாக, சேவகனாக, தாயாக, காதலியாகக் கண்டு கலக்க வேண்டாமா— பாரதியார் கண்டது போல.

பின் அவர், ஏன் "சிறுமைப் படுத்திக்கொள்" என்கிறார்? எல்லாம் நம் அடிமைப் புத்திதான் காரணம். நமது இந்து சமயத் தத்துவம்—ஆத்மா பரமாத்மாவுடன் கலக்கிறது — நாமே முடிவில் கடவுள் தன்னை பெறுகிறோம் என்பதாகும். இப்படி ஒரு கடவுள் தன்மை பெற்ற ஆத்மாவை சிறுமைப்படுத்திக்கொள்வது நமது அடிமைப் புத்தியையே காட்டுகிறது.

நமது செயல்கள் பல, நமது பழக்க வழக்கங்களால் ஆளப்படுகின்றன. பல செயல்கள் நமது சூழ்நிலையால் ஆளப்படுகின்றன. பரம்பரையாக வந்திருக்கும் பழக்கம் என்பதற்காக நாம் அதை அப்படியே அனுசரிப்பது முட்டாள்தனம். பகுத்தறிவுவாதிகள் இதைத்தான் சொன்னார்கள்; இப்படித்தான் ஆரம்பித்தார்கள் நம் நாட்டில். (Reason not radition) 'பழக்கத்தை உதறுங்கள்; காரணத்தை ஆராயுங்கள்' என்ற அவர்களது முழக்கம் இன்று நம் நினைவில்.

பெரியாரைப் பற்றி மணக்கப் பேசும் சுயமரியாதைவாதிகளே, மூடத்தனத்தின் முதல்

முடிச்சுக்களாய் இன்று சுயமரியாதை இழந்து நிற்கின்றனர்; அறிந்து சுயமரியாதையைப் பறி கொடுக்கின்றனர். என்னே பேதைமை!

பாரம்பரியப் பழக்க வழக்கங்களிலிருந்து விடு பட நமக்குத் துணிவு வேண்டும்; தெளிந்த சிந்தனை வேண்டும். அதெல்லாம் நிறையப் பெரியாருக்கு இருந்தது.

நம்மைச் சுற்றியிருக்கும் உலகம் சதா மாறிக் கொண்டு இருக்கிறது. நாம் வாழும் வாழ்வு நமது முன்னோர் வாழ்ந்த போல இல்லை இன்று. மாறுதல்தான் பரிணாம வளர்ச்சியின் வித்து அதை நாம் உணரவேண்டும். ஆகவே, எப்போதும்போல் நாம் காரியங்களைச் செய்து கொண்டிருக்க முடியாது. 'வழக்கத்திற்கு மாறு பட்டு நடப்பதால், எனக்கோ, பிறருக்கோ, சமூகத்திற்கோ தீமை உண்டா' என்று நாம் சிந்திக்கவேண்டும். நமக்கு மகிழ்ச்சி தரும்போது, பிறருக்கும் சமூகத்திற்கும் தீங்கு தராதபோது நாம் மாறுபட்ட வழக்கத்தை, நடைமுறையை அனுசரிப்பதில் தவறில்லை. நாம் நமக்காக வாழ வேண்டும் முதலில். நம்மை மதிக்கவேண்டும். இல்லாவிட்டால் சூழ்ந்திருக்கும் மக்கள் கூட்டம் —அடுத்த வீட்டுக்காரர், எதிர்வீட்டுக்காரர், உங்கள் நண்பர், ஆசிரியர், அரசியல்வாதி உங்கள் வாழ்க்கையை நிர்ணயிக்க விட்டுவிடுவீர்கள்.

புதிதாக மீசை வைத்துக்கொண்டவர்களைப் பார்த்து, "என்ன புதிய வேஷம்" என்று கேட்பது நம் மரபு. அப்படி ஒருசமயம் பிறர் கிண்டலும்

கேலியும் பேசியதும், சுயமதிப்புள்ள ஒருவர் சீறினார்.

“மீசையில்லாத ஆண்கள், ஆண்மை குறைந்த வர்கள்” என்று தற்காப்புக்காக ஒரு போடு போட்டார்!

இன்னொருவர் அதே கிண்டல் பாணியில், “எப்படி வைத்துக்கொள்ள வேண்டும் என்று பெரியவர்கள் சொல்கிறீர்களோ, அப்படியே வைத்துக் கொள்கிறேன்” என்று பதிலுக்கு நையாண்டி செய்தார். பாரதியாருக்குக் கோபமே வந்து விட்டது.

எட்டயபுரம் மன்னர், பாரதி மீசை வைத்தி ருப்பதை ரசிக்கவில்லை. அதுபற்றி பாரதியின் சிறிய தந்தையிடம் ‘மீசையை எடுக்குமாறும், எடுக்காவிட்டால் மாதந்தோறும் வழங்கும் மான்யப் பணம் நிறுத்தப்படும்’ என்றும் சொன்னார்.

பாரதிக்கு வந்தது கோபம். சென்றார் மன்னரிடம், “ஐயா! இத்தனை நாள் எனக்களித்த மான்யம் எனது கவித்திறமைக்கு என்று எண்ணி யிருந்தேன். இன்றுதான் அது மீசைக்காக என்பதை அறிந்தேன், அது மீசைக்காக என்றால் அந்தக் காசு வேண்டாம்!” என்றார்.

பாரதியாரை இன்றுவரை பார்க்கிறேன். அது வளர்ந்து பெரிய கொம்பு மீசையாக, வீரத்தை வெளியிடும் சின்னமாக—பார்ப்பவரின் உள்ளத்தி லெல்லாம் வீரத்தை ஊட்டும் மகா சக்தியாக அது கம்பீரமாக நிற்கிறது.

பூமியில் கால்பட சிந்தியுங்கள்...

"தன்னம்பிக்கை பெற பயத்திலிருந்து விடுபட, நாம் ஏதாவது காரியத்தில் ஈடுபட வேண்டும்; மனத்தை வேறு விஷயங்களில் செலுத்த முயலவேண்டும்" என்று தெரிவிக்கிறது லண்டன் பல்கலைக்கழக கல்லூரியில் நடத்திய ஆராய்ச்சியின் முடிவு.

எழுதுங்கள், பாடுங்கள், காலாற நடந்து செல்லுங்கள். ஒரு நான்கு தெருவைச் சுற்றி வேகமாக ஓடி வாருங்கள். ஊர்க் குளத்திலோ ஆற்றிலோ நீச்சலடியுங்கள். வீட்டில் கொல்லை இருக்குமானால் கொல்லையைக் கொத்துங்கள். பாத்தி கட்டுங்கள். செடி பயிரிடுங்கள்.

செய்யும் எந்தக் காரியமும் மனத்தைப் பிரச்சினையிலிருந்து அப்புறப்படுத்துவது மட்டுமல்ல; காரியம் செய்து களைத்த உடல் ஓர் அமைதியான ஓய்வை நிம்மதியை அனுபவிக்கிறது. கெட்ட காற்றை அப்புறப்படுத்துவது போல, தளர்ந்த எண்ணங்களை அப்புறப்படுத்துகிறோம். காரியங்களைச் செய்து முடிக்கும் போது மனம் ஒரு சாதனையில் திளைக்கிறது. இது உடலுக்கும் உள்ளத்திற்கும் நல்லது.

தன்னம்பிக்கையின்மை என்பது சில சமயம் சங்கிலித் தொடர்போல் ஒன்றிலிருந்து ஒன்றாக

வரும் எண்ணமாகும். தன்னம்பிக்கை இல்லாதவர்கள் பெரும்பாலும் தான் இருக்கிற சூழ்நிலையைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். அல்லது புரிந்துகொள்ள மறுப்பார்கள். நாம் இருக்கின்ற சூழ்நிலை, நமது சக்தி, நம்மால் என்ன முடியும் என்பதை எல்லாம் பற்றி சரியான தெளிவு இல்லாத போது நாம் எடுக்கிற முடிவுகள் தவறாகப் போகின்றன. அப்போது நமது முடிவுகள் நமது ஆசைகளால் நிர்ணயிக்கப் படுகின்றன. நமது முடிவுகள் நடைமுறை உண்மைகளிலிருந்து பெறப்படுவது அல்ல. நோக்கே கோணலாக இருக்கும்போது நமது குறி எங்கே சரியாக இருக்கும்...?

எனது உறவினரும் அவர்கள் பெண்ணும், தங்களது பொருளாதாரநிலையை அறியாது, எங்கு பணக்கார வீட்டுப் பையன் கிடைப்பான் என்று வரன் பார்த்துக் கொண்டிருந்தனர். பயன்... ஆண்டுகள் ஓடின. பெண் கிழவியாகிப் போனாள். அதுதான் கதை! நம் நிலைமைக் கேற்ப சாத்தியமாகும் விஷயங்களை நாம் மேற் கொள்வதன் மூலம் நம் சாதனை எளிதாகிறது. மாறாக, நம் நிலைமைக்குச் சம்பந்தப்படாத ஒன்றை நாம் அவாவுவது 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட' கதைதான்!

பலர் நடைமுறை உலகில் வாழ்வது கஷ்டமாயிருக்கும்போது அதை மறக்க முயல்கிறார்கள். கற்பனை உலகில் வாழத் துவங்குகிறார்கள். கற்பனை உலகில் வாழ்வது தவறல்ல. ஆகாயத்தில் கோட்டை கட்டு. அதைரியப்படாதே.

அந்தக் கோட்டைக்கும் கீழ் பூமியில் பலமான அஸ்திவாரத்தைக் கட்டி முடி என்றுதான் சொல்கிறேன்' என்றார் ஒரு தத்துவ ஞானி.

நம் நிலைமை என்ன, நம் குடும்ப நிலை என்ன, நம் லட்சியம் என்ன? அது சாதிக்கக் கூடிய ஒன்றா...? அதற்கு வேண்டிய அறிவும், திறமையும், பயிற்சியும் பக்கபலமும் இருக்கிறதா என்று அறிவுபூர்வமாக காலை, பூமியில் வைத்து — நாம் சிந்திக்க வேண்டும். "துருப்புகளை நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்திவிட்டால் போரில் வெற்றி பெற, துப்பாக்கியைத் தூக்கவும் வேண்டுமா?" என்பாராம் மவுண்ட் பேட்டன்.

பெரிய விஷயங்களைப் பற்றி ஆசைப்படுவது தவறல்ல. ஆனால் அதை அடைவதற்கு வேண்டிய சக்தியை, திறமையை, வலிமையை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும். அது இல்லாமல் வெறும் ஆசையை மட்டும் வளர்த்துக் கொண்டோமானால் நாம் ஏமாற்றத் தைத்தான் பெறுவோம். அது பெரிய மன அதிர்ச்சியில் தான் போய் முடியும்.

இதைத்தான் அழகாகக் கூறுகிறார் வள்ளுவர்: "வினைவலியும், தன்வலியும், மாற்றான் வலியும், துணை வலியும் தூக்கி செயல்' என்று. செயலின் தன்மையை நன்கு ஆராய்வதோடு, நம்மால் முடியுமா, மாற்றானின் வலிமை என்ன, நமக்குப் பக்கத் துணை என்ன என்று ஆராய்ந்து செயல் பட வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

பெரிய விஷயங்களைச் செய்வதற்கு முன் அதற்கு முன்படியில் நாம் எல்லாத் தகுதியும்

பெற்று, மேலே போகும் முனைப்புடன் நின்று கொண்டிருக்க வேண்டும். சந்திர மண்டலத்திற்கு மனிதனை அனுப்பிய திட்டத்தைத் தயாரித்த வான்பிரான், முதல் நாள் ஆசைப்பட்டு மறுநாள் அதைச் செய்து முடித்துவிடவில்லை. வான் பிரான் பலகாலம் ஜெர்மனியில் ராக்கெட் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். ராக்கெட்டு களை விண்வெளியில் விடும்போதுதான் சந்திர மண்டலம்வரை ஏன் விடக்கூடாது? என்ற எண்ணம் பிறந்தது. உடனே அதன் சாத்தியக் கூறுகளை ஆராய முனைந்தார்.

அதேபோல அணுகுண்டு தயாரிக்கலாம் என்று செய்து காட்டிய ஓப்பன ஹீமர் பலகாலம் அணுசக்தி பற்றியும், அணுசக்தியில் நிகழ்ந்து வந்த ஆராய்ச்சிகள் பற்றியும் தெரிந்து வைத்து அதில் ஈடுபட்டிருந்தார்.

இதை உணராது, பலர், “மந்திரத்தால் மாங்காய் விழும்; ஆசைப்பட்டால் போதும்” என்று நம்பி தங்கள் வாழ்நாளை வீணாக ஆக்கு கின்றனர். இவர்களுக்கேற்படும் தோல்வி இவர் களது தன்னம்பிக்கையையே ஒடித்துவிடுகிறது. உலக சமுதாயம் அனைத்தையும் ஒத்திட்டுப் பார்த்தால் ‘நடைமுறை உலகில் வாழ்பவர்கள், எது செய்ய முடியும் என்பதில் பூமியில் கால் பட்டு நடப்பவர்கள் சீனர்கள்தான்’ என்று சமுதாய இயல் பேராசிரியர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். ஆகவே, “நாட்டை விஞ்ஞானத் தொழில் உலகிற்கு இட்டுச் செல்ல வேண்டும்” என இப்போதைய புதிய சீனத் தலைவர்கள்

கூறும்போதும், ரஷ்ய தலைவர்களுக்குக் கவலை ஏற்படுகிறதாம். கடந்த ஐம்பதாண்டுகளில் ரஷ்யா சாதிக்க முடியாத தொழில் முன்னேற்றத்தை சீனர்கள் வெகு குறைந்த காலத்தில் செய்து விடுவார்கள், ரஷ்யாவை விட முன்னேறி விடுவார்கள் என்று உலகம் நம்புகிறது.

இத்துடன் கடந்த 30 ஆண்டு காலமாக, "உண்மையான சீனா தாய்வான் சீனாதான்" என்ற சொல்லிக் கொண்டு கம்யூனிஸ்டு சீனாவை அங்கீகரிக்காது; கம்யூனிஸ்டு சீனா என்ற ஒன்றில்லை என்று கற்பனையில் வாழ்ந்து வந்த அமெரிக்க சமுதாயத்தை எண்ணிப் பாருங்கள். அதேபோல தென் வியட்நாமைவிட வியட்நாம் கம்யூனிஸ்டுகள் ஆட்கொண்டுவிட்டால் உலக சுதந்திரமே சரிந்துவிடும் என்று எண்ணி அங்கு தன் மக்களையும், டாலரையும் பறிகொடுத்த அமெரிக்கர்களை மீண்டும் எண்ணிப் பாருங்கள்.

மிகச் சின்ன விஷயம். அமெரிக்கர்களுக்கு நடைமுறை உலகைப் பற்றிய தெளிவில்லை; உண்மையான— சரியான நோக்கில்லை.

நெருக்கடி நிலையை இந்திராகாந்தி கொண்டு வந்து நாட்டில் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறித்ததும் என்ன நேர்ந்தது? நாட்டில் நடக்கும் உண்மையான செய்திகள்— நாட்டு நிலவரம்— தெரிய வாய்ப்பின்றிப் போய்விட்டது. அதுவே அவர் சரிவுக்குக் காரணமாய் ஆகி விட்டது. இதெல்லாம் மனித சமுதாயம் என்ற பெரிய படுதாவில் நிகழும் சம்பவங்கள்.

தனிமனித வாழ்க்கையிலும் அதேதான். உள்ளூர் சினிமாக் கொட்டகையில்— கிராமத்தில் சினிமா பார்க்கும் இளைஞன் அதில் நடிக்கும் நடிகையைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று கனவு காண்கிறான். வேலைக்கு யாரைத் தேடினால் நடக்கும் என்று ஆசைப் படும் இளைஞன், அமைச்சரது மச்சினி படிக்கும் கல்லூரியில் வேலை பார்க்கும் ஒரு பியூன் தனக்கு உதவி செய்யக்கூடும் என்று நம்புகிறான். நமது ஊர் புரோகிதர்கள் புஷ்பவிமானம் பற்றியும் பிரம்மாஸ்திரம் பற்றியும் பேசுகிறார்கள்.

உலக சமுதாயத்தில், தமிழ்நாட்டைப்போல் தன்னம்பிக்கை அற்று பிறர் கையை எதிர் பார்க்கும் குணமும், நடைமுறை நிலவரங்களை உணராது, வெறும் ஆசையிலேயே கோட்டை கட்டும் உலக ஞானம் அற்றவர்களும் வேறு எங்காது இருப்பார்களா என்றால், தயங்காமல் “இல்லை”, “இருக்காது”, “இருக்க முடியாது” என்றே சொல்ல வேண்டி இருக்கும்.

உங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

தன்னம்பிக்கை இல்லாதவர்கள் தன்னை நம்ப மாட்டார்கள். அதேபோல் பிறரையும் நம்ப மாட்டார்கள். கட்டிய மனைவியை நம்ப மாட்டார்கள். எதையும் சம்சயக் கண்கொண்டு பார்ப்பார்கள். அவர்கள் உலகை நம்பாதவர்கள். அவர்களுக்கு சதா நம்பிக்கை கொடுத்து, தைரிய மூட்டிக்கொண்டு வாழும் மனைவியர் பாடு சற்றுக் கஷ்டமானதுதான். அதைப் போலவே எதற்கும் கணவனை நம்பாமல் எதற்கெடுத் தாலும் விசிக்கும் மனைவியைப் பெற்ற கணவன் பாடும் பொறாமைப்படக் கூடிய ஒன்றல்ல. வாழ்க்கை பரஸ்பர நம்பிக்கையில் வளர்வது.

தன்னம்பிக்கை இல்லாதவர்கள் பிறரை சார்ந்து வாழ ஆசைப்படுவார்கள். தங்கள் பொறுப்பை, கவலை களை யார் தலையிலாவது சுமத்தி விடுவார்கள் இவர்கள். சிறு குழந்தை போல எதிலும் சந்தேகம் பிறக்கும் தன்னம் பிக்கையில்லாதவர்களுக்கு.

தன்னம்பிக்கை பலருக்குக் காலப்போக்கில் ஏற்படும். பெற்றோரது பாதுகாப்பில், அரவணைப் பில் வளர்ந்த சிறுவன் இளைஞனாகி திருமணம்

செய்துகொள்கிறான் என்றால். அப்போதும் அவன் தனித்து நிற்பதில்லை. ஒரு குழந்தை பிறந்து அது பயந்து அலறும்போதுதான் ஓர் இளைஞன் தந்தையாகிறான். "பயப்படாதே இதெல்லாம் வெறும் பூச்சாண்டிதான்!" என்று அவனே தைரியம் சொல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. குழந்தை வளரவளர அது பல சூழ் நிலைகளையும் இடர்ப்பாடுகளையும் சந்திக்கும் போது தந்தைக்கும் தாய்க்கும் குழந்தைக்கு ஊக்க மூட்ட, தைரியமூட்ட வேண்டிய அவசியம் அதிகம் ஏற்படுகிறது. இதன் மூலம்—இளைஞர் கள் பெரியவர்கள் போல் நடந்துகொள்வதன் மூலம் பெரியவர்களாகிறார்கள். வாழ்க்கையில் இப்படி ஒரு விளையாட்டு மூலம் நாம் வளர் கிறோம். இதை உணரும் நாம், எப்படி நாம் ஆக விரும்புகிறோமோ அதுபோல, சிலமுறை 'பாவனை' செய்வதன் மூலமும் மனத்தில் அப்படிச் சில ஒத்திகைகள் பார்ப்பதன் மூலமும் நாம் நிஜமான தன்னம்பிக்கையைப் பெறமுடியும்.

ஒரு இளநடிகை கூறுகிறார்: "நானோ நேற்று வரை கான்வெண்டில் படித்த பெண். ஏதோ ஒரு சினிமாவில் நடித்ததும் எனக்குப் பெரிய புகழ் வந்தது. பிரபல டைரக்டரும் புகழ்பெற்ற நடிகர் களும் என்னைப் பாராட்டுவதையும் உபசரிப்ப தையும் என்னால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. மன அளவில் நான் அம்மாவுக்குப் பின்னால் ஒளியும் கான்வெண்ட் பெண்தான்! இப்படிப் பிறர் என்னை உயர்த்தி 'ஆகா ஓகோ' என்னும் போது நான் ஒரு பிரபல நடிகை போல

மனத்தில் எண்ணிக்கொண்டு பாசாங்கு செய்வேன். இப்படி ஒரு வருஷம் செய்தேன் நான் வளர...''

குழந்தை நம்மை நம்பி நம்மிடம் வந்து தஞ்சம் அடையும்போது நாம் எங்கு ஓடுவது? ஒரு தீவில் கப்பல் உடைந்து ஒரு பெரிய பணக் காரக் குடும்பம், அந்தத் தீவில் அகப்பட்டுக் கொண்டபோது, அங்கிருந்த சமையல்காரன் தான் எல்லோருக்கும் தைரியமூட்டிக் காரியம் செய்யச் சொல்லி ஒரு 'தலைவனாக' நடந்து கொண்டான் என்று ஒருகதை இருக்கிறது.

நாம் பிறருக்குத் தைரியமூட்ட முற்படும் போது, நமக்கு தைரியம் பிறக்கிறது, நம்பிக்கையும் தைரியமும் கொடுப்பதனால் குறைவதல்ல. கொடுக்கக் கொடுக்க நம்மிடம் கூடிப்பெருகும் பொருள் அது. அரசியல் கூட்டங்களில் ஒரு மூன்றாந்தரத் தலைவன் மற்றொரு கட்சிக் காரனைத் தாக்குவதையும் நகைப்பதையும் நீங்கள் கண்டிருக்கக்கூடும். அதிலிருக்கும் மனத் தத்துவம். பிறரைப் பற்றிக் கேவலமாகப் பேசும் போது ஏதோ நாம் அவனைவிட உயர்ந்தவன் என்ற இறுமாப்பு நமக்கு எழுகிறது. குழந்தைக்குத் தைரியம் கொடுக்கும்போது நாம் பெறும் தைரியம் போல.

ஆகவே, எங்கெல்லாம் தேவையோ அங்கெல் லாம் ஒரு வார்த்தை சொல்லுங்கள்; ஒரு தைரியம் கொடுங்கள்; பிறரது தன்னம்பிக்கையை வளருங்கள். அவை உங்களையே வளர்ப்பதை உணர்வீர்கள்.

தன்னம்பிக்கை இல்லாதவர்கள், கொஞ்சம் பலகீனமானவர்கள். அவர்கள் பிறரிடம் யோசனை கேட்கும் போது பிறரிடம் சர்வ ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும். "யோசனைதான் கேட்கிறேன். ஆனால் எப்படி முடிவு செய்வது என்பது என்ன செயல்" என்பதை அவர்கள் தங்களுக்குத் தானேயும் யோசனை கேட்பவர்களிடமும் தெளிவு படுத்தி விட வேண்டும். நமது ஊரில் பலர் நாம் யோசனை கேட்கும்போது எது சரி என்று சொல்லிவிட்டு, அப்படியே அவர்கள் சொன்ன வாறு நாம் நடக்க வேண்டுமென்று நம்மை நிர்ப் பந்திப்பார்கள். இவர்கள் ஆபத்தானவர்கள்.

ஏனெனில் பிறர் யோசனையையும், முடிவை யும் ஏற்று நடக்கும்போது, நாம் நம் சுயத் தன்மையை இழந்து விடுகிறோம்.

ஆகவே, பிறரிடம் யோசனையைக் கேட்கும் போது, "நீங்கள் சொல்வதைச் சொல்லுங்கள். என்ன செய்ய வேண்டும் என்று முடிவெடுக்கும் பொறுப்பு என் பொறுப்பு. ஏன்...! உங்கள் முடிவு சரியானதாகவே இருந்தாலும். அடுத்தமுறை பிரச்சினை வரும்போதும், அதைத் தீர்க்க நான் உங்களைத் தேடிக்கொண்டிருக்க வேண்டி யிருக்கும். இம்முறை நான் எடுக்கும் முடிவு தவறாயிருந்தாலும் இது நான் செய்யும் தவறு இந்தத் தவறிலிருந்து நான் கற்றுக்கொள்ள முடியும். இதன் மூலம் நான் வளரமுடியும். இதன் மூலம் நான் வளர வழியுண்டு. உங்கள் யோசனையைக் கேட்டு நடப்பதன் மூலம் நான்

உங்களைச் சார்ந்து வாழ்வேன்; நான் வளர வழியில்லை'' என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

தன்னம்பிக்கையின்மையின், மறுபக்கம் கர்வம், தற்பெருமை, அகம்பாவம் என்ற குணங்கள், தன்னம்பிக்கையின்மை எத்தனை கெடுதலோ அதே போலத்தான், "என்னால் எல்லாம் முடியும்'' "மனது வைத்தேனானால். மறுபடியும் செய்து காட்டுவேன்'' "ஒரு தரம் புரிந்துகொண்டேனானால் போதும், விடமாட்டேன்'' என்று சிலர் தன் திறமையைப் பற்றி அறிவுக்கு மீறிய கணிப்பு செய்வார்கள்.

ஒரு சமயம், 'நான் படுத்துக்கொண்டே ஜெயிப்பேன்' என்று கூறி திரு. பெ. சீனிவாசன் என்ற இளைஞரிடம் தோற்றுப்போனார் காமராஜ். கென்னடி அப்படித்தான். வரிசையாக வெற்றி பெற்றுக்கொண்டே வந்தபோது, 'கென்னடி எதை எடுத்தாலும் வெற்றி பெறுவார்' என்று பத்திரிகையில் எழுதினார்கள். அவருக்கும் அப்படி ஓர் நம்பிக்கை பிறந்தது. இதன் விளைவாக, சரியான முன் தயாரிப்பு இல்லாமல் கியுபாவின் மீது எடுத்த படையெடுப்பு பெரிய தோல்வியாய் முடிந்து அவரை மூக்கொடிய வைத்தது, அகம்பாவம் என்பது தன்னைப்பற்றிய அளவுக்கு மீறிய அதிநம்பிக்கையால் வருவது. இதுதானே ஏற்படுவது மட்டுமல்ல... 'சுற்றியிருக்கும் கும்பல்— துதிபாடும் கும்பல்—காலில் விழும் கும்பல்— தலைவனின் பெருமையைப் புகழ்பாடும்போதும் பல தலைவர்கள் அதை உண்மையென்று நம்பி மோசம் போய்விடுவார்கள்.

தாழ்வு மனப்பான்மையும் நம் தன்னம்பிக்கையைக் குலைத்துவிடும். நம்மைவிட அறிவிலும் திறமையிலும், வலிமையிலும் மிகுந்துள்ளவர்கள். உலகில் நிறையப் பேர் இருக்கக்கூடும். அவர்களோடெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்து, நான் அப்படி இல்லையே என்று ஒப்பாரி வைப்பது மனத்திற்கு நல்லதல்ல. 'நான் கிராமத்திலிருந்து வருபவன். நான் ஹரிசன வகுப்பைச் சேர்ந்தவன். நான் இத்தகைய நடிகரை நேரில் பார்த்ததில்லை. எனக்கு நிறம் கறுப்பு என்ன செய்வது...? நான் சற்று குள்ளம். எனக்கு நோஞ்சான் உடம்பு. நான் என்றுமே அதிர்ஷ்டக்கட்டை. என் பிராப்தம் அவ்வளவுதான். வீட்டிலிருக்கும் எனக்கென்ன தெரியும்' என்றெல்லாம் நீங்கள் நினைப்பது உண்டென்றால்—வாயார சொல்லி மகிழ்வது உண்டென்றால் உங்களிடம் நிறையத் தாழ்வு மனப்பான்மை உண்டு என்று அர்த்தம்.

நம் உணர்வுதான், நம் நினைவுகள்தான் நம்மை வாழ வைக்கின்றன. 'இன்று அமர்க்களமான நாள்' என்று சொல்லிக்கொண்டு வாழ்வின் காலைப் பொழுதைத் துவங்குங்கள்.

பிறரைப் பாராட்டுங்கள். பாடத் தெரிந்திருப்பதற்காக, ஆடத் தெரிந்திருப்பதற்காக, அதற்காக உங்களை அவர்களுடன் ஒத்திட்டுப் பார்த்துப் புலம்பாதீர்கள். இதன் மூலம் நம்மை நாம் சிறுமைப்படுத்துகிறோம். உலகில் எங்கும் உறையும் இறைவன் நம்மிலும் குடியிருக்கிறான், அவனைச் சிறுமைப்படுத்துகிறோம்.

‘செய்வன திருந்தச் செய்’ என்கிறது பழமொழி, அதற்காக எல்லாவற்றையும் பூரணமாகத் தெரிந்து கொண்டுதான் மேலே செல்லுவேன் என்பது, தன்னைப் பூரணமாகப் பாதுகாத்துக் கொள்ள விரும்பும் ஒரு சந்தேகவாதியின் செயல்.

பரீட்சையில் பதிலெழுதும்போது, எல்லா வற்றிற்கும் நம்மால் பூரணமாகப் பதில் எழுதி நூறு மார்க்கை எப்போதும் நம்மால் பெற முடிவ தில்லை. தெரிந்த அளவில் மேலே செய்ய வேண்டும்.

தன்னம்பிக்கை இல்லாதவர்கள் சிறு விஷயத் தைப் பெரிதுபடுத்துவார்கள் என்றும், அவர்கள் செய்யும் காரியம் தவறென்று பிறர் எடுத்துக் காட்டிவிட்டால் மனம் உடைந்து போய்விடுவார் கள் என்றும் மனதத்துவ நூலார் அவர்களைப் பற்றிக் கூறுகின்றனர்.

தன்னைப் பற்றிய சுய உணர்வு

அமெரிக்கா ஒரு சாதனை புரியும் சமுதாயம். சாதனை புரியும் தனிமனிதர்களால் நிறைந்த ஒரு சமுதாயம். நமது சமுதாயமோ, மேலிருந்து— அரசாங்க உத்தரவிலிருந்து சாதனைகளை நிகழ்த்தலாம் என்று தலைவர்களும் மக்களும் நம்பும் ஒரு சமுதாயம். தனி மனித முயற்சியை அப்படி நெருக்கிப் போக்கிவிட்ட ஒரு நிலை நம நாட்டில், தனிமனிதன் தன் முயற்சியில் தன்னம்பிக்கை இழந்துவிட்ட நிலை.

இரண்டாவதாக—

அமெரிக்காவில் ஒரு சுதந்திர மனோபாவம் நிலவுகிறது. 'நான் உழைக்கிறேன். நான் சம்பாதிக்கிறேன் எனக்காகத்தான் அரசாங்கம் இருக்கிறது' என்ற தனிமனிதனைச் சுற்றிய நம்பிக்கை; சுதந்திர மனோபாவம். இந்தியாவிலோ எந்தக் காரியமும், அரசாங்க ஜபர்தஸ்து இல்லாமல் இல்லை. பள்ளிக்கூட கல்லூரி அட்மிஷனிலிருந்து வேலை பெறுவது, திருமணம் செய்து கொள்வது வரை அரசாங்க எல்லைக்குள் மனிதன் செயல்பட வேண்டியிருக்கிறது. ஒரு திருமணத்தை ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமானால் அதற்குக்கூட அரசாங்க ஜபர்தஸ்து இல்லாமல்

செய்ய முடியாது. ஏதோ அதிகாரி உங்கள் திருமணத்திற்கு சகாயம் செய்வதுபோல நடந்து கொள்கிறார்.

பொதுமக்களுக்காக இருக்கும் அரசாங்க இலாகாவில் நேர்மையற்ற தன்மையைக் கண்டால் அமெரிக்கப் பொதுமக்கள் உலுப்பி விடுவார்கள். மறுநாளே அரசாங்க ஜபர்தஸ்துக் காரரின் வேலை போய்விடும். அமெரிக்காவில் பொதுமக்களுக்காக அரசாங்கமும் தாலுகா ஆபீசும் இருக்கின்றன. நமது ஊரிலோ அரசாங்க அலுவலகங்கள், சட்டதிட்டங்களை ஒட்டி—அவற்றைப் பூர்த்தி செய்யும் வகையில்—அவற்று டன் சமாதானமாகப் போகும் ரீதியில் நாம் நடந்துகொள்கிறோம். நமது ஊரில் தனிமனித சுதந்திரம் இல்லை; அரசாங்கத்திற்காக நாம் வாழ்கிறோம்.

ஓர் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். அமெரிக்காவில் ஐம்பது மாநிலங்கள். எவையும் தனியாகப் பிரிந்துபோக விரும்பினால் போகலாம். எந்த ஆட்சி சட்டமும் அதைத் தடை செய்யாது. ஒரு சிறு குக்கிராமத்தின் ஆற்றிற்குப் பாலம் போட வாஷிங்டன் பண உதவி செய்யவில்லை என்று அந்த குக்கிராமம் ரஷ்ய உதவிக்கு எழுதியது. உதவி அளிக்க ரஷ்ய அரசாங்கம் தன் அதிகாரி களை அனுப்பியது. இது நடந்தது அமெரிக்கா வில் — ஓராண்டுக்கு முன்பு, அமெரிக்காவில் சுதந்திரம் எப்படி இருக்கிறது பாருங்கள். நமது ஊரிலோ பதினாறு மாநிலங்கள். அந்தப் பதினாறு மாநிலங்களும் தாங்கள் விரும்பினால்கூட பிரிந்து

போகக் கூடாது என்று சட்டம் போட்டிருக்கிறோம். சட்டத்தால் மக்களின் அடிப்படை உரிமைகள் ஒடுக்கப்படுகின்றன. அரசாங்கம் நம் தோள்மீதும் தலைமீதும் உட்கார்ந்து கொண்டிருக்கிறது நம்மூரில். எங்கே மனிதன் செயல்பட முடியும் சுதந்திரமாக...?

அமெரிக்காவைத் திட்டும் யெஸ்ஸார் அரபாட் என்ற அரபுத் தலைவர் அமெரிக்காவுக்கு வர அமெரிக்க அரசாங்கம் அனுமதி வழங்குகிறது. நம் நாட்டிலோ இந்திராகாந்தியோ, கருணாநிதியோ வெளிநாடு போக விரும்பினால் அரசாங்கம் அதை மேலும் கீழும் பார்க்கிறது. நமது ஊரில் அரசாங்கம் நம் வாழ்க்கையை நிர்ணயிக்கிறது. நம் அபிலாஷைகளை அரசாங்கம் பரிசீலித்துத் தீர்ப்பளிக்கிறது.

இப்படிப்பட்ட நாட்டில் சுதந்திர மனப்பான்மை எப்படி நிலவ முடியும்? எப்படி மக்கள் அவரவர்கள் துறையில் முன்னுக்கு வரமுடியும்? வெளிநாட்டுக்கு சினிமாப் படம் காட்டப் போகிறோம் என்றால் நமது ஊரில் அது சினிமாக்காரர்களின் விஷயம் அல்ல, அது அரசாங்க விஷயம்! யாரை அனுப்பலாம், எந்த வடஇந்திய படத்தைத் தேர்ந்தெடுக்கலாம், எதை மறுக்கலாம், எந்த மத்திய அமைச்சரைப் பேசச் சொல்லலாம் என்பதை டில்லி அரசாங்கம் நிர்ணயிக்கிறது. 'இத்தனைக்கும் தென்னிந்தியா அதிகப் படம் தயாரிக்கும் இடம்! என்ன வெட்கக்கேடு இது!'

இங்கே நமது ஊரில் மனிதன் தன் உச்சத் திறமையுடன் செயல்பட சூழ்நிலை இல்லை,

சுதந்திரம் இல்லை. அரசாங்கம் ஒடுக்குகிறது. அரசாங்கம் நம் வாழ்வை தேவைக்குமேல் தொட்டு நம் வாழ்வைப் பாழடிக்கிறது. நமது நாட்டுப் பிரச்சினை என்ன...?

அதிகமாக அரசாங்கம் நம் தலைமீது ஏறி உட்கார்ந்திருக்கிறது.

ஏன் இப்படிப்பட்ட இழிநிலை! நமது அறிவும் திறமையும் செயலாக வெளி வரமுடியாத நிலை!

நாம், நம்மால் அரசாங்கத்தை மாற்ற முடியாது' என்று தன்னம்பிக்கை இழந்து விட்டோம். "சுமையாய் இருக்கும் அரசாங் கத்தை, தனிமனித முயற்சியை ஒடுக்கும் அரசாங் கத்தை, தூக்கி எறிவோம். புதிய சமுதாயம் அமைப்போம்" என்ற புரட்சி மனோபாவம், லட்சியம் நம்மிடம் இல்லாமல் போய்விட்டது.

காலம் தாழ்ந்துவிட்டதா...? இல்லை.

இருபதாம் நூற்றாண்டின் பெரிய மனோ தத்துவக் கண்டுபிடிப்பு 'தன்னைப் பற்றிய சுய உணர்வு'(Self-Image) என்கிறார்கள், மனோதத்துவ அறிஞர்கள். நம்மைப் பற்றி நாம் என்ன எண்ணம் கொண்டிருக்கிறோம் என்பதைப் பொறுத்துத் தான் நமது சந்தோஷமும், சாதனையும் அமை கின்றன என்கிறார்கள். தன்னால் முடியும் என்று எண்ணுபவனின் எதிர்காலம் ஒளி மிகுந்ததாய் அமையும். "நான் நல்லவன்; கெட்டிக்காரன், சோம்பேறி அல்ல, நாணயமான மனிதன்' 'என்று ஒரு மனிதன் தன்னைப் பற்றித் தானே கூறும் போது அவனது கண்களில் அவனைப் பற்றிய

மதிப்பு உயர்ந்து நிற்கிறது. அப்படித் தன்னை மதிக்கும் மனிதனை உலகம் மதிக்கிறது, உலகம் பாராட்டுகிறது; வணங்குகிறது.

நல்ல முகம் இருக்கும்போது கண்ணாடியில் போய்ப் பார்த்துக்கொண்டு, 'எனக்கு மூக்கு கொஞ்சம் நீளமாய்த் தெரிகிறது' என்று துக்கம் கொண்டாடினீர்களானால்— உங்களையே உங்களுக்குப் பிடிக்காமல் போனால்— அந்தப் பிடிக்காத உணர்வு நாளடைவில் உங்கள் முகத்தில் தன் முத்திரையைப் பதித்துவிடும். நம்மை நாம் மதிக்க வேண்டும். நம்மை நாம் கண்டனம் செய்யாமல், அன்புடன் நடத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். முதலில் நமக்கு நாமே நண்பனாய் இருக்க அறிந்துகொள்ள வேண்டும்.

நாம் எப்படி நம்மை மதிப்பிடுகிறோமோ அப்படித்தான் உலகம் நம்மை ஏற்றுக்கொள்கிறது. எனக்குத் தெரியாது என்று பூர்வபீடிகை போடுபவனைத் தெரியாதவன் என்றுதான் உலகம் ஏற்றுக்கொள்ளும். கடைசி பெஞ்சில் தலைமறைவாக உட்காரும் மாணவன் தலைமறைவாகவே வாழ்ந்து நமோதில்லாமல் போகும் சந்தர்ப்பம் அதிகம் உண்டு. நாம் பயந்து கொண்டோ, தயங்கிக்கொண்டோ காரியம் செய்தால் நம் தயக்கமும், பயமும் அதனதன் முத்திரையைக் காரியத்தில் பதித்துவிட வாய்ப்புண்டு.

தன்னம்பிக்கையும் சுதந்திர மனோபாவமும்

சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன் மோக்ஸ்வெல் மாட்ஸ் என்ற பினாஸ்டிக் அறுவையாளர்— இந்த 'தன்னைப் பற்றிய சுய உணர்வை' மனித முன்னேற்றத்தின் முக்கிய மனோதத்துவப் படியாக எடுத்து விளக்கினார். அவரிடம் 'முகம் சரியில்லை, கண்களின் கீழ் சதை தொங்குகிறது. காது நீட்டாயிருக்கிறது. மூக்கு சப்பையாயிருக்கிறது' என்று பலர் வந்தார்கள். அவர் எத்தனைதான் தன் திறமையை முழுமையாக உபயோகித்து முகத்தைத் திருத்தி அமைத்தாலும் பலர் திருப்திப்படாது போவதைக் கண்டார். அப்போது அவருக்கு ஒரு விஷயம் புலனாகியது. குறைபாடு பலருக்கும் முகத்தில் இல்லை. குறைபாடு அவர்கள் மனத்தில் இருக்கிறது. எந்த விதமாக, உயர்வாக முகம் அமைந்தாலும் அதை அவர்கள் மனம் ஏற்றுக் கொள்ளாதவரை அவர்கள் குறையுடனேயே வாழ்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தங்களைப் பற்றிய தாழ்வு மனப்பான்மை அளவுக்கு மீறி இருக்கிறது. மாறாக, எத்தனையோ முகக் கோணல்கள் உள்ளவர்கள்

எல்லாம் மகிழ்வுடனும், திறமையுடனும், திருப்தியுடனும் வாழ்க்கை நடத்துவதைக் கண்டார். அதிலிருந்து மனிதன் தன்னைப் பற்றி என்ன எடை போடுகிறான் என்பதைப் பொறுத்தே அவன் வாழ்க்கையின் நிறைவும், வாழ்க்கையின் சாதனையும் அமைகின்றன என்று கண்டார்.

மேக்ஸ்வெல் மாட்ஸ் என்ற அந்த அறுவையாளர் சைக்கோ சைபர்னடிக்ஸ் (Psycho Cybernetics) என்ற ஓர் அரிய புத்தகத்தை ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். அதில் இந்தத் தன் கண்டுபிடிப்பை விரிவாக விளக்குகிறார். முடிந்தால் படியுங்கள்.

இப்படி எல்லாவற்றையும் சாதிக்கும் மனத்தைப் பற்றி அதிகம் நாம் நம் இளைஞர்களுக்குப் பள்ளிகளிலோ, கல்லூரிகளிலோ சொல்லிக் கொடுப்பதில்லை. எந்த ஊருக்கு—எதற்காகப் போகிறோம் என்று தெரியாமல் பயணம் புறப்பட்டவன் கதைபோல, மனத்தின் தன்மைகளைச் சொல்லிக்கொடுக்குமுன் அதிலே போட்டு நிறைக்க குப்பைமேடு அளவுக்கு விஷயங்களை நம் பள்ளிக்கூடங்கள் மாணவன் மனத்தில் திணிக்கின்றன.

சிறு குழந்தையாயிருக்கும்போது — குழந்தை செய்யக்கூடிய பல எளிதான காரியங்களை அவனைச் செய்யப் பயிற்சி கொடுத்தால் குழந்தைக்கு 'நம்மால் முடியும்' என்ற பெருமிதம், தன்னம்பிக்கை ஏற்படும். கொஞ்சம் வளர்ந்தவுடன் சுமார் 14—16 வயதில் சற்று சிரமமான பயிற்சிகளை, சோதனைகளைக் கொடுத்தால் மாணவன், 'இவ்வுலகில் பல தோல்விகளும்

வெற்றிக்குப் படிகளே' என்ற உணர்வை, உலக இயல்பை, தோல்விகளைச் சமாளிக்கும் மனோ பாவத்தைப் பெறுவான்.

ஆனால் நாம், வீட்டில் சிறு குழந்தையிடம் அதன் சக்திக்குமேல் நம் எதிர்பார்ப்பைத் தெரி விக்கிறோம். 'முதல் மார்க் வாங்கி வரவில் லையா...?' என்ற கேள்வியில் தொனிக்கும் அதிருப்தி, குழந்தை தன்னை 'ஒரு முட்டாள், படிப்பு வராதவன்; படிப்பில் மக்கு' என்று எண்ணும்படி வைத்துவிடுகிறான். குழந்தை களிடம், 'பள்ளிக்கூடத்தில் கணக்கு தெரிந்து கொண்டாயா...? சபாஷ்!' என்று பள்ளிக் கூடத்திலிருந்து வரும்போதே பாராட்டினால், குழந்தையின் முகத்தில் மகிழ்ச்சியும் தன்னம் பிக்கையும் விளையாடுவதைக் காணலாம். குழந்தை உடனே தன் விரலை மடக்கி நம்மிடம் கணக்குப் போடுவதைப் பார்க்கலாம்.

தன்னைப் பற்றிய சுயஉணர்வு குழந்தை களிடம் மட்டுமல்ல; கடைசிவரை வயோதிகர் கள் வரை அது வளரவேண்டும். அப்போதுதான் வாழ்வில் நிறைவும் சாதனையும் இருக்கும்.

ராஜாஜியிடம் ஓர் அசாதாரண தன்னம் பிக்கை என்றும் உண்டு. வின்ஸ்டன் சர்ச்சிலா னாலும், மகாத்மா காந்தியானாலும் அவர் தன் தனித்தன்மையை இழந்து விடாமல், வாதிடுவார். பிறரது குற்றங்குறைகளைச் சுட்டிக் காட்டுவார். பிறரது புகழோ, வலிமையோ, செல்வாக்கோ எதுவும் அவரை அசைத்ததில்லை.

ராஜாஜி சென்னை மாநில முதல்வராயிருந்த போது, சென்னையை வட சென்னை—தென் சென்னை என்று பங்கிட்டுப் பிரித்து ஆந்திரர் களுக்குப் போய்விடும் அபாயம் இருந்தது. ராஜாஜியோ சென்னையைத் தமிழ்நாட்டுடன் சேர்த்தார். காரணம், வட இந்தியத் தலைவர் களுடன் சமநிலையில் அவரால் வாதாட முடிந்தது.

பின் காமராஜர் முதல்வரானார். தமிழ் நாட்டுக்குச் சேர வேண்டிய தேவிகுளம், பீர்மேடு போன்ற ஊர்கள் கேரளத்துடன் சேர்க்கப் பட்டன. காமராஜரால் அப்படிச் செய்ய முடிய வில்லை. ஆராய்ந்து பார்த்தால், காமராஜ் அப்போது அரசியல் துறையில் வளர்ந்து கொண்டிருந்த சமயம். தன்னைப் பற்றிய சுய உணர்வு — தன்னம்பிக்கை அவரிடம் இல்லாமல் தேவிகுளம், பீர்மேடு பறிபோயிற்று. அதே காமராஜரை நேரு இறந்ததும் பாருங்கள். தன்னைப் பற்றிய சுய உணர்வு, அவருக்கு— 'காமராஜின் பதவி விட்டு விலகும் திட்டத்தை' நேரு அங்கீகரித்ததிலிருந்து — அதிகம் வந்தது. ஆகவே, நேரு இறந்ததும் சாஸ்திரியைப் பிரதமர் ஆக்கினார். சாஸ்திரி இறந்ததும் இந்திரா காந்தியைப் பிரதமர் ஆக்கினார். காமராஜ் தன்னைப் பற்றிய சுயஉணர்வுடன் பாடுபட்டார்.

அதுபோல வேறு ஒரு சம்பவத்தைப் பார்ப் போம். மகாத்மா காந்தி இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தந்தார். ஜின்னா பாகிஸ்தானத்தைப் பெற்றுத் தன் மக்களுக்குத் தனிநாடு அளித்தார்.

திராவிட நாடு போராட்டத்தைத் துவங்கிய பெரியார் ராமசாமியாலோ, திராவிடநாடு பெற முடியவில்லை. மனத் தத்துவமும், சரித்திர ஆர்வமும், திட்ட வியூகமும் படைத்த அனைவரும் —ஏன் பெரியாரால் முடியவில்லை, சீனப் படை எடுப்பைக் காட்டி இந்திய அரசாங்கம் பிரிவினை, தேசத் துரோகம் என்று சட்டம் செய்தபோது ஏன் அண்ணா பின் வாங்கினார். முஜிபூர் ரகிமான் பங்களாதேஷ் பெற்றபோது, நமது ஊர் கருணாநிதி ஏன் ஏதும் வெற்றி பெற முடியவில்லை...? என்பதை எல்லாம் சிந்திக்க வேண்டும். இவை எல்லாம் நாம் தெள்ளத் தெளிய ஆராயவேண்டிய விஷயங்கள்.

நேற்றைய தோல்விகளிலிருந்து தனி மனித முன்னேற்றத்திற்கும், நாட்டு முன்னேற்றத்திற்கு மான, பல நல்ல பாடங்களை நாம் அங்கே கற்றுக்கொள்ள முடியும்.

மனம் என்ற நாற்றங்காலில் எண்ணம் என்ற விதை விழும்போது புதுப்புல்—புதுநெல் அங்கே முளைக்கிறது. நேற்று மடிந்த வைக்கோல் இன்று நல்ல எருவாகி இருக்கிறது.

தன்னம்பிக்கை பெற வழிகள்...

தன்னம்பிக்கை பெற என்னவழி என்று ஆராய்வதன் முதல்படி நமது பயத்தின் காரணத்தைப் புரிந்துகொள்வதுதான். நமது சோகத்தின், தாழ்வு மனப் பான்மையின் காரணத்தைக் கண்டு பிடிப்பதுதான்.

ஏன் பயப்படுகிறோம்? பல சமயம் நடக்க முடியாதவைகளை எல்லாம் எண்ணிப் பயப்படுகிறோம். அந்தச் சமயத்தில் உங்கள் பயத்தை எழுதி ஒரு பெட்டியில் போடுங்கள். அதை ஒரு வாரம், ஒரு மாதம் கழித்துப் படித்துப் பாருங்கள் என்று யோசனை சொல்கிறார்கள் மன சிகிச்சை மருத்துவர்கள்.

சில சமயம் நம் கைக்கு அப்பாற்பட்ட விஷயங்களுக்கெல்லாம் நாம் துன்பப்பட்டு நேரத்தை—நிகழ்காலத்தை வீணடித்துக் கொண்டிருப்போம். நம்கையில் இல்லா ததைப் பற்றி நாம் ஒன்றும் செய்யமுடியாது. அதற்காகப் பயந்து நம்பிக்கை இழப்பது முட்டாள்தனம். கவலை தான் மிஞ்சும். அந்தச் சமயத்திலெல்லாம் ஒரு பிரார்த்தனையை ஆத்மபூர்வமாகக் கண்ணை மூடிக் கொண்டு கூறிவிட்டு அவன் கையில் பாரத்தைப் போடுங்கள்; நிம்மதி ஏற்படும் என்கிறார்கள். உண்மை,

நம் சக்திக்கு மேற்பட்ட விஷயத்தைப் பற்றி நாம் என்ன செய்ய முடியும்...? ஒன்றும் செய்ய முடியாது.

நேரமும் காலமும் இருக்குமானால் அருகிலுள்ள கோயிலுக்குச் செல்லுங்கள். யாரும் நடமாடாத ஒரு பார்க்கிற்குச் செல்லுங்கள். மனமாறக் கண்ணை மூடிப் பிரார்த்தியுங்கள்.

பல சமயம் நாம் விஷயங்களை ஒத்திப் போடுகிறோம்; காரியம் செய்யப் பயப்படுகிறோம். நாம் எது செய்து என்ன பயன் என்ற சோகமும் விரக்தியும் எழுகிறது. செயல்— முயற்சி— இருக்கிறதே அதைப் போல தன்னம்பிக்கைக்கு அருமருந்து இல்லை. சிறையிலே கிடந்தான் ஒரு கைதி—பல மாதங்கள், பல ஆண்டுகள். ஒரு நாள் வாசற்கதவுப் பக்கம் சென்று கையை வைத்துத் தள்ளினான். என்ன ஆச்சரியம்! கதவு திறந்துகொண்டது. உண்மை என்னவென்றால் இத்தனை நாளும் சிறைக்கதவு திறந்துதானிருந்தது. மனித முயற்சிதான் அங்கே இல்லை.

முயற்சிக்கு ஈடாக தன்னம்பிக்கை தரும் மருந்து வேறு ஏதும் இல்லை. கொஞ்சம் வாழ்க்கைக் கதவைத் தள்ளிப் பாருங்கள்! அது திறந்துதானிருக்கிறது.

தன்னம்பிக்கையற்றவர்கள் எல்லாம் முக்கியமான ஒன்றை மறந்து விடுகிறார்கள்— 'வாழ்க்கை ஒரு வாய்ப்பு' என்பதை. நம்மை இவ்வுலகில் வாழுமாறு. வாழ்வை ரசிக்குமாறு, அனுபவிக்குமாறு காலத்தை நமக்குக் கடன் கொடுத்தி

ருக்கிறார்கள். அதை நாம் அழுதுகொண்டா, புலம்பிக்கொண்டா செயலற்று நம்மையே நொந்து கொண்டா போக்கடிப்பது... என்ன அறியாமை! நாம் வாழ விரும்பும் வாழ்வு நம் மனத்தில் அச்சேறிய வண்ணம் அமையும்—நம்மிடம் மட்டும் அதற்கு வேண்டிய ஆர்வமும் துடிப்பும் இருந்தால்; வாழ்க்கை ஒரு வாய்ப்பு என்பதை உணர்ந்து நாம் அதைப் பயன் படுத்தினால்.

யாரும் தெய்வாம்சம் பொருந்திய மனிதர்களல்ல. நம்மைச் சுற்றி இருப்பவர்களும் நம்மைப் போன்ற மனிதர்களே. அதுபோல மனித வாழ்வும், ஒரே உற்சாகத்திலேயே— என்றும் மிதப்பதில்லை. நம் வாழ்வில் ஒரு 'ரிதும்' — ஓர் ஓட்டம் இருக்கிறது. இந்த ஓட்டம் மேலும் கீழும் போய் வரும் இயல்புடையது. நமது அறிவாற்றல், உணர்வுகள், உடல் சக்தி என்ற இம்மூன்றும் பருவ காலம்போல சில சமயம் மேலும் கீழும் போய் வருகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். நீங்கள் நினைத்திருக்கும் மிகப் பெரிய வலுபடைத்த தலைவன்கூட சில சமயம் அதைரியமடைகிறான். இது சகஜம் என்பதை நாம் உணர வேண்டும். அப்படி ஓர் கீழ்மட்ட ஓட்டம் நம் உணர்வுகளில் ஏற்படும்போது, 'இது ஓர் கெட்ட நாள்' என்று நாம் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துக் கொள்ளவேண்டும். மனம் அலைபாயும் 'கீழ் ஓட்ட' நாட்களில்— வேலைகளில் முக்கியமான காரியங்களைப் பற்றி முடிவெடுக்கக் கூடாது.

தன்னம்பிக்கை பெற மற்றுமோர் எளிதான வழி:

உங்களைப் பற்றிப் பிறர் பாராட்டியதை எழுதி ஒரு தாளில் வைத்துக்கொள்ளுங்கள். சில சமயம் உங்கள் புத்திசாலித்தனத்திற்காக, உதவிக்காக, உங்கள் குணத்திற்காகப் பிறர் பாராட்டி யிருக்கக் கூடும். அதை ஒரு சிறு அட்டையில் எழுதி பையில் வைத்திருங்கள்.

"உங்களுக்குப் பல்லக்கு ஏறும் பாக்கியம் உண்டு" என்று சோதிடன் கூறியது" "உனது விடாப்பிடியும், உறுதியும் கண்டு நான் அயர்ந்து போகிறேன்" என்று உங்கள் நண்பன் கூறியது; "அப்பா! இந்தத் தள்ளாத வயதில் எனக்கு உதவி னாயே. நீ மகாராஜனா இருக்கணும்" என்று ஒரு பெரியவர் சொன்னது — இப்படி உங்கள் வாழ்வில் பல சம்பவங்கள் நிகழ்ந்திருக்கக் கூடும், அதன் சாரத்தை எழுதி வைத்துக்கொள்ளுங்கள். நம்பிக்கை தளரும்போது, சோகம், பயம் எழும் போது அதை எடுத்துப் படித்துப் பாருங்கள். அந்தந்த நிகழ்ச்சிகளை மனக்கண் முன் முழுமை யாகக் கற்பனை செய்து பாருங்கள்.

உங்கள் மனம் மீண்டும் லட்சியத்தில் மிதக்கும். தன்னம்பிக்கையால் பூரிப்படையும். தைரியத்தால் வலுப்பெறும்.

தத்துவதியாகவும் நிகழும் சம்பவங்களை நாம் நோக்கலாம். உடனடியாகச் சில விஷயங்களை — நாம் மூக்குக்கு முன் இருக்கும்போது — அதன் முழு உருவமும் நமக்குத் தெரிவதில்லை. ஆகவே, எல்லாவற்றையும் பொதுவாக, தூரத்தில்

இருந்து மொத்தமாகப் பார்க்கக் கற்றுக்கொள் ளுங்கள். அப்படிப் பார்க்கும்போது பெரிதாக நாம் எடுத்துக்கொண்டு அல்லல் படும் விஷ யங்கள் காலப்போக்கில் மிகச் சிறியவையாகத் தோன்றும். சிலசமயம் தற்காலிகமாக அவை கஷ்டமானவையாக — இடைஞ்சல் கொடுப்ப வனாகத் தோன்றினாலும், நீண்டகால நோக்கில் அந்த இடையூறும் ஒரு நன்மைக்கே எனத் தெரியும்.

எனது நண்பர் ஒருவரை சிறு கிராமத்தி லிருந்து சென்னை நகரத்திற்கு மாற்றினார்கள். வீட்டுக் கஷ்டம், போக்குவரத்துச் செலவு, வருமானக் குறைவு என்று மனிதர் பல விஷயங் களையும் எண்ணி தன்னை மாற்ற வேண்டா மென்று மன்றாடினார். அரசு செவி சாய்க்க வில்லை. ஆனால், அவர் சென்னை வந்ததன் விளைவாக அவர் திறமை மேலதிகாரிக்குத் தெரிய வந்தது. பெரிய வேலை வந்தது. நிறையச் சம்பளம் வந்தது. சில சமயம் நமக்கு எது நல்லது என்பது நம்மைவிட கடவுளுக்குத் தெரிகிறது. ஆகவே நம் செய்கைக்கு மேற்பட்டதை "எல்லாம் நன்மைக்கே" என்று எடுத்துக்கொள்வது நன்மை யைக் கொண்டு வரும் செயலாக அமையும்.

சோகம் கப்பிய குளத்தின் கரையில் உட்கார்ந்து கன்னத்தில் கைவைத்துச் சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்களா...? சோகமும், கோபமும், ஆத்திரமும், பயமும், கவலையும், நன்மை தரும் உணர்வுகளல்ல. நம் சக்தியை வடித்துவிடும் தன்மை கொண்டவை. நம் முகத்தில் அவற்றின்

பிரதிபலிப்பைக் கோடுகளாகப் போட்டுவிடும் இயல்புகொண்டவை. இருக்கும் முகத்தை நாம் நன்றாக வைத்துக்கொள்ள வேண்டும். நம் கீழான எண்ணங்களால் நாம் அதைக் கேவலப் படுத்தக் கூடாது. அச்சமயங்களில் நமக்கு ஹாஸ்ய உணர்வு வேண்டும் என்று கூறுகிறார்கள் மனநூலார்.

என்ன செய்யலாம்...?

உங்களுக்குப் பிடித்த ஒரு ஹாஸ்ய எழுத்தாளரை, ஒரு ஹாஸ்ய நடிகரை,நடிகையை, 'டணால்' தங்கவேலுவை ஒரு நாகேஷை மனோரமாவை நினைத்துக் கொள்ளுங்கள். அவர் மூட்டிய சிரிப்பு உங்கள் நினைவுக்கு வரட்டும். சோகம் மறையும். வருத்தம் இருந்த இடம் தெரியாமல் போகும்.

தெரியாமலா சொன்னார் ஒரு தத்துவஞானி. "இருக்கிற நாளை சிரித்து மகிழ்ந்து வாழ்ந்துவிடு" என்று!

தன்னம்பிக்கை

ஒரு சமுதாயம் தன்னம்பிக்கையற்று இருக்கிறதென்றால் அதில் உள்ள பெரும்பாலான மக்கள் தன்னம்பிக்கை இழந்து செயலிழந்து இருக்கிறார்கள் என்று அர்த்தம்.

மேனாட்டு அறிஞர்கள் நமது நாட்டின் ஏழைமை நிலைமைக்கு முக்கிய காரணம் விதியை நம்பிக்கொண்டு செயலற்றுப் போவதே என்று கூறுகின்றனர். "என் விதி என் பூர்வ கர்ம வினையால் முன்னமேயே எழுதப்பட்டுவிட்டது. நான் என்ன செய்து என்ன?" என்ற வேதாந்தப் போக்கில் ஏதோ பொழுது போனால் சரிதான் என்று அபிப்ராயப்படுகின்றனர்.

ஒரு நாட்டின் சொத்து அதன் நிலவளம், நீர்வளம், கனிவளமல்ல; ஒரு நாட்டின் சொத்து அதன் மக்கள்; அந்த மக்களின் தன்னம்பிக்கை, அதுதான் பாலை வனத்தைப் பசுஞ்சோலையாக மாற்ற வல்லது. தன்னம்பிக்கைதான் ஒரு மனிதனின் ஜீவநாடி; ஒரு நாட்டின் ஜீவநாடி. 'பிழைத்துக்கொள்வோம்' என்று தன்னம்பிக்கையோடு இருப்பவன் புற்று நோயிலிருந்தும் பிழைத்துக் கொள்கிறான். மருத்துவ உலகமே

அதிசயிக்கும்படி நம்மை ஊக்குவிக்கும், நம்மை முந்திச் செயல்படுத்தும் ஒரு பெருஞ்சக்தி.

நாடு இருக்கும் நிலையில், நாம் வாழும் சூழ்நிலையில் நம் நாட்டில் தனிமனிதன் தன்னம் பிக்கை இழக்க ஏராளமான காரணங்கள் இருக் கின்றன. வறுமையிலிருந்து வழியில்லாமை வரை, அத்தனை சோதனைகள் நமக்கு.

ஆனால் நாம் எதை இழந்தாலும் தன்னம் பிக்கையை இழக்கக் கூடாது. தன்னம்பிக்கை யில்லாத மனிதன் செத்துக்கொண்டிருக்கிறான். அவன் ஒரு நடைப்பிணம்.

தன்னம்பிக்கையில்லாதவன் பொறுப்பைக் கண்டு பயப்படுகிறான். யாராவது தன்வேலை யைக் கண்டு கொண்டு, மூன்றுவேளையும் அவனுக்கு யாராவது சோறு போட்டால் போதும். அதுவே சொர்க்கம் என்று நினைக் கிறான். அதேபோல்தான் அரசைப் பற்றிய பொறுப்புகளையும் யாரோ சிலர் கையில் ஒப்படைத்துவிட்டு 'மந்திரத்தால் மாங்காய் விழாதா?'' என்று எதிர்பார்க்கிறான்.

ஏன் மனிதன் தன்னம்பிக்கையற்றுப் போகிறான்? தனது திறமையில் அவனுக்குச் சந்தேகம்: தனது முடிவெடுக்கும் திறன் பற்றி அவனுக்குப் பயம்: தன்னால் முடியும் என்பதில் அவனுக்கு நம்பிக்கையில்லை. என்ன ஆகுமோ என்ற பயம். பயம் மனிதனை முடக்கி விடு கிறது. தன்னம்பிக்கையின்மையால் மனிதன் சோகத் தில் ஆழ்ந்துபோகிறான். இதன் விளைவாக ஊரும் உலகமும் ஏதோ அவனுக்கென்று அநீதி

இழைத்துவிட்டதாகப் பொருமுகிறான். தன்னம்பிக்கையற்றவனுக்குத் தன்னைப் பற்றிய ஒரு கௌரவமான அபிப்ராயம் இல்லை. தான் எதற்கும் உதவாக்கரை என்று தன்னைப் பற்றியே மதிப்பு போட்டுக்கொள்கிறான் ஏதாவது குருட்டு அதிர்ஷ்டம் அடிக்காதா என்று வானத்தைப் பார்ப்பவன் அவன். அவனுக்குப் பொதுவாகத் தைரியம் குறைவு. புதிதாக எதையும் செய்யத் தயங்குவான். பிறருடன் கலகலப்பாகப் பழக மாட்டான். உலகமே அவனைக் கவனித்துக் கொண்டிருப்பதாக ஒரு கூச்சம். பிறருடன் பழகினால் எங்கே தன்னை உதறித் தள்ளி விடுவார்களோ? எங்கே தன்னை அவமானப்படுத்திவிடுவார்களோ என்ற பயம். இல்லாத விஷயங்களை எல்லாம் தனக்கு நேரப் போகும் துன்பங்களாகக் கற்பனை செய்து கொண்டு விழிப்பான். சில சமயம் தற்கொலை தான் வழி, தான் வாழ லாயக்கற்றவன் என்ற முடிவுக்கு வருவான். பிறரைச் சார்ந்து நிற்க ஆசைப்படுவான்; முயல்வான். சுயத்தன்மை இல்லாதவன் அவன். பிறருடைய நட்பு போய் விடுமோ என்று பயந்து தனக்குப் பிடிக்காததையும் பிறருக்காகச் செய்வான். பிறரது அனுதாபம் அவனுக்கு ஆறுதல் தரும். அவன் ஓர் குழப்பவாதி. எதையும் பற்றி வெட்டொன்று துண்டிரண்டாகச் சட்டென்று அவனால் முடிவுக்கு வர முடியாது. குழம்புவான். தன் இயலாமைக்குச் சமுதாயத்தைக் குற்றஞ் சாட்டுவான்.

தன் விதிக்குத் தான்தான் பொறுப்பு என்பதைச் சிறிதேனும் அறியாதவன் தன்னம்பிக்கையற்றவன்.

மேலே கூறியதை எல்லாம் படிக்கும்போது ஏதோ நாம் அங்கங்கே ஒளிந்துகொண்டிருப்ப தாகப் படக் கூடும். அப்படி இருந்தால் பயப் படாதீர்கள்; கவலைப்படாதீர்கள். மிக வல்ல வனுக்கும் தன்னம்பிக்கை குறைவு சில சமயம் ஏற்படக்கூடியதுதான். ஆனால் அதை உணர்ந்து உடனடியாக நம்பிக்கையுடன் செயலாற்று வதில்தான் புத்திசாலித்தனம் இருக்கிறது; திறமை இருக்கிறது.

ஒரு சமயம் என் நண்பர் காய்கறி வாங்க மார்க்கெட்டிற்குப் போனார். ஒரு கூடைக்காரி நல்ல பிஞ்சுக் கத்தரிக்காய் வைத்திருந்தாள். இவர் குறைத்து விலை கேட்டபோது அந்த அம்மாள் சீறினாள். "ஆளைப்பார்! வியாபாரம் பண்ண வந்த மூஞ்சியைப்பார்..." என்று நீட்டி, விடுவிடென்று விட்டு ஓட்டினாள் கூடைக்காரி. நண்பர் பயந்து போனார். சுற்றும் முற்றும் பார்த்தார். வேகமாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தார். இரண்டு லயன் தள்ளி கத்தரிக்காய் விற்றவரிடம் சொன்ன விலையைக் கொடுத்து விட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தார். சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள். அன்றிலிருந்து அவரைப் பெரிய பயம் ஆட்கொண்டிட, அன்றிலிருந்து அவர் போவதில்லை காய்கறி வாங்க. அவர் மனைவிதான் போவார். காய்கறி மார்க் கெட்டிற்குள் நுழைந்தாலே நடுக்கமேற்படுவதாகக் கூறுகிறார்.

பிறரது உதாசீனம், பிறரது அவமானச் சொல்— சில சமயம் நம் தன்னம்பிக்கையைக்

குலைத்துவிடக் கூடும். இதே காட்சியைச் சற்று மாற்றி அமைத்துப் பாருங்கள்.

தினம் நீங்கள் பள்ளிக்கூடம் போகிறீர்கள். படிப்பு ஒன்றும் உங்கள் ஆர்வத்தைத் தூண்டு வதாக இல்லை. போதாக் குறைக்கு ஒரு மனிதர் அங்கு பிரம்புடன் பொல்லாதவராக சிடுசிடு மூஞ்சியுடன் உட்கார்ந்திருக்கிறார். இந்நிலையில் படிப்பு ஏறவில்லை. ஆனாலும் ஆசிரியரோ தினமும் அர்ச்சிக்கிறார். "ஏ! மக்கு! நீ எங்கே உருப்படப் போறே!" என்று. குழந்தைக்குப் படிக்க ஆசை வருமா? தன்னம்பிக்கை ஏற்படுமா என்று கூறுங்கள். "ஏண்டா இங்கு வந்து என் கழுத்தை அறுக்கிறே!" என்று கூறும் ஆசிரியர் எத்தகைய தன்னம்பிக்கையை இளவயதில் ஊட்டுகிறார் என்பதை எண்ணிப் பாருங்கள்.

மாறாக நான் ஒரு சமயம், ஒரு தொழில் நிறுவனத்தின் தலைவரைப் பார்க்கப் போயி ருந்தேன். அங்கே அவர் அலுவலக அறையில் கையில் கோடுகளால் வரைந்த கொக்குப் படம் மாட்டியிருந்தது. "என் பெண் போட்டகொக்குப் படம்" என்று பெருமையுடன் சொன்னார் அவர். அது கொக்குபோல இல்லை; அது வேறு விஷயம். அலுவலகத்தில் மாட்டப்பட்டிருக்கும் படத்தைக் கண்டு அக்குழந்தைக்கு எத்தனை பெருமை ஏற்படும்; அப்பா தரும் முக்கியத்துவம் அக் குழந்தையின் வளர்ச்சியில் எப்படி உதவும் என்று எண்ணிப் பாருங்கள்.

திடீரென்று ஒருநாள் புது மீசையுடன் என்னைக் காண வந்த இளங்கவிஞரைக் கண்டு

நான் ஆச்சரியப் பட்டேன். "தெருவில் போனால் எல்லாரும் என்னைத் 'தம்பீ' என்கிறார்கள். கல்லூரியில் போனால், இந்த இளவயதும் மெலிந்த உருவமும் ஒரு ஆசிரியருக்கு வேண்டிய கம்பீ ரத்தை, மதிப்பைக் கொடுப்பதாகக் காணோம். எனக்கே நடுக்கம் ஏற்படும் சிலசமயம். அதற்குத் தான் மீசை வளர்க்கத் துவங்கினேன். பாரதியார் போல முண்டாசும் கட்டிக்கொள்ளலாமா என்று யோசிக்கிறேன்!" என சிரித்தார் அவர்.

பெரிய மனோதத்துவ நிபுணர்கள் கூறுவதை நண்பர் எளிதாகச் செய்துவிட்டார். பிற காரியங் களைச் செய்வதன்மூலம் நாம் மனப்போக்கை மாற்றலாம் என்கிறார்கள் மனநூலார். மனம் சோர்ந்திருக்கும்போது ஒரு நல்ல பாட்டை முணு முணுங்கள். வருத்தமான நேரத்தில் ஒரு சினிமா வில் நிகழ்ந்த ஒரு வீரம் நிறைந்த சம்பவத்தை மனக்கண் முன் கொண்டு வாருங்கள். குளித்து விட்டுப் போனால் நமக்கே ஒரு ஆரோக்கியம் ஏற்படுகிறது. நல்ல துவைத்த — சலவை செய்த துணியை உடுத்திக்கொள்ளும்போது நமக்கே ஒரு நிறைவும் மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. வெளியே வைத்திருக்கும் மீசை உள்ளேயும் சிறிது வீரத்தை ஊட்டுகிறது.

மன வருத்தங்களை சமாளிக்கும் வழிகள்...

நம்மைப் பற்றிய கம்பீரத்தை வளர்க்க—நம் மனத்திற்கு நம்பிக்கை ஊட்ட நாம் என்ன செய்ய வேண்டும்? கடந்துபோன உங்கள் வாழ்க்கையில் எத்தனையோ முறை எத்தனையோ சம்பவங்களில் நீங்கள் வெற்றி கண்டிருப்பீர்கள். நீங்கள் அடைந்த பழைய வெற்றிகளை எல்லாம்—அவை சின்னஞ்சிறு வெற்றியானாலும்— ஒரு தாளில் எழுதிக்கொள்ளுங்கள்.

அதேபோல உங்களைப் பலமுறை, பல காரணங்களுக்காக உங்கள் நண்பர்கள், பெற்றோர், ஆசிரியர் பாராட்டி இருக்கக்கூடும். என்ன சொல்லிப் பாராட்டினார்கள். என்ன வார்த்தையை என்ன உணர்ச்சியோடு, என்ன மகிழ்ச்சியோடு, என்ன வியப்போடு சொன்னார்கள் என்பதை எல்லாம் ஒரு வரிவிடாமல் ஒரு தாளில் எழுதிக்கொள்ளுங்கள்.

உங்களுக்கு இருக்கும் ஆசைகளை, லட்சியங்களை நாளை நீங்கள் அடைய இருக்கும் உன்னதப் பதவியை பொறுப்பை ஒரு தாளில் எழுதிக்கொள்ளுங்கள். உங்கள் ஆசைகளை

சிரித்து, நகைத்துக் கேவலப்படுத்தாமல் மதிப்புக் கொடுத்து எழுதிக்கொள்ளுங்கள்.

அதைப் பையிலோ, பெட்டியிலோ, பூசை அறையிலோ கண்படும் இடத்தில் வையுங்கள். தினம் ஒருமுறை அதைப் படியுங்கள், அதில் கூறியுள்ள ஒவ்வொன்றையும் பற்றி தினம் கொஞ்சம் சிந்தியுங்கள். அதைச் சிறு பிரார்த் தனையுடன் முடியுங்கள்.

பேனாவையும் பென்சிலையும் தாளையும் போன்று உயரிய கருவிகள் இல்லை. எண்ணங் கள் தாளில் ஒரு வடிவம் பெறும்போது அவை நிஜ உருவம் பெறுகின்றன. உயிர் பெறுகின்றன. சக்தி பெறுகின்றன காரியம் முடியும் திசை நோக்கி அதிகாரபூர்வமாக அவை அப்போது நடக்கத் துவங்குகின்றன என்கிறார் மனோதத்துவ சிந்தனையாளர் டாக்டர் அரிகீவ்.

சில சமயம் ஏதோ உலகமே கவிழ்ந்து முடிந்து விடுவதுபோல சில சம்பவங்கள் நிகழும். அவை நம் திறமையின் அடிப்படையையே சந்தேகிக்கும்படி நம்மை வாட்டும். அப்போ தெல்லாம் நமக்கு நம்மைப் பற்றிய ஒரு தெளிவு இருக்கவேண்டும். ஏதோ ஒரு சம்பவம் நேரும் போதெல்லாம் நாம் நம் அடிப்படையைச் சந்தேகிக்குமளவுக்கு நம்மை தளர்த்திக்கொள்ளக் கூடாது. ஒவ்வொரு முறையும் கீழே இறங்கக் கூடாது.

நாம் சில நிரந்தர உண்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். அவையாவன: வாழ்விலும், உணர்விலும் ஏற்றத்தாழ்வுகள் வரும் என்ற அறிவு

நமக்குவேண்டும், உடல் சில சமயம் தளரும் போது, நமது மனமும் அதைரியமடையும் என்ற ஞானம் நமக்கு எட்ட வேண்டும். உலகில் கோபம், பயம், சோகம் என்பனவெல்லாம் அடிப்படை உணர்ச்சிகள்— அவை வரத்தான் வரும். அதைச் சமாளிப்பதில்தான் நம் திறமை இருக்கிறது என்ற தெளிவுவேண்டும். இல்லா விட்டால், துக்கத்தைச் சமாளிக்கும் உலகின் முதல் மனிதனாக நம்மை நாம் கருதிக்கொள் வோம். இத்தனை கோடி மக்களிடையே கடவுள் நம்மை மாத்திரம் தேர்ந்தெடுத்து, துன்பங் களையும் சோதனைகளையும் நமக்கு அளித்து விட்டார் என்று எண்ணித் துயருறுவோம்.

அந்தச் சமயங்களில் எல்லாம் நாம் காத்தி ருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். 'இது காலப் போக்கில் போய் விடும்' என்று நாம் உணர வேண்டும். அந்தக் கஷ்டமான சோதனைகளின் போது நாம் ஏதும் முக்கியமான முடிவு களை எடுக்கக்கூடாது. பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையைப் பயிலவேண்டும். காலம் புண்களை ஆற்றவல்லது. நெருக்கடி நேரங் களில் நாம் அவசரமாக எடுக்கும் முடிவு பல கீனமான மனிதர்களையும் பலகீனமான திட்டங் களையும் நம்பிவிடும்; துன்பத்தில் இறக்கிவிடும்.

மன நெருக்கடியான நேரங்களைக் கடப்பது கஷ்டம் தான். அதற்காக அவசரமாக முடி வெடுத்து நமது நெருக்கடிகளை முன்னைவிட மோசமாய் நாம் செய்து கொள்ளக்கூடாது.

வளரும் இளம் வயதில் மாணவப் பருவத்தில் நமக்கு ஏற்படும் சிறு சங்கடங்களும் சிறு

தொல்லைகளும், சிறு தோல்விகளும் ஏதோ நேரக்கூடாதது நேர்ந்துவிட்டாற் போல நம்மைப் பயமுறுத்தும் வலிமை கொண்டவை. காரணம், இளவயது அதிக அனுபவங்களைப் பெறாத வயது. அனுபவங்களின் விளைவுகளை அறியாத வயது. நடுத்தர வயது— மனிதனுக்கு சுமார் 28 வயதிற்குப் பிறகு வாழ்வின் அனுபவங்களைக் கண்ட ஒரு தெம்பு கூடுகிறது. ஆகவேதான் வளரும் மாணவர்களுக்கு— இளைஞர்களுக்கு அருகில் உள்ள பெற்றோரும் ஆசிரியரும் அடிக்கடி நம்பிக்கை ஊட்டிய வண்ணம் இருக்க வேண்டும். அந்த வாய்ப்பு இல்லாத இளைஞர்கள் படிப்பு மூலம், புத்தகங்கள் மூலம், சொந்த அனுபவங் களை டயரியில் எழுதி வைப்பதன் மூலம்— டயரியை அடிக்கடி பின்னோக்கிப் பார்த்து கடந்தகாலப் பாதையிலிருந்து ஒரு தைரியத்தை எளிதில் பெற முயலவேண்டும்.

மனிதனைச் செயல்படச் செய்வது. அவன் மனதில் தோன்றும் எண்ணங்கள்தாம். பயம் நிறைந்த எண்ணங்கள் அவன் செயலை முடக்கி விடுகின்றன. அவன் எதிர்கால வாழ்வின் பெருங் கதவை அடைத்துவிடுகின்றன. பய எண்ணங்கள் அவன் உடலின் சக்தியை வடித்து விடுகின்றன. சில சமயம் பயம் வெளியே தெரியுமளவுக்குக் கை கால் உதறல் எடுக்கிறது. பயம் நிறைந்த மனிதன் நடுத்தர வயதில் படபடப்பை அடை கிறான். ரத்த அழுத்தம் அவனுக்கு அதிகமா கிறது. அவனது பய எண்ணங்கள் உடலில் நிரந்தர முத்திரையைக் குத்திவிடுகின்றன.

பயப்படும்போதோ, சோகமாயிருக்கும் போதோ ஏன் பயப்படுகிறோம்? ஏன் சோகமா யிருக்கிறோம்? என்ற ஒரு கேள்வி ஒரு சிந்தனை நமக்கு நமது பயத்தின் சோகத்தின் மூலகாரணத் தைக் காட்டும். பயப்படும் நாம் பயங்களைத் தர்க்க ரீதியாக அலசி ஆராய்வதன் மூலம், நமது நண்பர்களுடன் விவாதிப்பதன் மூலம், பிரார்த் திப்பதன் மூலம் பயத்தின் பிடிகளைக் குறைக் கலாம்.

பதிலாக மனதில் உற்சாகமான எண்ணங் களை எண்ணுவதன் மூலம், பிறருக்கு உதவும் எண்ணங்களைச் சிந்திப்பதன் மூலம், பழைய வெற்றிகளை நினைத்துப் பார்ப்பதன் மூலம் நாம் நம் மனத்தை வலிமைப்படுத்த முடியும். நமது மனம் நமக்குள் இருக்கும் ஒரு பகுதி. அதை நாம் நம் கைக்குள் வைத்திருக்க வேண்டும். நல்ல எண்ணங்கள், வெற்றியைப் பற்றிய நினைப்புகள், சந்தோஷமான அனுபவங்கள் இப்படிப்பட்ட எண்ணங்களை மட்டுமே உள்ளே விட்டு நமது மனத்தை நமது கட்டுப்பாட்டில் நாம் வைத்துக் கொள்ள வேண்டும்.

தனித்து நில்லுங்கள்

உலகின் மகத்தான சாதனைகள் எல்லாம் சாதாரணத் திறமை படைத்தவர்களாலேயே பெரும்பாலும் சாதிக்கப்படுகிறது. அவர்களது வெற்றிக்குக் காரணம் விடாமுயற்சிதான். தொடர்ந்த முயற்சிதான். எதைக் கண்டும் சளைக்காத மனம். தொடர்ந்து அந்தக் காரியத்தில் மீண்டும் மீண்டும் ஊடாடும் மனப்பக்குவம்.

இந்திய மண்ணில் பிறந்து அமெரிக்க நாட்டின் நோபெல் பரிசு பெற்ற டாக்டர் கொரானர் என்ற பஞ்சாபிக்காரர் மிக சாதாரணமானவர். இந்தியாவில் வேலை கிடைக்காமல் இங்கிலாந்து போனார். அவரது பேராசிரியர் 'டாட்' என்பார். இவரது திறமைகளில் நம்பிக்கை இல்லாது ஏதோ பேருக்கு ஓர் உபயோகமில்லாத ஆராய்ச்சித் தலைப்பைக் கொடுத்து ஆராயுமாறு அவரைப் பணித்தார். கொரானாவோ இதன் மூலம் அந்தக் காலத்தில் உபயோகமற்ற விஷயம் எனக் கருதப்பட்ட 'நியுக்ளிக் அமிலம்' என்ற துறையில் முழுப்பயிற்சி பெற்றார். பின் கனடா வந்து பல ஆண்டுகளைக் கழித்தார். பின் அமெரிக்கா வந்து பல ஆண்டுகளைக் கழித்தபோது அவரது ஒன்று சேர்ந்த

அனுபவம். அவரை அந்தத் துறையில் மன்னனாகக் காட்டியது. காலம் மாறி பாரம்பரிய ரசாயனம் மிக முக்கியத்துவத்தை அடைந்த போது அவர் பயின்ற துறை மிக முக்கியத்துவம் பெற்றது. அவர் பேச்சை ஒரு விஞ்ஞான மாநாட்டில் கேட்டேன். குற்றாலம் அருவி கொட்டுவது போல, ஒரு கவிஞனின் கவிதை போல் அவர் பேச்சு அத்தனை உயர்வாய்க் கட்டுக்கோப்பாய் இனிமையாய் இருந்தது.

ஒரு காரியத்தில் வெற்றி—தோல்வியைக் கருதாது தொடர்ந்து ஈடுபட ஒரு மனப்பக்குவம் தேவை; ஒரு மன உறுதி தேவை.

விஞ்ஞானத்திலிருந்து பொது வாழ்க்கையை, அரசியலைப் பாருங்கள். ஒரு கட்சியில் தொடர்ந்து ஈடுபடாமல் கட்சிவிட்டுக் கட்சி மாறிக்கொண்டிருந்த ஒரு மதியழகனையும் ஒரு டாக்டர் ஹண்டேயையும் பாருங்கள். அத்துடன் கட்சித் தொண்டனாக வாழ்க்கையைத் துவங்கிய காலஞ்சென்ற அமைச்சர் நடராஜனையும் வெறும் நம்பிக்கையை முன் வைத்து திரு. எம்.ஜி.ஆர். கட்சியில் சேர்ந்த எஸ்.டி. சோமசுந்தரத்தையும் எண்ணிப்பாருங்கள்.

அவர்களது விடாமுயற்சிக்கு அடுத்தபடியாக அவர்களிடம் ஒரு நம்பிக்கை இருந்தது. கடைசி வரை தனித்து நிற்கும் ஒரு துணிச்சல் இருந்தது. அடுத்தவன் பெரியவன் என்ற எண்ணத்தினால் அவர்கள் தங்களைத் தாங்களே சிறுமைப் படுத்திக்கொள்ளவில்லை. தனது பேராசிரியர் நல்ல உயர்ந்த தலைப்பொன்றைக் கொடுத்து

ஆராய்ச்சி செய்யச் சொல்லாவிட்டாலும் கொரானா மனமுடைந்து போய்விடவில்லை: அவர்கள் தங்களைப் பிறருடன் ஒப்பிட்டுக் கொண்டு அற்ப சந்தோஷங்களில் ஈடுபடவோ, அல்லது தங்களுக்கிருக்கும் சாதாரண நிலை பற்றி அவர்கள் துக்கமோ படுவதில்லை. அவர்கள் பிறருக்காக வாழ்வதில்லை. தங்களுக்காக வாழ்கிறார்கள்.

நம்மில் பலர் பிறருக்காக வாழ்கிறார்கள். அடுத்தவர் என்ன நினைப்பாரோ என்று கவலைப்படுகிறார்கள். நாம் செய்வதை ஏற்றுக் கொள்ள மாட்டார்களோ என்ற பயம் அவர்களை ஆட்டிப்படைக்கிறது.

அடுத்த வீட்டு அண்ணாசாமியோ அவர் மனைவி அம்புஜமோ என்ன செய்கிறார்கள் என்று பார்த்துவிட்டு அதேபோல் எல்லாம் தங்கள் வீட்டிலும் செய்ய வேண்டுமென்று ஆசைப் படும் பெண்கள் உலகில் அதிகம். அவர்கள் எல்லாம் சுயத்தன்மை இல்லாதவர்கள். பிறரது ஆமோதிப்பை எதிர்பார்த்து ஏங்குபவர்கள். பிறரது ஆமோதிப்பில் மகிழ்ச்சி காண்பவர்கள். பிறர் தங்கள் வாழ்க்கையை நடத்துமாறு விட்டு விடுபவர்கள். இவர்களை ஆட்டுவிக்கும் சூத்திரக் கயிற்றை விளம்பரம் செய்பவர்களோ, ஒரு சினிமாக்காரரோ அல்லது தெருக்கோடியிலுள்ள பணக்காரர் மனைவியோ வைத்திருப்பார்கள். கோகோகோலா, பாண்டா போன்ற பானங் களின் சத்துணவு குணம் பற்றிக் கருதாமல் பெரிய பணக்காரர் வீடுகளில் வழங்கப்படும்

பானம் என்பதற்காகத் தாங்களும் வழங்குவார்கள்; அருந்துவார்கள். ஒரு புடவையின் தன்மை, விலைபற்றி ஏதும் கருதாமல் அது வாங்கப்பட்ட ஏதாவது ஒரு பெரிய கடையின் பெயரைப் பெருமையோடு திரும்பத் திரும்பச் சொல்வார்கள். சமயத்தில், தேவையில்லாத சமயத்தில்கூட தங்களுக்குத் தெரிந்த பிரபல செல்வாக்குள்ள புள்ளிகளைத் தங்களுக்கு அறிமுகமானவர் என்று பேச்சுக்கிடையில் எப்படியாவது நுழைத்து விடுவார்கள்.

ஏன், இப்படிச் செய்கிறார்கள்...?

தன்னம்பிக்கையின்மைதான். அவர்களுக்கு சுயமதிப்பு கிடையாது. தன்னைப் பற்றிய கௌரவம் இருக்காது. ஆகவே பிறரைச் சார்ந்து கௌரவம் பெற முயல்கிறார்கள்.

இப்படி வாழ்க்கை நடத்தக் கூடாது. நாம் நமக்காக வாழவேண்டும்.

ஒரு சமயப்பெரியவரை ஒருமுறை சந்தித்தேன். தமிழ்நாட்டுக்காரரர். தமிழ்நாட்டில் பிறந்தவர். தாய்மொழி தமிழ்மொழி. எனினும் அவர் ஏதோ ஆங்கிலத்திலேயே பிறந்தவர் போல ஆங்கிலத்தில் தமிழ் மக்களுடன் உரையாடிக்கொண்டிருந்தார். எனக்கு அப்போது சர். ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் ஒரு சமயம் மீட்டிங்கில் கூறிய வாசகம்தான் நினைவுக்கு வந்தது. அவர் இங்கிலாந்து போய் வந்ததை அறிந்த கோவைப் பக்கத்து கிராமவாசிகள் 'தம்பி'யைப் பார்க்க வந்தார்களாம். பார்த்து அப்படியே மலைத்துப் போனார்களாம், பின்னர் கேட்டார்களாம்,

“தம்பி இங்கிலீஷ்லேயேதான் குளிக்குங்களா?” என்று!

நான் சமயத் தலைவரைக் கேட்டேன்? “ஏன் இப்படித் தமிழ் மக்களுடன் ஆங்கிலத்தில் பேசுகிறீர்கள்...?” என்று. அவர் சொன்னார்:

“தமிழில் பேசினால் அது நமது தொண்டர்களிடையே நமக்கு கௌரவத்தைத் தராது” என்று.

ஏசு கிறிஸ்து சொன்னார் தனது பன்னிரண்டு சீடர்களிடம்: “எல்லா நாடுகளுக்கும் செல்லுங்கள் அவர்களுடன் கலந்து பழகுங்கள். அவர்கள் மொழியைக் கற்றுக்கொள்ளுங்கள். அவர்கள் மொழியிலே அவர்களுக்குப் புரியுமாறு உபதேசம் செய்யுங்கள். நல்வழி காட்டுங்கள்!” என்றார்.

அதனால்தான் கிறிஸ்துவ சமயம் உலகின் எல்லா பாகங்களிலும் இன்று பரவியிருக்கிறது. பயிலப்படுகிறது.

பிறர்தரும் ஆமோதிப்பு போய்விடும் என்று பயந்திருந்தால் மகாத்மா காந்தி அரைஞான் வேஷ்டியை இடுப்பில் சுற்றியிருக்க மாட்டார். நல்ல வக்கீல் வேலையை விட்டுவிட்டு நேருவும்; ராஜாஜியும் நாட்டுப் போராட்டத்தில் இறங்கியிருக்க மாட்டார்கள். மூட நம்பிக்கைகள் மலிந்து போயிருந்தபோது தனித்து நின்று, காங்கிரசில் இருந்து வெளியே வந்து திராவிட நாடு இயக்கத்தைப் பெரியார் துவங்கி இருக்கமாட்டார். பெரியார் அன்று எத்தனை எதிர்ப்புகளைத்

தனித்து நின்று சமாளித்தார் என்பதைப் பின்னோக்கி எண்ணிப் பாருங்கள்.

"புத்தருக்குப் பிறகு எந்த சமூகச் சீர்திருத்த வாதி இந்தியாவில் தோன்றினான் என்னைத் தவிர?" என்று ஒரு சமயம் பெரியார் கேட்டார். அவரைப்பற்றி எழுதும் மேல்நாட்டுப் பேராசிரியர்களும் அதையேதான் கேட்கிறார்கள்.

தனித்து நின்றுதான். துணிச்சலோடு நின்று தான் — மகத்தான சாதனைகளும், மகத்தான புரட்சிகளும் உலகில் நிகழ்ந்திருக்கின்றன.

சுயமாகச் சிந்தியுங்கள். தனித்து நில்லுங்கள். முதலில் எண்ணங்களில் புரட்சி நிகழட்டும்.

நிகழும் சம்பவங்களை மனம் பார்க்கும் விதம்...

சில சமயம் பிரச்சினைகள் நிறைய இருக்கும் போது அவற்றை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்ற பயம் ஏற்படும். 'பட்ட காலிலே படும்' என்ற வாசகத்திற்கிணங்கப் பயந்து போயிருப்பவனுக்கு மேலும் அதுபோன்ற காரியங்கள் நிகழ்கின்றன. காரில் பயணம் செய்து கொண்டிருந்தபோது ஒருநண்பர் ஒரு கார் விபத்தைப் பற்றி விரிவாக வருணித்துக்கொண்டிருந்தார். சற்று நேரத்திற்கெல்லாம் காரோட்டி வந்த நண்பர் கூறினார்: "கார் ஓட்டும்போது கார்விபத்து— மற்ற எந்த விபத்துக்களையும் பற்றிப் பேசக்கூடாது. மனம் அப்படி விபத்தை எதிர் நோக்கி 'கண்டிஷன்' ஆகிவிடும்" என்றார். எல்லோரும் 'கப்சிப்'பென்று ஓய்ந்துவிட்டார்கள்.

காரோட்டிய நண்பர் கூற்றில் ஏராள உண்மை இருக்கிறது. மனம் எதை நம்புகிறதோ அதை எதிர் பார்க்கிறது. மனம் எதை எதிர்பார்க்கிறதோ அது நடக்கிறது. அகவே, 'பட்டகாலிலேயே படும்' என்ற வாசகத்தின் உண்மை எப்படி நிகழ்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

பிரச்சினைகள் குழப்பமாக இருக்கும்போதும் அச்சமேற்படும். வேறு வேலை இல்லாமல் உட்கார்ந்திருக்கும்போது சில சிறு பிரச்சினைகள்கூட மிகப் பெரிய பிரச்சினையாய் மனத்தை அலைக்கழிக்கும். சத்தம் நிறைந்த பெரிய தொழிற்சாலையில்கூட ஒரு கவிஞன் உட்கார்ந்து கொண்டு அந்தச் சப்தமே பாதிக்காதவாறு, ஒரு கவிதையே எழுதிவிட முடியும். அதே கவிஞன் இரவில் தூக்கம் வராமல் புரளும்போது, கேவலம் ஒரு சுவர்க்கோழி போடும் சப்தம் தலையைப் பிளப்பதாக உணர்வான். காரணம் வேலை ஈடுபாடு, நமக்கு வேலை இருக்கும்போது — அடுத்தடுத்து வேலை வைத்துக் கொண்டிருக்கும் போது — நமக்குக் கவலைப்பட நேரமில்லை. அச்சப்பட நேரமில்லை. 'வருவது வரட்டும்' என்ற மனோநிலையில் மனிதன் தன் காரியத்தில் ஈடுபடுகிறான்; போய்க்கொண்டே இருக்கிறான்.

ஒரு வேலையைச் செய்வது — ஒரு வேலையில் ஈடுபடுவது— காந்த சக்திகொண்டது. அப்போது அவனுக்கு அது 'முடியுமா, முடியாதா?..'' என்று ஆரூடம் பார்க்க நமக்கு நேரமிருப்பதில்லை. முடிவைப் பற்றிய நினைவே இல்லாமல் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றான். அவன் முடிவைப் பற்றி — பலனைப் பற்றிக் கவலைப் படாதே; உன் தொழிலைச் செய்' என்று கூறுகிறது பகவத்கீதை.

முடியாதென்று பலர் சொன்னார்கள். ஆனால், அது முடியாதென்று அவனுக்குத் தெரியாது. காரியத்தில் ஈடுபட்டான். முடித்து விட்டான். முடியாதென்பது தெரிந்திருந்தால் அவன் முடித்திருப்பானோ என்னவோ! என்கிறது ஒரு ஆங்கிலக் கவிதை.

தன்னம்பிக்கைக்கு மருந்து வேலைதான்; காரியம் தான்; செயல்தான்.

"எனக்கு எழுத வராது' என்று சொல்லிக் கொண்டோ, 'எனக்கு எழுத நேரமில்லை' என்றோ சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி எழுத்தாளனாக ஆகமுடியும்? எனக்கு எழுத வராது என்று சொல்லாதீர்கள்; நான் எழுத முயற்சித்ததில்லை என்று சொல்லுங்கள். நான் நாட்டியம் ஆட முயன்றதில்லை என்று கூறுங்கள்'' என்று அறிவுரை வழங்குகிறார்கள் மன நூலார். இரண்டு மூன்று முறை ஒரு காரியத்தில் தவறிவிட்டால் நான் அதிர்ஷ்டக் கட்டை என்பது எப்படி? அதற்குப் பதிலாக, 'நான் இம்முறை மூன்றாம் முறை தவறிவிட்டேன்' என்று சொல்வது எப்படி....? 'நான் அதிர்ஷ்டக் கட்டை. எனக்குப் படிப்பு வராது. என்னால் பந்தை வீசி எறிய முடியாது' என்றெல்லாம் கூறி நாம் மனத்தை நம்ப வைத்தால் நம் மனம் அதை அப்படியே எற்றுக்கொள்கிறது. இதைவிட நாம் நமக்குச் செய்யும் தீமை வேறு கிடையாது. அதற்குப் பதிலாக 'என்னால் முடியும். நான் எந்தக் காரியத்தையும் சிறிது சிறிதாகச் செய்து

விடுவேன்' என்ற மனோ பாவத்தில் எண்ணங்களை மனத்திற்குள் போடும்போது, நம்முள்ளே இருக்கும் இளைஞனை நாம் தட்டிக் கொடுக்கிறோம்; ஊக்கமூட்டுகிறோம்.

நல்ல வேலைகளில் சுறுசுறுப்பாக சதா ஈடுபட்டிருக்கும் மனிதன் ஒரு கவலையைக் கையாள்வதற்கும் வேலையில்லாமல் வீட்டில் உட்கார்ந்திருக்கும் ஒருவன் ஒரு கவலையைக் கையாள்வதற்கும் பெரிய வித்தியாசமிருக்கிறது.

எனது நண்பர் வேலையிலிருந்து வீடு திரும்பியதும் அவர் மனைவி, "அது இல்லை இது இல்லை" என்றோ, "அப்படிக் கடிதம் வந்தது, இந்த வேலை செய்யாமல் தேங்கிக் கிடக்கிறது" என்றோ ஏதாவது ஒரு காரணத் திற்காகத் தினம் ஒரு சச்சரவை எழுப்பிக்கொண்டிருந்தார். என் நண்பருக்கு நாற்பது வயது. காதலித்துத் திருமணம் செய்துகொண்ட மனைவி. அவருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. நேராக ஒரு நாள் ஒரு மன சிகிச்சை நிபுணரிடம் இருவரும் சென்ற ஒருவரைப் பற்றி ஒருவர் தங்கள் குறைகளைக் கூறினார்கள். நிபுணர் கடைசியில் கூறினார்: "குழந்தைகள் எல்லாம் வளர்ந்து கல்லூரிக்குப் போய்விட்டார்கள். வீட்டிலோ நீங்கள் இருவரும்தான். கணவரோ காலையில் போனால் மாலையில்தான் வருகிறார். ஏதாவதொரு வேலை என்று போய் செய்து பாருங்களேன்!" என்றார். என் நண்பரின் மனைவி வேலைக்குப் போனார். பணத்திற்குப் பணம் வந்தது. அங்கே ஒரு புதிய உலகமே இருந்தது.

இப்போது தாம்பத்தியம் சுகமாக நடை பெறுகிறது.

வீட்டில் செய்வதற்கு வேலை இல்லை என்றால் மனைவியும் சரி தாயாரும் சரி, மாமனார், மாமியாரும் சரி, அவர்கள் தங்களுக்கும் பிறருக்கும் கஷ்டமாக, சுமையாகப் போகும் அபாயம் உண்டு. 'சோம்பேறியின் மனம் சைத்தானின் குடியிருப்பு' என்றோர் ஆங்கில வாசகம் இருக்கிறது. இது ஆண்—பெண் அனைவருக்கும் பொருந்தும். ஆகையினால்தான் நாம் எங்கிருந்தாலும் நமக்கென்று ஒரு நெறிமுறையை சில வேலைகளை வைத்துக் கொள்ளவேண்டும். வேலை செய்வதில் ஆத்ம நிறைவு உண்டு.

செயலில் ஈடுபடும்போது ஒரு திருப்தி ஏற்படுகிறது. ஒரு நிறைவு ஏற்படுகிறது. எல்லாருக்கும் வேலை செய்து வெற்றிபெறும் ஆசை இருக்கிறது. ஆனால் பெரும் பாலோர் முயலும் முன்னரே தளர்ந்து போகிறார்கள். வெற்றி கண்ணுக்குத் தெரியும்போது கடைசி நிமிடத்தில் காரியத்தில் நம்பிக்கை இழந்துவிடுகிறார்கள். கடைசி நிமிடம் ஒரு சோதனையான நேரம். மனம் தளர்ந்து போனாலும் நாம் காரியத்தில் தொடர்ந்து ஈடுபட்டோ மானால் அப்போது நம்மை அறியாத ஒரு இரண்டாவது சக்தி— தெய்வீகசக்தி — அடுத்த அலை ஓட்டமாக நம்முள் புகுந்து புறப்படுகிறது.

ஷேக்ஸ்பியர் எழுதுகிறார்: ''மனித வாழ்க்கையில் ஓர் அலையோட்டம் உண்டு. அது வெள்ளம்போல் புரண்டு எழும் சமயத்தில் அதிர்ஷ்டத்தைக் குவிக்கிறது' என்று.

அலையோட்டம்— அலையில் மேடும் பள்ளமும் உண்டு. அது பள்ளத்தில் இருக்கும் போது மனத்தளவில் உடலளவில் எல்லாருக்கும் அதைரியமும், அச்சமும் இயலாமை எண்ணங் களும் எழுவது சகஜம். இந்த உலக இயல்பை நாம் உணர்ந்திருப்பது அலையோட்டத்தில் இந்தக் கீழ்நிலையைக் கடக்க மிகவும் உதவும். இது உலக இயல்பு என்று நாம் மனந்தேற வேண்டும்.

சில சமயம் தோல்விகள் வரும்போது மனங் கலங்கும்போது தன்னம்பிக்கை தளரும்போது நாம் காலக் கண்ணாடியில் நமது சம்பவத்தைப் பார்க்க வேண்டும். கால ஓட்டத்தில் இன்று நிகழும் ஒரு தோல்வி ஓராண்டுக்குப்பின், ஐந்தாண்டுகளுக்குப்பின் ஒரு பத்தாண்டுக் காலத்தில் எத்தனை சிறுத்துப் போகும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். 'காலம் எல்லாவற்றையும் குணமாக்கவல்லது; எல்லா வற்றையும் தள்ளி ஓடிக்கொண்டிருப்பது' என்ற உண்மையை உணரும்போது நாம் எளிதில் அதைரியத்திலிருந்து மீளமுடியும். அதுமட்டு மல்ல, அந்த அலையின் கீழ்ப் பகுதியை நாம் கடந்துவிட்டால் அடுத்த நிலை அலையின் மேற் பகுதிதான். அது நம்மை உயரே தூக்கிவிடும். அதைத்தான் ஷேக்ஸ்பியர் கூறுகிறார்.

முன்னுக்கு வந்த 'ரிங்கர்' என்ற ஒரு செல்வந்தர் தன் அனுபவத்தைக் கூறுகிறார்.

"வானத்தை நோக்கி அண்ணாந்து பார்த்துப் படுத்திருப்பேன். அங்கே லட்சோப லட்சம் நட்சத்திரக் கூட்டங்கள் தெரியும். அதிலே உள்ள

சூரியன் என்ற ஒரு நட்சத்திரக் குடும்பம் அதன் பிடியில் உலவும் ஒரு பூமியில் ஏதோ ஒரு கண்டத்தில் ஒரு பெரிய நகரில் ஒரு தெருவில் ஒரு தனி வீட்டில் சின்னஞ் சிறியவனாகப் படுத்திருக்கும் நான் யார் என்ற கேள்வி எழும். எல்லாம் ஏதோ வேடிக்கைபோலத் தோன்றும். வாழ்க்கையே விளையாட்டு போலத் தோன்றும். இதில் போய் மனிதன் தோல்வியைப் பெரிதாக எடுத்துக்கொண்டு விசனப்படுவது என்ன வேடிக்கை! என்று எண்ணுவேன்'' என்கிறார் அவர்.

வாழ்க்கைத் தத்துவங்கள் வாழ்வின் கஷ்ட நஷ்டங்களை நமக்கு லேசாக்கித் தருகின்றன.

நமது குறைகளை நம்மால் மீறமுடியும்...

வாழ்க்கை பயனுள்ளதாக இருக்கவேண்டும், அமைய வேண்டும் என்று இங்கு நாம் கூற வில்லை; 'நாம் அமைக்க வேண்டும்' என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நம்மை மீறி துன்பங்களும், துயரங்களும், பிணியும் நோயும் வருகின்றனவே, அவை நம் கையிலா இருக்கிறது என்று கேட்பவர்கள் உண்டு. வாழ்வில் அப்படி நம் கையில் இல்லாத சம்பவங்கள் மிகமிகக் குறைவாகத்தான் நிகழ்கின்றன. வாழ்க்கைச் சம்பவங்களில் 99 சதவிகிதம் நம் செயல்களாலும் சிந்தனைகளாலுமே விளைகின்றன. இதை நாம் சதா நினைவில் கொள்ளவேண்டும். என்று 'வாழ்க்கை நம் கையில் இல்லை' என்று கைவிடு கிறோமோ அன்றே நாம் எடுப்பார் கைப்பிள்ளை யாய், அதிர்ஷ்டத்தை எதிர்பார்ப்பவர்களாய் கெட்டது என்ன நேருமோ என்று அஞ்சுபவர் களாய் வாழத்துவங்குகிறோம்.

எதிர்பாராத சம்பவங்கள் — நம் செயலுக்கு அப்பாற்பட்ட சம்பவங்கள் அப்படியே நிகழ்ந்து நம் வாழ்வைப் பாதிக்கின்றன என்று வைத்துக் கொள்ளுங்கள் அப்போது அதற்கு அடுத்த

படியாக மேற்கொண்டு செய்ய வேண்டிய காரியம் அனைத்தும் நம் கைக்குள் இருப்பனவே என்பதை நாம் உணர வேண்டும்.

எனது நண்பர் ஒருவர் பெரும் வழக்கறிஞர். இளம் வயதில் பஸ்ஸில் போகும்போது மற்றொரு லாரி வந்து மோத கை கால் ஊனமுற்றவராய்ப் போனார். கை வண்டியில் அவரை அவர் மனைவி நீதிமன்றம் வரை தள்ளிக்கொண்டு வருவார். அவர் முகத்தில் புன்சிரிப்பு தவழும். குரல் கணீரென்று வரும். நம்மைப் பார்த்து கலாட்டா செய்வார். வீடோ சபையோ கலகல வென்றிருக்கும். விரல்களால் எளிதில் டைப் செய்ய முடியாது. விரல்களில் தெம்புக்கு நாடாவைச் சுற்றிக் கொண்டு தட்டெழுத்துகளை அழுத்துவார். அவர் வழக்கறிஞர், கை கால் ஊனமடைந்தவர். அவரை நாடி யோசனை கேட்க தைரியம்பெற அவர் வீட்டின்முன் நிற்கும் கும்பலைப் பார்ப்பேன். கை கால் முழுமையாக உள்ளவர்கள், கம்பீரமான உருவம் பெற்றோர். கெடிலாக் காரில் வந்து இறங்குபவர்கள், புகழ் பெற்றவர்கள், இவர்களெல்லாம் வந்து யோசனை கேட்குமாறு, மதிக்கு மாறு, நம்புமாறு இவரிட மிருந்து தைரியம் பெறுமாறு அவர் தன்னை வைத்துக்கொண்டிருக்கிறார்.

உயர்நிலைப்பள்ளி மாணவனாய் இருந்த போது ஏற்பட்ட ஊனம் அவரை எந்தவிதத் திலும் பாதித்ததாகத் தெரியவில்லை. ஒரு கணம் கூட தன் வலியை உடல் நோவை உடல் குறை பாட்டைப் பற்றிப் பேச மாட்டார். கல்லூரியில் மாடிக் கட்டடத்தில் பாடம் நடக்குமாம் — ஏறிப்போக லிப்டுகள் இல்லாத காலம்.

எப்படி இவர் இதையெல்லாம் மீறி வந்தார் என்று நான் யோசிப்பதுண்டு. அவர் தன் குறை பாட்டினைக் கண்டு புலம்பவில்லை. பெரிது படுத்தவில்லை. பிறர் இரக்கத்தை எதிர்பார்ப்பது கேவலம் என்ற மனோபாவம் இருக்கிற நிலையில் எப்படி வாழ்வது என்று தீர்மானித்தார். இன்று மக்கள் தங்கள் குறைகளை, துன்பங்களை, வழக்கு களை, பிணக்குகளை அவர் முன் வைக்கிறார்கள்.

எதிர்பாராமல் அப்படி ஏதேனும் தெய்வா தினமாக நடந்துவிட்டால், அதற்காகப் புலம்ப வேண்டியதில்லை. பிறர் அனுதாபத்தைப் பெற வேண்டும் என்று அவர் வேண்டியதில்லை. யார் அப்படிச் செய்ய முடியும்? தன்னைப் பற்றிப் பெருமையான எண்ணங் கொண்டவன்; தன் காலிலே வாழ விரும்புபவன்; தன் ஆத்மாவை யாருக்கும் அடிமைப்படுத்த விரும்பாதவன். நம் ஆத்மாவின் அத்தகைய மனோபாவம் மிளிர வேண்டும் நம்மிடம்.

பீத்தோவன் என்ற இசை மேதைக்குக் காது சரிவரக் கேட்காது. ஆனால் அது அவரது இசைப் பெருக்கை இசை உணர்வை எந்த விதத் திலும் கட்டுப்படுத்தவில்லை. ஹெலன் கெல்லர் பிறவியிலேயே குருடாகப் பிறந்த பெண்மணி. எல்லா இக்கட்டுகளையும் மேக்கரித்து ஒரு புகழ் வாழ்வு வாழ்ந்த பெருமகள். எனது ஆசிரியர் ஒருவருக்குத் திக்குவாய் இருந்தது. ஆனால் அது அவரை ஒரு கல்லூரி விரிவுரையாளராக பேராசிரியராக இருப்பதிலிருந்து எந்தவிதத்திலும் தடை செய்யவில்லை.

சரித்திரத்திலும் சரி, இன்றைய சமூகத்திலும் சரி, இத்தகைய மனிதர்களை நாம் நிறைய

சந்திக்கக் கூடும். குறைபாடுகளைப் பெறுவதனால் மனிதன் இழிவடைவது இல்லை; கேவலமாகிவிடுவது இல்லை. குறைபாடுகளை மீறி ஒளிவிடும்போது— வாழும்போது—அவன் அதிமனிதனாகிறான்.

பேராசிரியர் 'கல்கி' அவர்களுக்குப் போக்க முடியாத ஆஸ்த்மா நோய் இருந்தது. 'இது பெரிய மனிதர்களுக்கே ஏற்படும் வியாதி' என்று பெருமைப்பட்டுக் கொண்டார் அவர்!

பிறவிக் குறைபாடுள்ளவர்களும் இயற்கையால் துன்பம் எய்தியவர்களும் அதை எல்லாம் மீறி அற்புதமாக வாழும்போது எல்லாம் இருப்பவர்கள் உப்புப் பெறாத விஷயங்களுக்கும் உப்புப் பெறாத மக்களுக்கும் பயப்படுவதும் நிகழ முடியாத விஷயங்களை எண்ணிக் கவலைப் படுவதும் அவர்களது சிறுமைத்தனத்தை — கையாலாகாத் தனத்தையே காட்டுகின்றன.

இவர்களைப் பார்த்தால் இவர்கள் வாழ்க்கையை ஆராய்ந்தால் இவர்கள் எங்கோ வாழ்க்கை நூலை தவற விட்டிருப்பது தெளிவாகும். வாழ்க்கை நூலை சிக்கலாக்கிக் கொண்டிருப்பது புரியும். தங்கள் கையில் உள்ள வாழ்க்கை நூல் என்ற பந்திற்குத் தாங்கள் காரணமல்ல என்று இவர்கள் முறையிடுவார்கள். நூலைச் சரியாக எடுத்துவிடவில்லை என்றால் நூல் சிக்கலாகத் தான் போகும். அதற்கு நாம்தான் காரணம். சிக்கலாகும்போது சற்றுப் பொறுமையுடன் அவசரமின்றிச் சிக்கல்களை எடுக்க முயல வேண்டும். அறிஞர் அண்ணா எழுதுவார்: "நான் போய் மேஜையில் இடித்துக்கொண்டேன்" என்று

சொல்லமாட்டோம்! 'மேஜை இடித்துவிட்டது' என்போம். மேஜைக்கு என்ன கை காலா இருக்கிறது, நகர்ந்து வந்து நம்மை இடிக்க...!'

எல்லாம் நமது மனோபாவக் கோளாறுதான் காரணம். நாம் பார்க்கும் விதம்தான் காரணம். தம்ளரில் தண்ணீர் இருக்கும்போது, 'அரைத் தம்ளர் காலியாய் இருக்கிறது' என்றும் சொல்லலாம் அல்லது 'அரைத் தம்ளர்வரை தண்ணீர் இருக்கிறது' என்றும் சொல்லலாம். நாம் எப்படிப் பார்க்கிறோம் என்பதைப் பொறுத்துத் தான் அது அமைகிறது. ஒரு பள்ளியில் மாணவன் செய்த வீட்டுப்பாடத்தைப் பார்த்து. நல்லவற்றிற்காக அவனைப் பாராட்டலாம். அவன் வளர்வான்; மாறாக அவன் செய்த குறைகளை விரிவாக விமர்சனம் செய்யலாம்; அவன் தன்னம்பிக்கை யற்றுப் போவான்.

அரசியலில் நல்லவற்றைப் பாராட்டுகிறார்களா— இல்லை, கெட்டவற்றைத் தேடிப்பார்த்துத் திட்டுகிறார்களா என்று கவனியுங்கள். ஒரு நாடு போகுந்திசை அந்நாட்டு மக்கள் எப்படி நல்லவனைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதைப் பொறுத்தது. நல்ல விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பது; அபாண்டமான குற்றச்சாட்டுக்களை எப்படி அசட்டை செய்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பது.

மக்கள் எவ்வளவுக்கெவ்வளவு நல்ல விஷயங்களில் நல்ல எண்ணங்களில், நல்ல செயல்களில் ஈடுபடுகிறார்களோ அத்தனைக்கத்தனை நாடு நலத்தை நாடிப் போய்க் கொண்டிருக்கும். நாட்டு எண்ணங்களில் என்று சுயநலமும், தற்புகழும்,

பீதியும், கலகமும், பயமும், அவலமும் நிறைந்திருக்கிறதா— அந்த நாடு அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும். இது உலக விதி.

தனிமனித வாழ்வை இயக்கும் துடிப்பு — வாழ வேண்டுமென்ற ஒரு துடிப்பு. எதுவும் முடியும் என்ற துடிப்பு. அது நல்லெண்ணங் களால் விளையும் செயல்களின் துடிப்பு. Positive thinking என்ற ஆங்கில வார்த்தைக்கே சமீப காலத்தில் ஒரு முக்கியத்துவம் கொடுத்த அமெரிக்க சிந்தனையாளர் நார்மன் வின்செண்ட் பீல் ஆவார். அவரின் அந்தக் கருத்தை— தமிழிலே அதைச் சொல்வோமானால், ‘நல்ல பயன் விளைக்கும் சிந்தனைகள்’ என்று கூறலாம்.

உண்மை, வீரம், தைரியம், அழகு, பெருந் தன்மை, பிறருக்கு உதவுதல், மன்னிக்கும் மனோ பாவம், அன்பு, கருணை, காதல் இவை எல்லாம் நம்மில் நல்ல பயன் விளைவிக்கும் சிந்தனைகள், மாறாக வஞ்சம், பொறாமை, காமம், தீங் கெண்ணுதல் இவை எல்லாம் தீமை விளை விக்கும் எண்ணங்கள். நம் வாழ்வைக் கெடுக்கும் — சிக்கலாக்கிவிடும் எண்ணங்கள்.

அந்த உண்மைகள் தனிமனித வாழ்விற்கும் பொருந்தும்; பொதுவாழ்விற்கும் பொருந்தும், ஏன் இதை நமது அரசியல் தலைவர்கள் உணர்வ தில்லை? பொய் பேசியே மக்களை ஏமாற்றி விடலாம் என்று ஏன் நம்புகின்றனர்? அரசியல் பேராசிரியர் பாபர் என்பார் கூறுகின்றார்; தலைவனது இன்றைய செயல்கள் அவன் நேற்று எந்த எண்ணங்களால்— பழக்கங்களால், பயங்

களால் வளர்ந்தான் இளைஞனாய் என்பதைப் பொறுத்தது' என்கிறார். கென்னடியும் நிக்சனும் வளர்ந்த விதம் வேறு. 'உலகம் தன்னைச் சரிவர நடத்தப் போவதில்லை. ஆகவே, தான் தயாரா யிருந்து வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டும்' என்ற பயத்தில் இளைஞனாய் வளர்ந்தார் நிக்சன்.

தன்னம்பிக்கையில்லாது, பிறர் தன்னைப் பற்றி என்ன சொல்லிவிடுவார்களோ என்ற பயத் தில் நிக்சன் வளர்ந்தார். வாழ்ந்தார். ஜனாதிபதி என்ற பெரிய பதவி கிடைத்ததும் அவரது வஞ்ச மனோபாவமே அவருக்கு அழிவாய் — எமனாய் அமைந்தது.

ஆகவேதான் குழந்தைகளை வளர்க்கும் போது நாம் மிகக் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். தன்னம்பிக்கையூட்ட வேண்டும்; பாராட்ட வேண்டும்; மன்னிக்கும் மனோ பாவத்தை வளர்க்க வேண்டும். "ஒரு பரீட்சை யில் தவறிவிட்டால் உலகமே இருண்டு விடாது. படிப்பும்—பரீட்சையும் வாழ பல வழிகளில் ஒரு வழி" என்று சொல்லிக்கொடுக்க வேண்டும். குழந்தைகள் பிற மனிதர்களையோ, பிறர் எண்ணங்களையோ சம்பவங்களையோ கண்டு பயப்படாதிருக்க— கலங்காதிருக்க நாம் தைரிய மூட்டி வழிவகைகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

ஏன்...? நாளை ஒருநாள் உங்கள் மகன் நாட்டின் தலைமகனாய் நாடாள அமர்வான். நாடு உங்கள் மகனால் நலம்பெற வேண்டாமா?

நமது சிந்தனைகளே
நமது முன்னேற்றத்தின் திறவுகோல்

எதிர்பாராது சில நல்ல சம்பவங்கள் நிகழும் போது பலர் பூரித்துப் போகிறார்கள். 'அதிர்ஷ்டம்' என்று ஆரவாரம் செய்கிறார்கள். அதே போல எதிர்பாராது சில துர்ச்சம்பவங்கள் நிகழும்போது பலரும் நொந்து போகிறார்கள். உலகின்மீது சீற்றம் கொள்கிறார்கள். நல்லதல்லாதவைகளை நாம் தடுக்க முயலவேண்டும். தடுக்க முயலாத போது அது நம் கையில் இல்லாதபோது நிலைமைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக குறைபடக் கூடாது; கோபப்படக் கூடாது. குற்ற உணர்வுடன் வாழக்கூடாது.

எப்போது மனிதன் தான் இருக்கும் நிலையினை ஏற்றுக்கொள்கிறானோ அப்போதுதான் நாம் சூழ்புறத்துடன் அமைதியுடனிருப்போம். நமக்கும் சூழ்நிலைக்கும் ஓர் அமைதி, சமாதானம், அன்பு ஏற்படும். அத்தகைய உறவு ஏற்படும்போதுதான் மனம், தான் இருக்கும் நிலையினை மீறிவரப் புதிய வழிகளைக் காண்கிறது. நமது சூழ்நிலை நம் கண்ணுக்கெதிரே அதற்கான வழிபுலன்களை நமக்குக் காட்டுகிறது.

‘எங்கு நாம் இருக்கிறோமோ அங்கு நாம் ஒரு காரணத்திற்காக வைக்கப்பட்டிருக்கிறோம்’ என்கிறார் தத்துவஞானி ஜேம்ஸ் ஆலன். உலகில் எல்லாம் காரணகாரியங்கட்கு உட்பட்டுத்தான் நடக்கின்றன. உலகம் அப்படித்தான் இயங்குகிறது. சிலசமயம் காரணங்கள் தெளிவாக இருக்கும். சிலசமயம் காரணம் நமக்குத் தெளிவாகப் பிடிபடாது. காரண—காரியம் என்ற அந்தத் தத்துவ நோக்கில் உலகைக் காணும்போது நம் உள்ளத்தில் ஓர் அமைதி தோன்றுகிறது. நாம் அறிய முடியாத காரணத்தைத்தான் ‘ஊழ்வினை’ என்றும் முன்வினைப் பயன் என்றும் ‘சிலப்பதிகாரம்’ கூறுகிறது. “இம்மையில் நீ செய்ததெல்லாம் நல்லனவே ஆயிற்றே, உனக்கு இப்படி ஏன் வந்தது?’’ என்கிறான் மாடலன் கோவலனைப் பார்த்து.

நம்மால் அறியப்பட முடியாத காரணத்திற்காக நாம் கவலைப்பட வேண்டியதில்லை. அதை அறிந்துகொண்டு தான் தீருவேன் என்று வழ்வை— காலத்தை வீணாக்கவும் வேண்டியதில்லை. ஒரு காரியத்தை எடுக்கும்போது எதை எதை எல்லாம் செய்ய வேண்டுமோ எப்படியெல்லாம் திட்டமிட்டுப் பாடுபட வேண்டுமோ அதை நாம் செய்துவிட வேண்டும். பின் பயனை ஆண்டவனுக்கு விட்டுவிட வேண்டும். இதைத்தான் ‘தொண்டு செய்; பலனைப் பற்றிக் கருதாதே’ என்று பகவத்கீதை கூறுகிறது. அதன் உட்பொருளை மகாத்மா காந்தி அடிக்கடி உபதேசித்தார்; வாழ்ந்து காட்டினார்.

நமது நாட்டிலோ உழைப்பதற்கும், செயலுக்கும் சோம்பற்பட்டுக்கொண்டு, 'வருவது வரும், நிகழ்வது நிகழும்' என்று சும்மா இருந்துவிடுகிறார்கள். ஊழ்வினை—முன்வினை— என்ற கருத்துக்கள் விவரமறியாதவர்களை முடக்கிவிடும் வாதநோயாகப் பயன்பட்டு வருகிறது. என்று நாம் செயலற்று வாழத் துவங்குகிறோமோ அன்றே நாம் வாழ்க்கையின் முழுமுதற் கொள்கைக்கு எதிராகச் செயல்படுகிறோம்.

வாழ்க்கையின் முழுமுதற் கொள்கைதான் என்ன? செயல், தொண்டு, பணி, கருமம், உழைப்பு. பிறந்த உயிர் வாழத் துடிக்கிறது. அது ஜீவத் துடிப்பு. அந்த ஜீவத்துடிப்பு நம் எல்லோருள்ளும் இருக்கிறது. அந்த ஜீவத்துடிப்பை சோம்பேறித் தனத்தினாலோ அறியாமையினாலோ அடக்கி ஒடுக்கி சோம்பலில் சுகம் காண முயல்வோர், முன்வினைப் பயன்படி நடக்கட்டும் என்று சமாதானம் காண்போர் வாழ்க்கையின் முதல் விதிக்கு எதிராகச் செயல்படுகிறார்கள். எங்கே முன்னேற முடியும்?

உயிர் நம்மிடமிருக்கிறது; ஜீவத் துடிப்பு நம்மிடம் துடிக்கிறது. விளையாட வேண்டிய பொறுப்பு நம்முடையது. வாழ்க்கை எனும் ஆட்டத்தை பயனுள்ளதாக நமக்கும் பிறருக்குமாக ஆடவேண்டிய கடமை நம்முடையது வாழ்க்கை ஒரு வாய்ப்பு. மனிதன் தன் அறிவின் மூலமும், அன்பின் மூலமும் ஜீவ இயக்கத்தின் ஒவ்வொரு சம்பவங்களின் மூலமும் அதிமனிதனாக — தேவனாக ஆகும் வாய்ப்புத் தரும்

பள்ளிக்கூடம்தான் வாழ்க்கை என்கிறார் அரவிந்தர். அதையேதான் டெயில்டி சார்தேன் என்ற பிரெஞ்சு நாட்டு கத்தோலிக்கப் பாதிரியார்— விஞ்ஞானியும் கூறுகிறார்; உலகெங்கும் உண்மை ஒன்றுதான். அது பாண்டிச்சேரியில் கூறப்பட்டாலும் சரி, பாரிசில் கூறப்பட்டாலும் சரி, உண்மையும் அதுவேதான். வாழ்க்கை ஒரு தண்டனை அல்ல வாழ்க்கை ஆத்மாவுக்கு ஏற்படும் ஒரு பேரனுபவம். அரிய பள்ளிக்கூடம். அறிவு பெற அனுபவத்தில் முதிர ஒரு பெருவாய்ப்பு.

இந்த உலகில் பிறந்த ஒவ்வோர் உயிரும் அணுவும் ஒரு காலத்தில் ஒரு பிரபஞ்சத்திலிருந்து ஒரு பரம்பொருளிலிருந்து உருவானவை. அதை எல்லாம் உயிர்களும் அணுக்களும் முடிவில் அந்தப் பரம்பொருளை நாடவே அவாவுகின்றன. இதுவே ஆத்மாவில் அடக்கமான துடிப்பாக இருக்கிறது.

ஏன் மனிதன் உலகில் பிறந்திருக்கிறான் என்பதை உணரும்போதுதான் நாம் வாழ்க்கையின் நோக்கத்தைப் புரிந்துகொள்ள முடியும். அது புரியும்போதுதான் நாம் அதை இனிமையாக, அழகாக நமக்கும் நம் சமூகத்திற்கும் பயன்பெறும்படி வாழ முடியும்.

பௌதிக விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பேரறிஞர்கள் எல்லாம் "பௌதிக ஆராய்ச்சியின் முடிவு பௌதிகத்திற்கும் அப்பால் பௌதிக நிலையைத் தாண்டி நிற்கும் மாபெரும் படைப்புச் சக்தியில் போய் முடிகிறது" என்கிறார்கள்.

உழைக்க வேண்டிய அளவுக்கு உழைத்து விட்டுப் பலனைப்பற்றிக் கருதாது விட்டுவிட வேண்டும் என்று சொன்னோமல்லவா...? "அந்த நிலையில்தான் மனம் விருப்பு வெறுப்பற்று இருக் கிறது நாம் எதிர்பார்க்கும் பலனை ஏற்படுத்த ஆழ்மன உணர்வுகளும் ஆழ்மனத்திற்கப்பாலுள்ள சக்திகளும் அதற்காகப் பாடுபடுகின்றன" என்று விளக்கம் கொடுக்கிறார்கள் மனோதத்துவப் பேராசிரியர்கள்.

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலை யிலிருக்கிறோம். விவசாயியாக, தொழிலாளியாக, தொண்டு செய்வோராக, ஆசிரியராக, தாயாக இப்படிப் பல பொறுப்பு— பலநிலை. அந்தந்த நிலையில் இருந்து கொண்டு வாழ்வுப் பயனை எய்தலாம்.

எந்தத் தொழில் செய்தாலும் அதில் நல் லெண்ணம் நிலவும்படி செய்யலாம். எந்தச் செயல் செய்தாலும் யாருக்கும் தீங்கு எண்ணா மல் நல்ல செயலாகச் செய்யலாம். இவை எல்லாவற்றையும் பற்றி போதி மரத்தடியில் அமர்ந்து தியானித்து முடிவுக்கு வந்த புத்தர் பிரான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறினார். 'வாழ்க்கை ஒரு எட்டு படியுள்ள ஏணி?' என்று. 'நல்லெண்ணம்; நல்நோக்கு; நல்ல பேச்சு; நற்செயல்; நல்வாழ்க்கை; நன்முயற்சி; நல்சிந்தனை; நல்தியானம் என நிர்வாண நிலை பெற பரம்பொருளை அடைய — இதுதான் வழி' என்று கூறினார். வாழும் வழியை— சன்மார்க்கப் பாதையை— யாரும் இவ்வளவு அழகாக ஆராய்ந்து இதுவரை சொல்லிவிடவில்லை.

இரண்டாவது பகுதி

தர்மத்தின் அடிச்சுவட்டில் மனிதனின் உயர்நிலைத் தேவைகள்

தர்மத்தின் அடிச்சுவட்டில்... தர்மத்தின் அடிச்சுவட்டிலேதான் இவ்வுலகம் இயங்குகிறது; இப்பிரபஞ்சம் இயங்குகிறது. இப்பிரபஞ்சமும் உலகமும் கோள்களும் உபகோள்களும் ஏதோ ஒரு நியதியில் இயங்குகின்றன. என்ன நியதி? என்ன கணிப்பு? என்ன சக்தி?

விஞ்ஞான உலகம் அந்த சக்தியை ஈர்ப்பு சக்தி என்று கூறுகிறது. அதே போன்ற சில நியதிகள் மனித வாழ்விலும் இயங்குகின்றன. அதைத்தான் தர்மம் என்கிறோம். தவறு கண்ட இடத்து, "தம்பி! இது தர்மமல்ல" என்கிறோம்.

"ஐயா, அரசியல்வாதியே! மக்களைச் சுரண்டுவது அதர்மம்" என்கிறோம். உற்றாருக்கும், உறவினருக்கும் இல்லாதவருக்கும் உதவுவதை தர்மம் என்கிறோம். அது வாழ்வின் நியதி. ஏனெனில் பிரபஞ்சத்தின் கோள்கள் போல மனித உயிர்கள் ஒன்றையொன்று சார்ந்துவாழும் நிலைதான் வாழ்வின் இயக்கநிலை, இதுதான் தர்மம்; மனித தர்மம்!

சிலசமயம் இளமையின் முறுக்கிலே செல்வத்தின் திளைப்பிலே அதிகாரத்தின் போதையிலே ஆணவத்தின் இயக்கத்திலே, "உலகம் தன்னிலிருந்துதான் துவங்குகிறது" என்றும், இயங்கு

கிறது என்றும் மனிதன் எண்ணுகிறான்; இறுமாப்பு கொள்கிறான்; உலக தர்மத்தின் விதிகளை மீறுகிறான்.

தர்மம், நியதி என்ற தராசு முனை தவறும் போது அது காரண காரியத் தொடர்புகொண்ட ஓர் இயக்கத்தை (கர்மவினையை — செய்யும் தொழிலால் ஏற்பட்ட) விளைவை நாம் தோற்றுவிக்கிறோம்.

மனித வாழ்க்கையில் மிக முக்கியமான உண்மை ஒன்றை நாம் கைப்பற்றி வாழவேண்டும் என்றால் அந்த ஒன்று எது என்றால் அது வாழ்வில் அதர்மங்களை நீக்கி வாழும் வாழ்வுதான்.

மனித வாழ்க்கையின் சமநிலையைப் பாதிக்கும் அதர்மங்கள், பொய், திருட்டு, பிறர்மனை நயத்தல், வஞ்சம், பொறாமை, ஆணவம் என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். நமது மறை நூல்கள் இவற்றையே சுருக்கி பஞ்சமா பாதகங்கள் என்று வருணிக்கின்றன.

மேனாட்டு அறிஞர் மார்ட்டின் ஆட்லர் தனது நூலொன்றில் குறிப்பிடுகிறார். இவ்வுலகின் அடிப்படை இயக்கம் முக்கியமான ஆறு விஷயங்களால்தான் நிர்ணயிக்கப்படுகின்றது. அவை சமத்துவம், உண்மை, அழகு, நீதி, உதவும் உள்ளம், விடுதலை உணர்வு என்று.

மனித வாழ்வைப் புரிந்துகொள்ள நாம் அதன் நேரிடையான உண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதே சமயம் தவறிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள அதர்மங்களின் எல்லைகளையும் உணர்ந்துகொள்ள வேண்டும். எது செய்ய வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ள

வேண்டும். அதே சமயம் எது செய்யக்கூடாது என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

தர்மங்கள் சுத்த காற்றும், வெளிச்சமும் தண்ணீரும் நல்ல உணவும்போல. அதர்மங்கள் இந்த நல்ல பொருள்கள் நம்மை வந்தடைவதைத் தடை செய்யும் மதில் சுவர்கள் போல.

நல்லெண்ணங்கள் நல்ல காற்று போல, நல்ல வெளிச்சம்போல, நல்ல உணவுபோல, நல்ல தண்ணீர் போல.

சொல்லப் போனால் அனுபவத்தில் நல்லெண்ணங்கள் கெட்ட காற்றையும் மாற்றும் வல்லமை படைத்தவை; இருளையும் ஒளியாக்கும் சக்தி படைத்தவை; கெட்ட உணவையும் அமுதமாக்கி நம்மை வாழவைக்கும் வலிமை படைத்தவை.

நல்லெண்ணங்கள் தர்மத்தின் நினைவிலே நம் மனத்தில் எழுபவை. நல்லெண்ணங்களைப் பற்றிச் சிந்திக்கவும் சதா நினைவில் நிறுத்தவும் வாழ்க்கையில் பயிலவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

இப்படி எல்லாம் எழுதும்போது எல்லாரும் ஏதோ கோயிலுக்குப் போகும் பயபக்தியுடன் வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் கழிக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். சிரிப்பும், இன்பமும், மகிழ்ச்சியும், துள்ளலும், கற்பனையும், அறிவும், திறமையும், செயலும் இந்தப் பய பக்திக்கு எதிரி எண்ணுகிறார்கள்.

மனித வாழ்க்கை சிரிப்பதற்காக — மகிழ்ந்து அனுபவிப்பதற்காகத்தான் ஏற்பட்டது. அதுவே நிறைவு பெறும் வாழ்க்கை நிலை. ஆகவே நீங்கள் உங்களை நீங்களே வருவித்துக்கொண்டே கட்டுப்

பாட்டில் சிக்க வைத்து சின்னாபின்னமாக்கா தீர்கள்.

மெக்சிகோ நாட்டில் இருக்கும் ஒரு பத்து வயதுச் சிறுவனை டெலிவிஷனில் காட்டினார்கள். அவன் தேள், பாம்பு போன்ற பிராணிகளை அன்புடன் கையாளுகிறான். பாடம் படிக்கும் போது தன்னருகில் வைத்துக் கொண்டு தடவிக் கொடுத்து விளையாடுகிறான். பாம்பும் தேளும் அவனை ஒன்றும் செய்வதில்லை. அவனை நேரடியாகச் சோதிப்பதற்காக விஷப் பாம்புகள் கொண்ட ஒரு பெரிய நாட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே ஒரு பெரிய விஷப்பாம்பு இருந்தது. சிறுவன் சில நிமிடம் அதை நோக்கிக் கண்களால் பேசினான், அவ்வளவுதான்; உடனே நேரடியாகப் போய் அதைக் கையால் பிடித்துக் கழுத்தில் போட்டுக் கொண்டான். டெலிவிஷன் படம் எடுத்தவர்கள் திகைத்துப் போனார்கள்.

மனிதனுக்கும் விலங்குகளுக்கும் இடையே ஒரு சக்தி உண்டா? என்ன சக்தி அது? அப்படி ஒரு சக்தி இருக்குமானால் அது அன்பு அரவணைப்பு என்ற சக்தியாகத்தான் இருக்க வேண்டும். அன்பு எனும் சக்தியின் மறுபெயர் தான் ஆகர்ஷண சக்தி அல்லது புவிஈர்ப்பு சக்தியாக இருக்கவேண்டும்; இப்பிரபஞ்சத்தின் இயக்க சக்தியாக இருக்கவேண்டும். மீண்டும் சொன்னதற்கே வருகிறேன். அன்பு என்பது ஓர் நல்ல எண்ணம். அந்த நல்ல எண்ணம் பொல்லா ததையும் வசப்படுத்தும். கெட்ட காற்றையும் சுத்தப்படுத்தும். மனித உடலைப் புனிதமாக்கும். மனித வாழ்க்கையைத் தெய்விகமாக்கும்.

இதுவே தர்மத்தின் அடிச்சுவடு.

தர்மத்தின் அடிச்சுவட்டில்

தர்மம், நேர்மை, உண்மை, சுதந்திர உணர்வு என்றெல்லாம் சொன்னால், இதெல்லாம் வாழ்வுக்கு அவ்வளவு தேவையா என்று சிலர் எண்ணக்கூடும். சோற்றுக்கில்லாமல் இருக்கும் மனிதனுக்கு சோறும், வேலையில்லாமல் இருக்கும் இளைஞனுக்கு வேலையும் அல்லவா முக்கியம் என்ற நடைமுறை உலகக் கேள்வியை நீங்கள் எழுப்பக்கூடும்.

சோறும், தண்ணீரும், உடையும், இடமும் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் வாழ்க்கைத் தர்மங்கள். பட்டினி கிடப்பவன்கூட வாழ்க்கைத் தர்மங்கள். மீறப்படும்போது சிலிர்த்தெழுகிறான். சிலப்பதிகாரம் நீதிக்கான போராட்டம்; மகாபாரதம் சூதுகளுக்கு எதிரான நேர்மைப் போராட்டம், உலகில் சோற்றுக்கான போராட்டங்கள் குறைவு; நீதிக்கான போராட்டங்கள் தாம் அதிகம்.

யோசித்துப் பார்த்தால், எல்லா மதங்களும், மத போதகர்களும், உணவு—உடை—இடத்திற்கு மனிதன் என்ன செய்யலாம் என்று விளக்கி நூல் எழுதி வைக்கவில்லை. அதற்கான மார்க்கங்களைக் காட்ட அவர்கள் பேசவில்லை; பிரசாரம்

செய்யவில்லை. மனிதனின் உயர் தேவைகளான தர்மங்களைப்பற்றி அன்பைப்பற்றி உண்மையைப் பற்றி நேர்மையைப் பற்றித்தான் பேசினார்கள். மலைப்பிரசங்கம் செய்தார்கள். அப்படி வாழ்க் கைத் தர்மங்களைக் கூறி நமக்கு வழி காட்டிய வர்கள் சிலரை சங்கரர் என்கிறோம்; இயேசு என் கிறோம்; முகமது என்கிறோம்; அவர்களுக் கெல்லாம் பெயர்கள்தான் வேறுபடுகின்றனவே தவிர, அவர்கள் கூறிய உண்மைகள் எல் லோருக்கும் பொது; எங்கும் பொது.

மலை உச்சிக்குப் போக பல வழிகள் உள்ளன. கிழக்குப் பக்கத்திலே இருப்பவர்கள் அவர்கள் இடத்திலிருந்து கிழக்குப் பக்கத்தி லிருந்து பாதை அமைக்கிறார்கள். மேற்குப் பக்கத் திலே வாழ்பவர்கள் மேற்குப் பகுதியிலிருந்து நேராக மலை ஏறும் பாதையை அமைக் கிறார்கள். கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்று திசை எதுவானாலும் ஏறும் உச்சி ஒரே உச்சி தான். பல்வேறு மதங்கள் எல்லாவற்றின் உயர் தேவை ஒன்றுதான்.

ஆறுகள் பல்வேறு மலைகளிலிருந்து தோன்று கின்றன. ஆனால் சங்கமமாகும் இடம் என்னவோ கடல் தான்; சமுத்திரம்தான். கொலராடோ மலைகளில் சில ஆண்டுகளுக்கு முன் பயணம் செய்தேன். ஓரிடத்தில் நேர் எதிர்த்திசைகளை நோக்கி இரண்டு அம்புக்குறி போட்டிருந்தார்கள். அந்த இடத்தில் பெய்யும் மழை, இந்தப் பக்கம் அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலும், சில அங்குலம் தள்ளிப் பெய்யும் மழை எதிர்த் திசை

யில் புறப்பட்டு பசிபிக் மகாசமுத்திரத்திலும் போய்க் கலக்கிறது என்று எழுதி இருந்தார்கள். துவக்கம் ஒன்றுதான்! முடியும் இடமும் ஒன்று தான்.

சகிப்புத் தன்மைக்கும் பொறுமைக்கும் பிறரை மதிப்பதற்கும் வந்தோரை வாழவைப்ப தற்கும் பெயர் போனவர்கள் தமிழர்கள். வடக்கே எத்தனையோ மதக் கலவரங்கள் நடைபெறும். அப்போதெல்லாம் சொல்வார்கள். 'தெற்கே இது போல் நடக்காது' என்று. வேளாங்கண்ணியிலும், நாகூரிலும், சமயபுரத்திலும் என்று வேறுபாடு காணாது வேண்டுதல் செய்யப்போகும் தமிழ் மக்களிடம் இப்போது மதப் பிரிவுணர்ச்சி தோன்றி இருப்பது வியப்பாக இருக்கிறது.

மனிதன் தன் உயர்நிலைத் தேவைகளைத் தேடும் இடத்தில் இப்படி ஓர் வன்மையா?

'யார் நமது மதத் தலைவர்கள் என்பதை பின்னுக்கு வைத்துவிட்டு உண்மையைக் காணுங் கள்' என்றார் வடலூர் வள்ளலார். 'ஆழ்ந்து ஆண்டவனை எண்ணித் தியானம் செய்தீர்களா னால் தெரிவது சோதி. அதுதான் பரம்பொருள். அல்லா, இயேசு, இதுவே சமரச சன்மார்க்கம்' என்றார் அருட்பெரும் ஜோதி வள்ளலார்.

கவனியுங்கள்; மனிதன் அடிப்படைத் தேவை களுக்கான உணவு — உடை — இடத்திற்காகச் சண்டை போட்டுக் கொள்ளவில்லை. தன் உயர் தேவைகளை நிலை நிறுத்துவதில் சண்டை போட்டுக் கொள்கிறான்.

என்ன அந்த உயர்நிலைத் தேவைகள்?

உண்மை, அன்பு, நீதி, உதவும் உள்ளம், விடுதலை உணர்வு, சமத்துவம் என்ற உயர்நிலைகள் ஆண்டவன் வழிபாட்டில் தோன்றுகின்றன. அதில் மனிதன் தன்னை மறக்கிறான். வழிபாட்டின்போது, தியானத்தின்போது, இந்த உயர் நிலைத் தேவைகள் நம்மிடமிருந்து பொங்கி எழுகின்றன. ஆகவேதான் கோயிலிலிருந்து வரும் போது நாம் ஓர் ஏழைக்கு உதவ விரும்புகிறோம். ஒரு மனிதனைத் திட்ட வாய் கூசுகிறோம். ஒரு நியாய உணர்வு நம்மை ஆட்கொள்ளுகிறது.

அப்படிப்பட்ட நாம்—அப்படிப்பட்ட ஒரு நிலைக்காக கோயிலுக்குச் செல்லும் நாம், அந்த உயர்நிலைகளுக்கு எதிராகச் செயல்படுவது மனித தர்மத்திற்கு விரோதமானது; வாழ்க்கைத் தர்மத்திற்கு விரோதமானது.

இத்தகைய உண்மைகளைத் திரும்பத் திரும்ப மனத்திற்குக் கொண்டு வருவதன் மூலமே. அவற்றை எண்ணிச் செயல்படுவதன் மூலமே நாம் வாழ்க்கைப் பயனை அடைய முடியும். தர்மத்தின் அடிச்சுவட்டில் நடப்போம்.

தர்மத்தின் அடிச்சுவட்டில்

2

மனித வாழ்க்கையை எப்போது நிறைவுடன் ஒரு முழுமையுடன், ஒரு பயனுடன் வாழ்ந்தவர் களாவோம்...?

நம்மிடமிருக்கும் அறிவையும்— திறமையை யும்— கற்பனையும்— ஆக்க சக்தியையும் பூரண மாக வெளிக்கொணர்ந்து நமக்கும் பிறருக்கு மாகப் பயன்படும்படி வாழ்கிறோமோ அப் போதுதான்... நாம் நம் முழுத் திறமைகளையும் வெளிக்கொணரவேண்டும். நமது முழு ஆக்க சக்தியும் நமக்கும்—பிறருக்கும்—நாட்டிற்கும் பயன் படவேண்டும். அதில்தான் வாழ்க்கைப் பயன் இருக்கிறது. மனிதனது முழு சக்தியும் வெளிவரும் போது மனிதன் எங்கோ ஐக்கியமாகிறான்.

தன்னை மறந்து பாடும் இசைக்கலைஞன் நாதப் பிரம்மத்துடன் ஐக்கியமாகிறான். தன்னை மறந்து கொட்டி எழுதும் அறிஞன் பிரபஞ்ச ஊற்றிலிருந்து கிளம்புகிறான். தன்னலமில்லாது தன்னை மறந்து பாடுபடும் ஒரு நாட்டுத் தலைவன் லட்சோப லட்சம் மக்களின் ஆத்மாவை எல்லாம் தன் ஆத்மாவுடன் இணைக்கிறான்.

மனிதன் தன் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும்போது, சாப்பிடும்போது, தூங்கும்

போது, நல்ல வீட்டில் குடியிருப்பதன் மூலம் மட்டுமோ, நல்ல உடை உடுத்துவதன் மூலம் மட்டுமோ இந்த ஐக்கியத்தைப் பெறமுடியாது.

உணவு, உடை, இடம் என்ற அடிப்படைத் தேவைகளுக்கு மேலே நமது உயர்நிலைத் தேவைகள் இருக்கின்றன. அடிப்படைத் தேவை போல உயர்நிலைத் தேவைகளும் மனித வாழ்க்கைக்கு முக்கியம் என்கிறார்கள் மன நூலார்.

சாப்பாடு தேவைதான். உடல் என்னும் கோயிலைப் புனிதநிலையில் இயக்கும் நிலையில் வைத்திருக்க உணவு தேவை.

சில சமயம் சிலர் இந்த அடிப்படைத் தேவைகளைப் புறக்கணித்து, தியாகம் செய்து, ஒதுக்கி மேல் நிலையை அடைய முயல்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் புத்தர் சொன்ன ஒரு வாசகத்தை நினைவுபடுத்துவது நல்லது:

அரண்மனையிலிருந்து புறப்பட்ட சித்தார்த்தர் காட்டில் சென்று உடலை வருத்திப் பட்டினி போட்டு உண்மையை அறிய தவமிருக்கிறார். உடல் மெலிகிறது; எலும்புக் கூடாகிறது. அவரால் சிந்திக்க முடியவில்லை. மனிதன் சிந்திக்க மூளைக்கு உணவு தேவை. மூளையை வருத்தி, பட்டினி போட்டுச் சிந்திக்க முடியாது, வழி காண முடியாது என்ற எண்ணத்திற்கு வருகிறார் சித்தார்த்தர்.

உடலும் சிந்தனையும் ஓர் ஒன்றுபட்ட இணைந்த இயக்கம். இதில் பெரிது சிறிது என்ற வேறுபாடில்லை.

அதேபோல வெறும் சாப்பாட்டிலேயே ஆழ்ந்து போகிறவன் இயற்கைக்கு எதிராகச் செயல்படு

கிறான். நிறைய சாப்பிடுவதன் மூலமோ சதா உடலுறவு கொள்ளுவதன் மூலமோ ஒரு மனிதன் தன் உயர் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது. நாம் நிதானமாக — எல்லாம் ஒருங்கிணைந்த வாழ்க்கையை வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கை நெறிகளை மீறும்போது நமது மேல் நோக்கிய வாழ்க்கைப் பயணம் தடைபடுகிறது அல்லது திசைமாறுகிறது.

பிறந்தவுடன் தாய் மடியைத் தேடும் குட்டி போல மனிதனது உயர்நிலைத் தேவைகளான உண்மை, நேர்மை, உதவும் உள்ளம் போன்றவை களும் நம்முடனேயே கூடப் பிறந்திருக்கின்றன என்று கூறுகிறார்கள் மனோதத்துவ நிபுணர்கள்.

ஒரு மனிதனுக்கு உணவு கொடுத்து உடை கொடுத்து இருக்க இடம் கொடுத்து சிறையில் போடுகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அங்கே அவனது அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. அங்கே அவன் நிம்மதி யாக ஆனந்தமாக இருக்க வேண்டியதுதானே...? ஏன் அவனை விடுதலை உணர்வு சுதந்திர உணர்வு துரத்துகிறது? ஏன் அவனை நியாய உணர்வு நேர்மை உணர்வு துரத்துகிறது? ஏன் மனம் வெளியுலக அழகைக் காண அவாவுகிறது.

ஆகவேதான் மனோதத்துவ அறிஞர்கள் கூறுகிறார்கள், 'நமது உயர்நிலைத் தேவைகளான உண்மையும், நேர்மையும், அன்பும், விடுதலை உணர்வும் நம்முடன் கூடப்பிறந்தவை' என்று, 'நம் ஆழ்மனத்திலே ஊறிக் கிடக்கும் அடிப் படைத் தேவைகள்' என்று.

ஆகவேதான் பிறர் பொய் சொல்லும்போது நம் உள்ளம் துள்ளி எழுகிறது. பிறர் அநியாயமாக

நடந்து கொள்ளும்போது நாம் போரிடப் புறப் படுகிறோம். இவை அடிப்படை உயர்நிலைத் தேவைகள். அதனால்தான் வஞ்சம், லஞ்சம், அநீதி, சர்வாதிகாரம் போன்ற நடவடிக்கைகளால் நிரந்தரமாக எந்தத் தலைவனும் ஒரு நாட்டை ஆட்சி செய்ய முடிவதில்லை. மொத்த மனிதர் களது உயர்நிலைத் தேவைகள் ஒன்று திரண்டு எழும் போது அங்கே புரட்சி உண்டாகிறது.

மனிதனது அடிப்படைத் தேவைகளை மறுக் கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். உணவு இல்லாமல் ஒரு மனிதனை வருத்தும்போது பட்டினியாலோ, நோயாலோ மனிதன் மாண்டு போகிறான்.

ஒரு மனிதனது அடிப்படை உயர்நிலைத் தேவைகள் மறுக்கப்படும்போது எதிர்க்கும் மனித மனம் சின்ன பின்னாப்பட்டு சிதிலமடைகிறது. இதனாலேயே ரஷ்யாவில் அறிஞர்களை மன நலமிழந்தோர் விடுதியில் சேர்த்துவிட்டு சமா தானம் அடைகிறார்கள்.

தன் விதியை தன் வாழ்க்கையைத் தானே கட்டுப்படுத்த முடியாத நிலையில் மனிதன் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி வாழவைக்கும் மூலாதாரமான மனத்தை இழக்கிறான்.

மனித தர்மங்கள் மதிக்கப்படாத குடும்பம் வெகு நாள் வாழாது அழிந்துபோகும். அதே போல மனித தர்மங்கள் மதிக்கப்படாத ஆட்சி யும் நிலைத்து நிற்காது; அழிந்து போகும்.

ஆகவே மனித தர்மங்களைப் போற்றுவோம்.

மனித தர்மங்களுக்காகப் போராடுவோம்.

அவை நமது அடிப்படைத் தேவைகள். உரிமைகள்.

தர்மத்தின் அடிச்சுவட்டில்

3

மனிதனாகப் பிறந்து 'தேடிச் சோறு நிதம் தின்று' வாழும் வாழ்க்கை ஒரு பெரிய வாழ்க்கை அல்ல. உண்மையிலேயே அந்த வாழ்க்கை தாழ்ந்த வாழ்க்கைதான். ஏனெனில், நம்மிட மிருக்கும் முழுத் திறமையையும், அன்பையும், கற்பனையையும், ஆத்ம தாகங்களையும் தீர்த்து வைக்கும் வாழ்க்கை அல்ல—தேடிச் சோறு நிதம் தின்னும் வாழ்வு.

மனித வாழ்க்கை ஒரு மேல்நோக்கிய முயற்சி. அதில் நாம் நம்மை மாத்திரம் ஈடுபடுத்திக் கொள்வதோடு நில்லாமல் ஊரையும் உலகத் தையும் ஈடுபடுத்தி வாழ்கிறோமே — வாழ முயல் கிறோமே— அப்போதுதான் வாழ்க்கை அர்த்த முள்ளதாகிறது. பிறவியின் பயன்பூர்த்தி பெறு கிறது. ஞானிகள் இதையே 'ஜென்ம சாபல்யம்' என்கிறார்கள்.

உணவு, உடை, இருக்க இடம், உடலுறவுத் தேவை இவைகளை அடிப்படைத் தேவை என்றும் உண்மை, நேர்மை, தியாகம், உதவும் உள்ளம் இவற்றை உயர் நிலைத் தேவைகள்

என்றும் கூறக்கூடாது. 'உண்மையிலேயே உண்மை நாடும் முயற்சி ஒரு அடிப்படைத் தேவை' என்று சில தத்துவ சிந்தனையாளர்கள் எழுதுகிறார்கள்.

மகாத்மா காந்தி தன் வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிட்டதை எண்ணிப் பாருங்கள். தன் வாழ்க்கையை 'சத்திய(த்துடன் பரி)சோதனை' என்று கூறினார். தன் சுயசரித்திரத்திற்கு 'சத்திய சோதனை' என்று பெயர் கொடுத்தார். 'தான் எப்படி சோற்றுக்காகப் போராடினேன்' என்று அவர் எழுதவில்லை உயர்நிலைத் தேவையே அடிப்படைத் தேவையாகிறது.

'ஆனந்தவிகடனி'ல் சமீபத்தில் கேதாரி என்பவர் ஒரு கதை எழுதியிருந்தார். அதிலே ஓர் இளைஞன் எப்படி ரசிகத் தன்மையை ஓர் ஆக்க சக்தியாக்கி வாழ்கிறான் என்பதையும் எப்படி அந்த ரசிகத்தன்மை இளைஞனது மேல்நிலைத் தேவையாக அவன் வாழ்வில் இயக்குகிறது என்பதையும் பின்னிப் பிணைத்துக் கதை எழுதி யிருந்தார்.

நாட்டு விடுதலைக்காகப் பாடுபடுவதே உயர் நிலைத் தேவை என்று சிலர் இயங்குகிறார்கள். சினிமா படம் மூலம் நாட்டைச் சீர்திருத்தி நல் வழிப்படுத்த முடியும் என்று 'வறுமையின் நிறம் சிவப்பு', 'தண்ணீர் தண்ணீர்' என்ற படங்களின் மூலம் ஒரு புதிய பாதையில் இறங்கி இருக்கிறார் பாலசந்தர். எழுதுவதும் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதும் மேல்நிலைத் தேவைகள்தான்.

மகாத்மா காந்தி நவகாளி பாதயாத்திரை மேற்கொண்டார். அன்பைப் பரப்பும் ஓர் உயர் நிலைத் தேவை.

வெறும் உப்புப் புளி சோற்றுக்கு மேலே சென்று மனிதன் வாழத் துவங்கும்போது மனிதன் தர்மத்தினால் உந்தப்படுகிறான். தர்மத்தின் அடிச்சுவட்டில் நடக்க முயல்கிறான்.

நம் வாழ்க்கையையும் நம் சிந்தனைகளையும் புனித மாக்கி நம் வாழ்க்கைக்கு வழிகாட்டி தர்மத்தின் அடிச்சுவட்டில் நமக்கு முன்னே நடந்தோர் ஏராளம். ஒரு புத்தர், ஒரு ஏசு, ஒரு முகம்மது, ஒரு திருஞான சம்பந்தர், ஒரு தோரோ, ஒரு காந்தி என்று ஊரறிந்த உலக மறிந்த உத்தமர்கள் நிறைய பேர் நம் கண்முன் வருகிறார்கள். இவர்களல்லாமல் பேரும் புகழும் பெறாமல் காட்டிலே மலர்ந்த ரோஜாவாய் கடலிலே கிடக்கும் முத்துப்போல நமக்கு முன்னே வாழ்ந்த பெரியவர்களும் நல்லவர்களும் ஏராளம்.

சூரிய வெளிச்சத்தை நாடும் செடிபோல இந்த உயர்நிலைத் தேவைகளை ஒட்டி நம் வாழ்வை நாம் அமைத்துக்கொள்ள வேண்டும்.

அமெரிக்காவில் பில்லிகிரஹாம் என்றொரு நாடறியாத மதப்பிரசாரகர் இருக்கிறார். கையிலே ஏசுவின் வேத புத்தகத்தை வைத்துக் கொண்டு, உலகெங்கும் சென்று பிரசாரம் செய்கிறார். நல்ல பேச்சாளர். வியட்நாம் யுத்தம் வந்தபோது அமெரிக்க ஜனாதிபதி கிறிஸ்துமஸ் நாளில் வியட்நாமில் குண்டுகளை வீச உத்தர விட்டபோது, நாட்டின் அறிஞர்களும், மாணவர் களும் வியட்நாம் போரில் அமெரிக்கா ஈடுபடக் கூடாது என்று நாடெங்கும் போர்க்கொடி உயர்த்திய போது பில்லி கிரஹாம் வியட்நாமில்

அமெரிக்கா செய்த அக்கிரமங்களைக் கண்டும் காணாமல் இருந்தார். நியாயத்திற்காக மனிதர் ஒருவார்த்தை வாய் திறக்கவில்லை.

"வாழ்க்கையில் இயேசுவை கடைப்பிடிக்க வேண்டும்" என்கிறார்கள் பல மத குருமார்கள், பல கத்தோலிக்க பாதிரியார்கள்.

வாழ்விலே உயர்நிலைத் தேவைகளை அனுசரித்துப் பயிலாதபோது எந்தவிதமான பட்டமும் போலிப் பாசாங்கும் உதவாது. உயர்நிலைத் தேவைகளை வாழ்வில் நாம் தினம் அப்பியசிக்க —பயில—கையாள முயல வேண்டும்.

உயர்நிலைத் தேவைகளான உண்மை, நேர்மை, நீதி என்பனவற்றை எடுத்துக் கூறித்தான் பள்ளியில் குழந்தைகளைப் பயில்விக்கிறோம். நாட்டில் நடைமுறையில் என்ன ஏற்படுகிறது? நடைபெறுகிறது? அநியாயம் தாண்டவமாடுகிறது. செல்வாக்கின் போர்வையில் நீதி மங்கிப் போகிறது. அதிகாரத்தின் நிழலில் உதவும் உள்ளம் மறைந்து போகிறது, வஞ்சகத்தின் நெறியில் இத்தகைய நிலை நாட்டில் நிலவும்போது மேல்நிலைத் தேவைகள் பற்றி அறிந்த பெரியவர்கள் என்ன செய்ய வேண்டும்?

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

சத்திய நெறிகள்

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியை ஏன் மகாத்மா காந்தி என்று, அழைக்கிறோம்? அவர் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தார். ஆனால் அவர் தனது எண்ணங் களாலும் செயலாலும் லட்சியத்தாலும் உறுதியாலும் சத்தியநெறிகளா லும் தியாகத்தாலும் தன்னைத் தானே உயர்த்திக் கொண்டார். நமக்கு முன் மாதிரியாகத் திகழ்ந்தார்.

இந்த நூற்றாண்டிலே ஏற்பட்ட மகத்தான அதிசயம் அவர்; இந்தியா உலகிற்கு அளித்த ஆத்மீக சோதி அவர். உண்மையின் குரல் அவர்.

இயேசுபிரனைப் பற்றி பைபிள் எழுதுகிறது, அவரது தோளில் தொங்கிய துண்டைத் தொட்ட வர்கள் எல்லாம் சாபவிமோசனம் அடைந்தார் கள் என்று. அதேபோல இந்திய நாட்டில் ஏழை எளியவர்கள், பணக்காரர்கள், இளைஞர்கள், பெண்கள் முதியவர்கள் என்று எல்லாருடைய வாழ்க்கையும் மகாத்மா காந்தியால் தூய்மை யடைந்தது.

தத்துவமேதை சர்.எஸ். ராதாகிருஷ்ணன் எழுதுகிறார்; 'மனித சரித்திரத்தில் மிகப் பெரிய

விஷயம், அவனுடைய சாதனைகளல்ல; அவன் கட்டி வைத்த— உடைத்துப் போட்ட— ஏகாதி பத்தியங்களல்ல. சத்தியத்தையும் தர்மத்தையும் தேடிக்கொண்டு யுகத்திற்கு யுகம் அவனுடைய ஆத்மா வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறதே அதுதான் மிகப்பெரிய விஷயம். காந்தியடிகளின் பெருமை அவர் நடத்திய தீரமான போராட்டங் களைக் காட்டிலும் அவருடைய பரிசுத்த வாழ்க் கையிலேதான் தங்கி இருக்கிறது.

இந்த அவரது பரிசுத்தமான வாழ்க்கை— கடைப் பிடித்த சத்திய நெறிகள்— அவர் வாழ்ந்த காலத்தில் ஒவ்வொரு மனிதரையும் தொட்டது. மனிதர்கள் சாதாரண மனிதர்களாக இருப்பதற்கு மேலாக—ஓர் அதிமனிதனாக— உயரவேண்டும் என்ற ஆசையும் செயலும் அவர் மூலம் மக்கள் வாழ்க்கையில் பிரதிபலித்தது.

அதனால் படித்தவர்கள் ஏழைகளைப் பற்றிக் கரிசனம் கொண்டார்கள். பணக்காரர்கள் சமூகத் தொண்டு செய்தார்கள். கிராமங்களில் நிர்மாணத் திட்டங்கள் பிறந்தன. ஒரு சமத்துவம் தோன்றியது. எதிரியை மன்னிக்கும் பெருந் தன்மை தோன்றியது. எதிரி—பிரிட்டிஷ்காரர்கள் —இடையூறு செய்தபோதிலும் துன்பம் தந்த போதிலும் அதை ஏற்றுக்கொள்ளும் ஒரு பரிபக் குவம் மக்கள் மனதில் நிலவியது. யார் எது சொன்னாலும் துன்பத்திற்கு அஞ்சாமல், "இது என்நாடு, சுயராஜ்யம் எனது பிறப்புரிமை" என்ற போர்க்குரல் — ஆத்மாவின் குரலாக — சத்தியத் தின் குரலாக எழுந்தது. மக்கள் தியாகம் செய்யத்

தயாராயிருந்தார்கள். 'நான்' 'எனது நலம்' என்பதெல்லாம் பின்னணியில் போய் லட்சியம்—நாடு என்ற பெருநோக்கால் சுயநலத்தை மறந்து பொதுநலத்திற்குப் பாடுபட்டார்கள்.

மகாத்மாகாந்தி செய்த புரட்சி என்ன? ஒவ்வொரு மனிதனிலும் இருந்த அற்புத குணங்கள்— சிறந்த குணங்கள்— உயர்குணங்கள் எல்லாம் அவரது எண்ணம் பட்டு அமுத சுரபியாக ஆத்மாவிலிருந்து பொங்கி விழிந்தன. மகாத்மாகாந்தியின் எண்ணங்கள் தொட்ட இதயங்கள் எல்லாம் மேலே நோக்கிக் கிளம்பின. மனிதனின் காம—குரோத—லோப மதமாச்சரியங்களை அவர் எழுப்பவில்லை. அதை மீறி அஞ்சாமை, லட்சியம், உண்மை, பொதுநலம், தியாகம், அன்பு என்ற பெருஞ் சக்திகளை, சாதாரண மனிதனிடமிருந்து வெளிவரும்படி செய்தார் அவர்.

அதனால்தான் எழுதினார்கள்.

'அவர் குந்திய இடம் கோயிலாயிற்று.
அவர் அமர்ந்த இடம் ஆலயமாயிற்று'
என்று!

நான் காந்தியை தமிழ்நாட்டில்...
இந்தியாவில் தேடுகிறேன்.
இன்று அவர் எங்கே இருக்கிறார்?

மாபெரும் சலவைக்கல் சிற்பம் அமிலங்கள் நிறைந்த தண்ணீரில் கரைந்துபோனது போல் இன்று நிற்கிறார். வடலூராரின் ஞானஒளி

கரியமிலவாயு என்ற புகையினால் தன் ஒளியையும் ஜீவனையும் இழந்த மாதிரி அவர் தென்படுகிறார். மனிதராய் உங்களைப் போலவும் என்னைப் போலவும் வாழ்ந்த மகான் நமது எண்ணங்களில்கூட இன்று வாழவில்லை. திரவ நிலையில்— மகத்தான மின்சக்தியை உண்டு பண்ணும் தேக்கி வைக்கப்பட்ட தண்ணீராய் இருந்த அவர் சூடுபட்ட நீர் ஆவியாய் போனதைப் போல மறைந்துவிட்டார்.

அவருடைய படம்வேண்டும். காலண்டர் வேண்டும், அவருடைய பொம்மை வேண்டும், லிங்கனைப் போல், கென்னடியைப்போல் அவருடைய உருவ அமைப்பு வேண்டும் என்று கடை கடையாக ஏறி இறங்குங்கள். சென்னையில் அண்ணாசாலையில் எங்காவது கிடைக்கிறதா பாருங்கள்! அவர் எழுதிய புத்தகம் வேண்டும். கிராமப் புனருத்தாரணத் திட்டம் வேண்டும் அவரது சட்டமறுப்புத் திட்டம் பற்றிப் படிக்க வேண்டும் என்று சென்னையில் பிரபல புத்தக சாலையில் கேட்டுப் பாருங்கள். ‘இல்லை!’ என்பார்கள். “யார் அதை எல்லாம் இப்போது கேட்கிறார்கள்?” என்று இளநகையூடே பதில் தருவார்கள்.

எங்கே காந்தி? காந்தி எங்கே...?

பேச்சில் நஞ்சும், செயலிலே வஞ்சகமும் மனத்திலே சுயநலமும் கொண்டு பேசிடும் இன்றைய அரசியல்வாதிகள் வாழும்போது அல்லவா நாட்டுக்கு இன்று ஒரு மகாத்மா காந்தி வேண்டும்? எங்கே காந்தி? லட்சியத்தை பின்னுக்கு வைத்து

சுயநலத்தையும் — சுயப்பெருமையையும் அதிகாரத்தையும் முன்னுக்கு வைத்து நம்மைச் செயலற்றவர்களாக ஆக்கும் அரசியல்வாதி வாழும் இந்தக் காலத்தில் அல்லவா நமக்கு வேண்டும் ஒரு காந்தி; எங்கே காந்தி?

“சத்திய நெறிகள் மிகுந்த தலைவனுடைய நோக்கம், இன்றைய தேவைகளை அனுசரித்துத் தன்னுடைய லட்சியத்தைத் தாழ்த்திக்கொள்வதாக இருக்கக் கூடாது. தனது லட்சியத்தை முன்வைத்து, தன் தேவைகளை உயர்த்திக் கொள்வதாக இருக்கவேண்டும்” என்று சொன்ன ஞானமூர்த்தி எங்கே? எங்கே இருக்கிறார்?

நேற்றுவரை நண்பனாயிருந்தவனைத் தன் சுயநலம் கருதி, நாக்கில் நரம்பின்றி அரசியல் மேடைகளில் நாம் வெட்கமடையும்படி கேவலமாக்கிப் பேசுகிறார்களே, இன்று நமது அரசியல்வாதிகள்... இப்படியா காந்தியின் பரம்பரை வாழ்ந்தது? காந்தியடிகள் நடத்திய போராட்டத்தில் எதிரி ஏதேனும் சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருந்தால், “சத்துருவின் தேவையை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது” என்று பலமுறை கூறினாரே அந்தக் காந்தி எங்கே இன்று?

தமிழ்நாட்டு அரசியல்வானைப் பார்க்கிறேன், அரசியல்வாதிகளின் பேச்சைப் படிக்கும் போதும்; அவர்களது சுயநலமும் பொறாமையும், வஞ்சகமும் நிறைந்த செயல்களைப் பார்க்கும் போதும் நமக்குக் குமட்டல் அல்லவா வருகிறது? நாணயமாய் ஒரு கைத்தறியாளர் பின்னிய

வேஷ்டியை உடுத்திக்கொள்ள இவர்களில் யாருக் கேனும் அருகதை உண்டா...?

அவர்கள் தங்களைத் தாழ்த்திக் கொள்ள வில்லை. நம்மைத் தாழ்த்துகிறார்கள். உங்களை யும் என்னையும் தாழ்த்துகிறார்கள். நமது உயர் லட்சியங்களை அவர்கள் கேவலப்படுத்துகிறார் கள். நமது அஞ்சாமையர் நாணயத்தை, தியாக உள்ளத்தை எதிரியை மன்னிக்கும் மனோ பாவத்தை அவர்கள் மாசுபடுத்துகிறார்கள். நமது ஆத்மாவைச் சிறுமைப்படுத்துகிறார்கள்.

தவறு யார்மீது என்று நினைக்கிறீர்கள்...? தலைவர்கள் மீது தவறல்ல; அரசியல்வாதிகள்மீது தப்பில்லை தவறு நம்முடையதுதான்.

"மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் சர்வாதிகாரி கெட்டவனா அல்லது அடிமை யாய்க் கிடக்கும் மக்கள் குற்றவாளிகளா என்று கேட்டால், தங்கள் உரிமைக்காக—நாணயத்திற் காக— கௌரவத்திற்காகப் போராடாத மனிதர் களே அடிமைத்தனத்திற்குக் காரணம்?" என் கிறார் தத்துவ சிந்தனையாளர் ஜேம்ஸ் ஆலன்.

சர்.எஸ். ராதாகிருஷ்ணன் எழுதுகிறார்: "அரசியல்வாதி என்ற முறையில் மனிதன் அதிகமான வெற்றி அடையவில்லை என்றால் அதற்குக் காரணம் அவன் வாழ்க்கையின் சத்திய நெறிகள் வேறே. அரசியல் வேறே என்று பிரிந்து விட்டதுதான்" என்று.

'அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்' என்ற பழ மொழிப்படி இன்று நாடு போகுமேயானால்,

தமிழ்நாடும் இந்தியாவும், சுடுகாட்டை நோக்கித் தான் போய்க் கொண்டிருக்கும். மாறாக நாட்டின் அரசியல், மக்களின் தூய உள்ளங்களைப் பிரதி பலிப்பதாக இருக்க வேண்டும். நாட்டின் அரசியல், மக்களின் சத்திய நெறிகளைப் பிரதி பலிப்பதாக இருக்க வேண்டும். நம்மிடமுள்ள நேர்மை, நாணயம், பெருந்தன்மை, மன்னிக்கும் மனோ பாவம், உண்மை இவற்றை நம் தலைவர்கள் அரசியல்வாதிகள் பிரதிபலிக்கிறார் களா? நம் எண்ணங்களின் வெளிப்பாடாக நாம் பெருமைப்படும்படி நடந்துகொள்கிறார்களா? நமக்கு ஏற்றவர்கள்தானா நம் தலைவர்கள்...? சிந்தித்துப் பாருங்கள்!

அந்தத் தகுதி அவர்களுக்கு இல்லையானால் அவர்களைத் தூக்கி எறியுங்கள்!

அச்சமே கீழ்களது ஆசாரம்!

இடம் தென்னாப்பிரிக்கா, அங்கே பழுப்பு நிற இந்தியர்களும் கறுப்பு ஆப்பிரிக்கர்களும் நிற பேதம் காரணமாக மூன்றாந்தரக் குடிமக்களாக நடத்தப்பட்டார்கள். செல்வாக்கு, அதிகாரம் அனைத்தும் வெள்ளையர்கள் கையில்.

கரும்புத் தோட்டத்தில் கூலி வேலை செய்ய வந்தவர்களை ஒப்பந்த காலம் முடிந்தவுடன் திரும்பிப் போகுமாறு செய்ய 'தலைவரி' என்ற ஒருவரியை வெள்ளை அரசாங்கம் விதித்தது. வெள்ளையர் வாழும் குடியிருப்புக்களுக்கு அருகில் ஒரு குறிப்பிட்ட எல்லை வரைதான் வெள்ளையர் அல்லாதார் வரலாம்— நுழையலாம், என்று வெள்ளையர்கள் வரையறுத் திருந்தார்கள்.

இந்த அநியாயமான சட்டங்களை எல்லாம் இந்தியர்களும் ஆப்பிரிக்க மக்களும் வேறுவழி யில்லை' என்று பணிந்து ஏற்றுக்கொண்டு வாழ்க்கை நடத்தினார்கள். மகாத்மா காந்தி இந்தச் சட்டங்களை மீறுவது என்று தீர்மானித் தார். முதன் முதலாக சட்ட மறுப்பு இயக்கம் தோன்றியது. இதனால் பெரிய கிளர்ச்சி ஏற் பட்டுப் பல இந்தியர்கள் சிறைக்குச் சென் றார்கள், மகாத்மா காந்தியைச் சிறையில் போட்டார்கள்.

“நான் சட்டத்தை மதிக்கிறேன், அதனால் தான் அதை எதிர்க்கிறேன்” என்று சொன்னார் காந்தி. பல முறை அவரது உயிருக்கே ஆபத்தான நிலைகள் ஏற்பட்டன. ஒரு சமயம் வெள்ளை யர்கள் வெறியுடன் அவரது வீட்டை முற்றுகை யிட்டார்கள். இந்தியா சென்று மீண்டும் தென்னாப்பிரிக்காவுக்குத் திரும்பியபோது அவர் கப்பலிலிருந்து நாட்டிற்குள் இறங்கக் கூடாது என்று போராட்டம் நடத்தினார்கள் வெள்ளை யர்கள்.

இந்தச் சம்பவத்தை விவரிக்கும் காரணம், எப்படி சாதாரண மனிதர்கள் வழக்கத்திற்கு மாறான ஒரு செயலைச் செய்வதன்மூலம் அசா தாரண மனிதர்களாகிறார்கள் என்பதை விளக்கு வதற்குத்தான். சாதாரண மனிதன் வழக்கமான விஷயங்களை அது அப்படித்தான் என்று ஏற்றுக் கொள்கிறான். நியாயமல்லாததாக இருந்தாலும் பழக்கதோஷம் காரணமாக அடிபணிகிறான். சும்மா போகின்ற படகை ஏன் ஆட்ட வேண்டும் என்று பயப்படுகிறான். ஒருவரும் இதுபற்றிக் குரல் எழுப்பவில்லை. ‘எனக்கென்ன வந்தது? நானும் சலாம் போட்டுவிட்டுப் போகிறேன்’ என்று வாழ்க்கையை ஓட்டுகிறான். பயம் காரணமாக வும், அக்கறையின்மை காரணமாகவும், மனிதன் ஏதோ வாழ்ந்தால் போதும் என்று அநியாயங் களை ஏற்றுக்கொள்கிறான்.

அத்தகைய மனிதன் எதையும் சாதிப்ப தில்லை. அத்தகைய மனிதன் என்றும் சரித்திரத் தில் வாழ்வதில்லை. இருக்கின்ற நிலைகளை மீறி

யார் எழுகிறார்களோ அவர்களே தலைவர்களாக, சரித்திர புருஷர்களாக ஒளிர்கிறார்கள். யார் தனக்காகவும், தன் சமுதாயத்திற்காகவும் மேலும் ஒரு மைல் நடக்கிறானோ அவனே மக்களால் போற்றப்படும் மனிதன் ஆகிறான்.

காந்தி இன்று சரித்திரத்தில் வாழ்கிறார். என்றும் வாழ்வார். தான் நிகழ்த்திய அந்தச் சட்டமறுப்பு இயக்கத்தினால்—துணிச்சலினால்—போராட்டத்தின் நியாயத்தினால் அன்று அவர் வென்றார். அதே கொள்கைகளை மீண்டும் இந்தியாவில் பிரயோகித்து இந்திய நாட்டின் சுதந்திரத்தைப் பெற்றார்.

எது மனிதர்களை ஆட்டிப்படைக்கிறது? செயலற்றவர்களாக ஆக்குகிறது? அச்சம்... அச்சம்... பயம்... பயம்... என்ன ஆகுமோ என்ன பயம், 'என்னைச் சிறையில் தள்ளிவிடுவார்களோ' என்ற பயம். 'எனக்கு வேலை போய் விடுமோ' என்ற பயம். 'என் குடும்பம் நாளைக்கு சோற்றுக்கு என்ன செய்யுமோ' என்ற திகில்.

தெருவில் நாய்கூட மற்றொரு நாய் தன் எல்லையில் வரும்போது குரைக்கிறது, ஊரைக் கூட்டிச் சத்தமிட்டு ரகளை செய்கிறது. காட்டில் மிருகங்களில்கூட அவற்றிடை பிராந்திய சொந்தம் (Territorial Rights) இருக்கிறது. சொந்த இடத்தை உயிரைக் கொடுத்தாவது பாதுகாக்க முன் வருகின்றன. மிருகங்களிடையே நிலவும் (Territorial Rights) "இந்தப் பிரதேசம் நமக்குச் சொந்தம்" என்ற உரிமை உணர்வுகூட மனிதனிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

வெள்ளைக்காரன் ஆட்சி செய்வதற்குப் பதில் ஒரு கறுப்பு அன்னியன் நம்மை ஆட்சி செய்கிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். எத்தனை காந்திகளை நாம் பார்க்க முடியும்? 'எது சுயநலம்' என்று கூட்டணியில் குதிக்கும் சுய நலவாதிகளைத்தான் நாம் காணமுடியும். கண் களை விற்றுச் சித்திரம் வாங்குவோரைத்தான் காணமுடியும்.

ஏன் சமுதாயத்தைப் பற்றியும் நம்மை ஆட்சி செய்யும் அரசியலைப் பற்றியும் நம் சிந்தனைகள் போகின்றன என்று நான் நினைப்பதுண்டு. தனி மனிதனாக நாம் நம்மளவில் நெறிகளுடன் உண்மையுடன், நேர்மையுடன் பிறருக்கும் உதவி யாக வாழ்ந்து முடித்தால் போதாதா என்று நான் சிந்திப்பதுண்டு.

காந்தியும், நேருவும், ராஜாஜியும், காமராஜ ரும் அப்படி எண்ணியிருந்தால் இந்தியாவுக்கு இன்று சுதந்திரம் வந்திருக்காது. பெரியாரும், அண்ணாவும் அப்படி எண்ணியிருந்தால் தமிழ் நாட்டில் தன்மான விழிப்பேற்பட்டிருக்காது. சங்கரரும் ஞானசம்பந்தரும் ராமலிங்கசுவாமி களும் அப்படி எண்ணியிருந்தால் இன்று சத்திய நெறிகளும் ஆத்மீகம் பற்றிய சிந்தனைகளும் நம் மிடையே தழைத்திருக்காது.

மனிதன் தனக்காக வாழ்வதற்கு மேலே போய் வாழும்போதுதான் அவன் உயர்கிறான். மனிதன் நல்ல லட்சியங்களுக்காகப் பாடுபடும் போதுதான்— தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும்போதுதான் உயர்கிறான். மனிதன்

நலிந்தோரின்— தாழ்ந்தோரின்— வாய் இல்லாப் பூச்சிகளாக வாழ்வோரின் துயர் களைய துண்டை உதறி இடுப்பில் கட்டிக்கொள்ளும்போதுதான் தலைவனாகிறான்; தேவனாகிறான்.

நம் ஒவ்வொருவருள்ளும் அந்தத் தேவனாகும் அற்புத இயக்கம் ஒளிவிட்டுக்கொண்டிருக்கிறது. அந்தத் திரியைத் தூண்டி இருளை அகற்ற அதை உபயோகிக்கும் போதுதான்— மனிதன் வாழ்வின் பூரணத்வத்தை எய்துகிறான்.

தேடிச்சோறு நிதந்தின்று வாழும் வாழ்க்கை போதாது. வாடிப் பல மிக உழன்று பிறர் வாடப் பல செயல்கள் செய்வது இழிவு. நம்முள்ளிருக்கும் ஜீவனை ஓர் உயர் லட்சியத்திற்காக அவிழ்த்து விடும்போதுதான் நம் மகத்தான ஆற்றல் நம் மிடமிருந்து புறப்படும். அப்போதுதான் நம் மிடையே இருக்கும் ஆற்றலின் வலிமை நமக்கே புலப்படும்.

மகாத்மா காந்தி என்ற தனிமனிதருள்ளே காந்தி யாய்—சோதியாய்— நிலவிய லட்சியத்தின் வலிமையையும், சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் வலிமையையும் ஒப்பிட்டுப் பாருங்கள். ஒரு தனிமனிதன் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே தோற்கடித்தான்.

தனிமனித வாழ்க்கை, உழைப்பு, நியாயம், அன்பு என்ற சாதாரணப் பண்புகளால் மணக்கலாம். அதற்கு மாறாகப் போட்டி, பொறாமை, வஞ்சம், துரோகம் என்ற இழிகுணங்களால் ஆளப் படலாம். அதற்குப் பதிலாக தியாகம் கருணை, லட்சியம், பொதுநலம் என்ற உயர்

பண்புகளால் மகோன்னதமான உயர்நிலையை அடையலாம்.

நாம் எதை வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கலாம். சாதாரணப் பண்புகள்— இழிகுணங்கள் உயர்ந்த கொள்கைகள் என்பனவற்றுள் எதை வேண்டுமானாலும் நாம் தேர்ந்தெடுக்கலாம். 'நம் வாழ்க்கை எங்கே போக வேண்டும்?' 'எதற்காக மனிதன் பிறந்திருக்கிறான்?' என்பதைப்பற்றி நமக்கேற்படும் தெளிவைப் பொறுத்தது அது.

இன்று நம் நாட்டுப் பொதுவாழ்க்கை— அரசியல் வாழ்க்கையை பார்க்கும்போது, அங்கே நாணயமின்மையையும், பொய்மையையும் வஞ்சகத்தையும், துரோகத்தையும் பார்க்கிறோம். மகாத்மா காந்தி என்ற ஒரு மனிதர் வந்து நமது உயர் பண்புகளைத் தட்டி எழுப்பினார். இப்போதிருக்கும் நமது அரசியல்வாதிகளோ நமது கீழ்ப்பண்புகளைத் தட்டி எழுப்புகிறார்கள்.

'இப்படிப் பச்சைப் பொய்யை மெய்யாகக் காட்டி பொதுமேடையில் பேசுகிறீர்களே!' என்று ஓர் அரசியல்வாதியை நான் கேட்டபோது, அந்த வாசாலகர் என்னை மடக்கினார். எல்லாருமா உங்களைப் போல படித்தவர்களாக இருக்கிறார்கள்?' என்று. இப்படிக் கூறுவதன் மூலம் நாம் நம்மையும் பொது மக்களையும் இழிவு படுத்துகிறோம்; குறைத்து மதிப்பிடுகிறோம்.

ஒருகணம் எண்ணிப் பாருங்கள். நமது நாட்டுத் தலைவர்கள் அரசியல் வாழ்க்கையில் அனுசரிக்கும் சித்தாந்தங்களை—நெறிகளை—நம் சொந்த வாழ்க்கையில்— அன்றாட வாழ்க்கை

யில் அனுசரித்தால் என்ன ஆகும்? அதே நாணயமின்மையை, அதே சுயநலத்தை, அதே வஞ்சகத்தை, அதே துரோக புத்தியை நாம் நம் குடும்பத்தினரிடமும், நாம் தொழில் செய்யும்—வேலை பார்க்குமிடத்திலும் அனுசரிக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். குடும்பம் என்ன ஆகும்? கணவனோ மனைவியோ குழந்தைகளோ என்ன ஆவார்கள்? அந்த நாணயமின்மையையும், துரோகத்தையும் நாம் வேலை பார்க்குமிடத்தில் காட்டினால் எந்தத் தொழில் உருப்படும்?

எனினும் பொதுவாழ்க்கையில் இதை நாம் அனுமதிக்கிறோம். அங்கீகரிக்கிறோம்; இது நியாயமா என்று எண்ணிப்பாருங்கள். சொந்த வாழ்க்கையில் நாம் லவலேசமும் அங்கீகரிக்காத கீழ்ப்பண்புகளை தலைவர் என்போரிடை—பொதுவாழ்வில்—நாம் ஏன் அனுமதிக்கிறோம் என்று எண்ணிப்பாருங்கள். நாம் 'இப்படி அனுமதிப்பது நல்லதா?' என்று உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்.

இது தவறு என்றால் நாம் என்ன செய்யப் போகிறோம்? என்ன செய்ய வேண்டும்?

சிந்தியுங்கள்.

'அச்சமே கீழ்களது ஆசாரம்' — ஆன்றோர் வாக்கு.

படித்தவன் சூதும் வாதும் பண்ணினால்...

எனது வாசகர் ஒருவர் எழுதுகிறார்; 'ஒரு லட்சியத் தலைவனை உருவகப்படுத்தி, அவன் குணநலன்களை ஒரு வானவில்போல உருவாக்கியிருக்கும் தங்களின் கட்டுரைக் கருத்துக்கள் சர்ச்சைக்குரிய சாதாரண விஷயங்கள் என்ற கருத்தில் எழுதப்பட்டனவா அல்லது உங்கள் மனோபாவம் இளைஞர்களுக்கு லட்சிய வெறி ஊட்டி வீறுகொண்டு எழச்செய்வதா?' என்று அருமையான கேள்வி!

அண்ணாமலைபுரத்தில் சென்னை நகரத்துக் குப்பைகளைக் கொட்டி முடை நாற்றமும் அதனால் நோயும் எழக் காரணமாய் இருக்கும் சென்னை நகர கார்ப்பரேஷன் மீது, அங்கு குடியிருப்போர் வழக்குத் தொடர வேண்டும் என்று நான் எழுதினேனானால் அது சர்ச்சைக்குரிய விஷயமாயிருக்கும்.

தமிழ்நாட்டில் சங்ககாலத்தில் தாலிப் பிரச்சினை உண்டா என்று விவாதித்திருந்தேனானால் அது சர்ச்சைக்குரிய விஷயமாயிருந்திருக்கும்.

பக்கிங்காம் கால்வாயின் சரிவுகளிலும் கூவத்தின் சரிவுகளிலும் மனித குடும்பங்கள் வாழ்ந்து

வரும்போது புதிய ராகங்களைக் கண்டுபிடிக்க முடியுமா அல்லது முடியாதா என்ற ஒரு சங்கீதப் பிரச்சினையை எடுத்துக் கொண்டிருந்தேனானால் அது தமிழ்நாட்டின் மேல் மட்டத்து சுகவாசிகளின் சர்ச்சைக்குரிய விஷயமாயிருந்திருக்கும்.

எனது சிந்தனைகள் எல்லாம் சில அடிப்படைப் பிரச்சினைகள் பற்றியது. தனிமனித தர்மங்களைப் பற்றியது; பொது வாழ்க்கையின் நெறியினைப் பற்றியது: அரசியலைப் பற்றியது.

என் சொந்த நாட்டுத் தலைநகரான டில்லியில் என்னை அந்நியனாக நடத்துகிறார்களே என்பதைப் பற்றியது. சதா இந்தி பற்றி வட இந்தியத் தலைவர்கள் பேசி எனது மொழியையும் தமிழ்நாட்டுக் கலாசாரத்தையும் அப்புறப் படுத்தப் பார்க்கிறார்களே என்ற பயத்தைப் பற்றியது. செல்வம்கொழிக்கும் டில்லியையும். பம்பாயையும் பார்த்துவிட்டு குக்கிராமமான சென்னை நகருக்குள் நுழையும்போது, 'தமிழ் நாட்டுக்கும் பிற மாநிலங்களுக்கும் எத்தனை பொருளாதார ஏற்றத் தாழ்வுகள்!' என்றும் என் மனம் கலங்குவதைப் பற்றியது. அந்த வேதனை என் நெஞ்சைக் கவ்வியிருப்பதைப் பற்றியது. முதுகிலே எலும்பில்லாமல் — முகத்திலே நரம்பில்லாமல். "தடுக்குக்குள் நுழைய வேண்டுமா, இதோ நுழைகிறேன், தோப்புக்கரணம் போட வேண்டுமா, இதோ எண்ணிக்கொள்" என்று நமது ஊர் அரசியல்வாதிகள் எல்லாவற்றிற்கும் நெளிந்து கொடுத்து, பொதுமக்களாகிய நம்மைப் பலிபீடத்தில் வைக்கிறார்களே அந்த அவலத்தைப் பற்றியது எனது கவலை; எனக்குச் சின்னக் கவலைகளில்லை.

சர்ச்சைக்குரிய விஷயங்கள் வேண்டுமானால் எனது சர்ச்சை இவை பற்றித்தான் இருக்கும்.

"வாழ்க்கையை நாம் ஒருமுறைதான் வாழ் கிறோம். அதில் நாம் உண்மை பேசாது, தியாகம் செய்யாது, அநியாயங்களை அக்கிரமங்களை எதிர்த்துப் போராடாது போய்விட்டோமானால், நாம் எதற்காக வாழ்ந்தவர்களாவோம்? நாம் வந்தபோது இருந்ததைவிட வாழ்க்கையை மேம் பட்டதாக ஆக்கி, அதை நமது சந்ததிகளுக்கு விட்டுச் செல்லவில்லை என்றால், எதற்காக வாழ்ந்தவர்களாவோம்? ஊமையர்களுக்கும் செவிடர்களுக்கும் உடல் குறைபாடுள்ளோருக் கும் ஆக நம் குரலை எழுப்பி அவர்கள் வாழ்க்கை மலர நாம பாடுபடவில்லை என்றால், நாம எதற்காக வாழ்ந்தவர்களாவோம்? வாய் பேசாத ஊமையர்களைப் பற்றி மட்டுமல்ல நான் எழுதுவது. வாயிருந்தும் பேசத் தெரியாது பிறரால் ஏமாற்றப்படுகிறார்களே அவர்கள் நலன் பற்றிக் கூறுகிறேன்.

தான் தேர்தலில் வெற்றிபெறுவதற்காக அரசியல்வாதி தன் எதிரியைப் பற்றிப் பொய் பேசுகிறான். தன் சுயநலத்திற்காக, தன் பதவிக்காக, தன் செல்வாக்கிற்காக, தன் ஆதாயத்திற்காக நேற்றுவரை நண்பனாயிருந்தவனைத் தூற்று கிறான். இல்லாததை எல்லாம், சொல்லுகிறான். படித்தவன் பாவம் செய்கிறான். இப்படிப் பொய் பேசுபவனின் பேச்சை 'பார்டர்' கட்டி கொட்டை எழுத்தில் பக்கம் பக்கமாகப் பிரசுரிக் கிறார்கள். பத்திரிகைக்காரர்கள், படித்தவர்கள். படித்தவன் பாவம் பண்ணுகிறான்.

நியாயத்தையும் தர்மத்தையும் ஒதுக்கிவிட்டு வாக்கு சாதுரியத்தையும் சட்டப் புலமையையும் முன்வைத்து வாதிட்டு வெற்றி காணும் வழக் கறிஞன் படித்தவனா யிருக்கலாம். ஆனால் பாவம் செய்கிறான். கருணையையும், அன்புள்ளத்தையும் அனுதாபத்தையும் ஒதுக்கிவிட்டு காசு ஒன்றையே குறியாகக்கொண்டு நோயாளியை நடத்தும் ஒரு மருத்துவன் பாவம் செய்கிறான். அவன்படித்த வன், பிறர் துயர் களைவதற்காகவே மேற்படிப்பு படித்தவன். அவன் பாவம் செய்தால் 'அய்யோ' என்று போவான் என்கிறார் பாரதி.

சாதியைக் காட்டியும், உறவைக் காட்டியும், ஆண்—பெண் இனபேதத்தைக் காட்டியும் பள்ளி யிலும் கல்லூரியிலும் ஆசிரியர்களும் அதன் தலைவர்களும் அட்மிஷன் கொடுப்பதிலும், மார்க் போடுவதிலும், வேலை கொடுப்பதிலும் ஒரவஞ்சனை செய்தால்—படித்தவன் 'அய்யோ' என்று போவான் என்கிறார் பாரதி.

நாட்டில் நாம் காண்பதென்ன? படித்தவன் தான் அதிகம் பாவம் செய்கிறான்.

'அரசியலிலே இத்தனை படித்தவர்களா? பட்டதாரிகளா? மக்கள் விழித்துக்கொண்டார்கள். இனி தமிழ்நாட்டிற்கு நல்லகாலம்!' என்று எண்ணும் போது நிகழ்வதென்ன...? அவர்களே ஏமாற்றுகிறார் கள். அகப்பட்டதைச் சுருட்டுகிறார்கள். சுயநலத் திற்காக ஆயிரங் கட்சி மாறுகிறார்கள். இவர்கள் படித்தவர்கள். பட்டம் ஒரு கேடு இவர்களுக்கு!

சத்தியத்தின் கோயில்களாக எந்தக் கல்வி நிலையமும், அதன் பாதுகாப்பாளர்களும் விளங்க வேண்டுமோ அங்கே இச்செயல்கள் நிகழ் கின்றன.

நமக்குப் படித்தவர்களின் பேரில் நம்பிக்கையே போய்விடும் போலிருக்கிறது! ஒழுக்கத்தை வளர்க்காத படிப்பு, ஆத்மிகத்தைப் போதிக்காத கல்வி, சத்திய நெறிகளுக்கு ஆக்கந்தராத நம் கல்விமுறை யாருக்குத் தேவை...? ஏழைகளையும், எளியவர்களையும், கள்ளம் கபடமற்ற கிராம வாசிகளையும், ஏமாற்றவும் — வஞ்சிக்கவும்— சுரண்டவும்தானா நம் கல்வி பயன்பட வேண்டும்?

நமக்குள்ளே நோய், நமது சமுதாயத்திற் குள்ளே ஒரு பெருநோய் இன்று புரையோடிக் கொண்டிருக்கிறது. இது பூசி மெழுகி மருந்து போட்டு ஆற்றிவிடும் நோயல்ல.

ரணசிகிச்சை செய்யவேண்டிய நோய். இப் போது நுட்பம் தெரிந்த, தைரியம் மிகுந்த அறுவை சிகிச்சையாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

யார் இந்த ரணசிகிச்சை — அறுவை மருத்துவ நிபுணர்கள்?

நம் இளைஞர்கள்தான்! நியாயம், உண்மை, தர்மம் என்று சதா கல்விக்கூடத்தில் பாடம் படித்த நமது இளைய பரம்பரை ஒன்றுதான் அநியாயத்திற்கெதிராக—அக்கிரமங்களுக்கெதி ராக மகத்தான துணிச்சலுடன் உயிரைப் பணயம் வைத்துப் போராட முடியும்.

எல்லா நாடுகளிலும் இளைஞர்கள்தான் புரட்சிக் குரல் எழுப்பிப் போராட்டம் நடத்தி நியாயங்களுக்காகப் பாடுபட்டிருக்கிறார்கள்.

எனது அரிய வாசகரின் கேள்விக்குப் பதிலளித்து விட்டேன் என்று நினைக்கிறேன்.

சின்னக் குருவி

அவரைத் தத்துவஞானி என்கிறார்கள்; தத்துவமேதை என்கிறார்கள்; தீர்க்கமான கண்கள், கருணை இழையோடும் முகம், அதிலே நீண்ட வெண்தாடி. பேசுவது கவிதைபோல் இருக்கும். எழுதுவது ஒரு நீரோடையில் குளித்துவிட்டு வந்த புத்துணர்ச்சியை எழுப்பும்.

மாலைவேளைகளில் உலாவப் போவார். தென்றலைத் தடவிக் கொடுப்பார்; மரங்களுடனும் செடி கொடிகளுடனும் பேசுவார்; விலங்குகள், பட்சிகள்— இவைகளுடன் ஓர் அந்நியோன்ய மனோநெருக்கம் அவருக்கு உண்டு என்று சொன்னார்கள்.

அவர் வீடு, நகரின் புறப்பகுதியில் இருந்தது. அழகான வீடு. சின்ன பங்களா என்று கூடச் சொல்லலாம். நல்ல வேலை அவருக்கு. அழகிய குடும்பம். தத்துவத்தை எழுத்திலும் பேச்சிலும் மட்டுமல்ல, வாழ்க்கையிலும் கடைபிடித்தார் என்று சொன்னார்கள்.

ஒருநாள், இரண்டு சின்னஞ்சிறு குருவிகள் அவர் வீட்டு வாசற்படி முன் 'கீ கீ' என்று சத்தமிட்டுப் பறந்தன. ஈசல்களைப் பற்றித் தின்னும் பரண்குருவி அவை. நீட்டுவாக்கில் அமைந்த

சின்ன உடம்பு. மார்புப் பகுதியில் அழகிய வர்ணம், அவை இரண்டும் கணவன் மனைவி யாய் இருக்கவேண்டும்.

மறுநாளும் அவை வந்தன. வாசற் பகுதியை — போர்ட்டிக்கோவை— நோட்டம் விட்டன. பறந்துபோய் விட்டன— மூன்றாவது நாள் அவை இடத்தைத் தேர்ந்தெடுத்துவிட்டன. இது வசந்த காலம். பெண்குருவி கருவுற்றிருக்க வேண்டும். விறுவிறுவென்று ஈர மண்ணைக் கொண்டுவந்து அந்த போர்ட்டிக்கோவின் தூண் முனையில் வேகமாகக் கூடுகட்டிக்கொண்டிருந்தன. குருவி வீடு கட்டுவது ஒருநாள் விஷயமல்ல. ஈரமண் காயவேண்டும்.

இரண்டு மூன்று நாளாய் வேலை நடை பெற்று வருகிறது. தத்துவஞானியின் மனைவி வந்தார். காரை விட்டு இறங்கும்போது, வாசற் படியில் நுழையும்போதும் பறவைகள் கூச்சலிட் டன. சுற்றிச் சுற்றி வந்தன. தாங்கள் இருப்பதை— கூடு கட்டுவதைத் தெரிவிக்கின்றனவா? அல்லது யாரும் அங்கே வரக்கூடாது என்று ஆரவாரம் செய்கின்றனவா?

தத்துவஞானியின் மனைவி, "இந்தப் பறவை கள் வாசற்படியில் கூடுகட்டுவதை நான் விரும்ப வில்லை" என்றார். "ஏன்?" என்றார் தத்துவ ஞானி. "அவை பரண்குருவிகள். இங்கே அவற்றைக் கூடுகட்ட விடக் கூடாது?"

"நல்ல குருவியானால் கட்டலாமா?" என்றார் கணவர்.

"எந்தக் குருவியும் வேண்டாம்! இவை மனிதனைக் கொத்திக் கொத்தி விரட்ட முயலும் குருவிகள்" என்றாள்.

“அந்தச் சின்னக் குருவிகள் நம்மைக் கொத்த வருவதா? அது எப்படி சாத்தியம்? அவை தன் கூட்டிற்கு ஈனம் வந்துவிடுமோ என்று பயப் படுகின்றன” என்றார் அவர்.“எது இருந்தாலும் வாசற்படியில் அசிங்கமாய் வேண்டாம் அவ் வளவுதானே?” என்று பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தாள் அவர் மனைவி.

“என்ன பேசுகிறாய்? எவ்வளவு பெரிய வீடு வைத்திருக்கிறோம்! நம் படுக்கை அறையிலா— வீட்டிற்குள்ளா கூடு கட்டுகின்றன? ஏதோ வெளி யில் சின்ன இடத்தில் வெயில் மழைக்காகக் கட்டுகின்றன. நம்மிடம் எவ்வளவு பெரிய வீடு இருக்கிறது? அதைப்போய் துரத்துவதா? அவற்றிற்குச் சின்ன இடம் கொடுத்தால் என்ன குறைந்தா போய்விடுவோம்?”

“குருவி எங்காவது மரத்தில் போய்க் கட்டட்டுமே?”

“என்ன இது? முல்லைக்குத் தேரீந்த பாரி மன்னனைப் பற்றிப் படிக்கிறோம். உயர்வாகப் பேசுகிறோம். ஒரு சின்னக் குருவி கூடுகட்ட நாம் அனுமதி மறுக்கிறோம். என்ன தமிழ்ப் பரம்பரை இது.”

“ஏன் இங்கு வந்து வீடு கட்ட வேண்டும்? வேறு எங்காவது கட்டட்டும், வேண்டாமென்றா சொல்கிறோம்?” என்றாள் மனைவி விடாப் பிடியாக.

‘அந்தப் பறவை சிபிச் சக்கரவர்த்தியின் காலில் வந்து விழுந்தபோது சிபி என்ன சொன் னார்? ‘ஏ பட்சியே! ஏன் என் காலில் வந்து விழுகிறாய்? வேறு யார் காலிலாவது போய் விழுவதுதானே? என்றா சொன்னார். இந்தக்

குருவி நம் வீடு தேடி வந்திருக்கிறது விரட்டுவது தர்மமல்ல'' என்றார்.

“எனக்குப் பிடிக்கவில்லை'' என்றாள் அவர் மனைவி.

இதற்கிடையில் குழந்தைகள் வந்தார்கள். “தந்தையே! வீட்டிற்கு முன்னால் கூடு இருப்பதும், பறவை எச்சமிடுவதும் அசிங்கமாகத்தான் இருக்கும். நாம் அழகிய பறவைக் கூடு ஒன்று வாங்கி அதே இடத்தில் வைத்து விடுவோம்!'' என்றான் மகன்.

தத்துவஞானி யோசித்தார். ஏதோ குடும்பத்துடன் சமாதான உடன்படிக்கை செய்து கொள்வதுபோல சரி என்று தலை அசைத்தார். மகன் விலை உயர்ந்த மரத்தால் ஆன கூடு ஒன்றை வாங்கி வந்தான். அரை நாள் தச்சு வேலை செய்தான். இரவு நேரத்தில் பறவைக்குத் தெரியாத சமயத்தில் கால்வாசி கட்டியிருந்த மண்கூட்டை அப்புறப்படுத்தினான். மரக்கூண்டை அங்கே வைத்து ஆணியால் அடித்தான்.

ஆகா! இனி பறவைகள் ஆனந்தமாக சொந்த வீட்டில் வாழும். அவைகட்டும் மண்வீட்டைவிட உயர் தரமான தேக்குமர வீடு கட்டிக் கொடுத்து விட்டோமே!

விடியற்காலையில் ‘கி...கி' என்ற சப்தம் கேட்டது. குடும்பத்தில் யாரும் எழுந்திருக்கவில்லை. “டொக்... டொக்...டொக்...டொக்...'' என்ற ஒலி நெடுநேரம் காலையில் கேட்டது. அந்த மரவீட்டை அப்புறப்படுத்த அந்தப் பறவைகள் எடுத்துக்கொண்ட முயற்சிதான் அது. பின் சப்தத்தைக் காணோம்.

காலையில் ஆவலுடன் வந்து வாசற்படியைப் பார்த்தார் தத்துவஞானி. மரக்கூடு வைத்தது வைத்தபடி இருந்தது. இரண்டு பறவைகள்— அந்தப் பரண் குருவிகள் பறந்து வேகமாய் வந்தன.

"கீக்...கீக்கீ... க்கீ" என்று முழக்கமிட்டன. "கலைத்துவிட்டார்கள்! காலிப் பசங்கள்!" என்று கூக்குரலிட்டன.

தத்துவ ஞானிக்கு தலை தொங்கிப் போயிற்று. "மாலையில் மீண்டும் வரும்" என்றான் மகன். மாலை வந்தது. குருவிகள் வரவில்லை. மறுநாள் மாலை வந்தது. குருவிகள் வரவில்லை. மறு நாளும் வந்தது. குருவிகள் வரவில்லை.

தத்துவஞானி வீட்டு வாசற்படிக்கு வரும் போது இப்போது தலைகுனிந்து நடக்கிறார். வாசற்படியின் உயரம் கம்மியல்ல. அங்கே நிற்கும் வெறுங்கூட்டை நிமிர்ந்து பார்க்க முடியாமல் தான் குனிந்து செல்கிறார் நீதி:

(1) என்ன படித்து, எத்தனை பெரிய மேதையாய் இருந்தால் என்ன? சொல்பவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிக்காதபோது அவன் ஒரு போலி மனிதனே.

(2) நியாயமில்லாதவற்றைக் காணும்போது வெறும் சாட்சியாக இருக்கக்கூடாது. நியாயத்திற்காக—தர்மத்திற்காக — எழும் தைரியம் நமக்கு வர வேண்டும்.

(3) சுயநலத்திற்கு மேற்பட்ட ஒரு தர்மம் வாழ்க்கையில் நிலவும்படி நாம் வாழவேண்டும்.

தத்துவஞானி அவர்களே!

உங்களது துயரம் கலந்த சிந்தனைகளை நாங்கள் கலைக்க விரும்பவில்லை. உங்களை மீண்டும் சந்திக்கிறோம்.

பஜனைக் கீதங்கள்

அடிப்படைத் தேவைகளுக்குமேல் நாம் எதற்கு ஆசைப்படுகிறோம், ஏன் ஆசைப்படு கிறோம்? என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தனியான இடத்தில் அமர்ந்து இக் கேள்விகளை நமக்கு நாமே எழுப்ப வேண்டும். ஓய்வாக காலாற நடக்கும்போதோ, தனிமை கிடைக்கும்போதோ நாம் சிந்திக்கவேண்டும்.

மனிதனின் உயர்நிலைத் தேவைகள் என்று சில இருக்கின்றன. அவற்றில் மனிதன் பேரின்பம் காண்கிறான். உடல் பொறிகளால் காணும் நிறைவைவிட அதிகமான நிறைவையும், மகிழ்ச்சி யையும் மனிதன் பெறுகிறான்.

பிரார்த்தனை—இப் பிரபஞ்சத்தின் மூலா தாரப் பொருளுடன் ஐக்கியமாதல், கூட்டு வழி பாடு இவற்றின் மூலம் நமது உயர்நிலைத் தேவை களைப் பூர்த்தி செய்து கொள்ள முயல்கிறோம்.

பிரார்த்தனையின் மூலம் இப்பிரபஞ்சத்தின் மாபெரும் சக்தியுடன் நாம் உறவு ஏற்படுத்திக் கொள்கிறோம். அந்த உறவு நம்மைச் சுற்றியிருப் போரிடம் நாம் காட்டும் அன்பாகவும், பரிவா கவும், உதவியாகவும், இனிமையாகவும் நம்மிட மிருந்து புறப்படுகிறது.

மகாத்மா காந்தி தனக்குத்தானே பிரார்த் தனை செய்தார். அத்துடன் வாராந்திர வழி பாட்டுக் கூட்டம் நடத்தினார்.

ஞானிகள் கூறுகிறார்கள். 'எல்லோரும் கூட்டமாகச் சேர்ந்து ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக வழிபாடு செய்யும்போது, வேண்டும்போது, பிரார்த்தனை செய்யும்போது, அந்த சக்தி கூட்டுச் சக்தியாக எழுகிறது. அந்த வலிவுள்ள கூட்ட சக்தி, எங்கே அந்தக் கூட்டத்தில் அதிகப்படியான தேவையுள்ள மனிதன் இருக்கிறானோ அவனிடத்துப் பாய்ந்து உதவுகிறது.'

கூட்ட வழிபாடு மற்றோர் வழியிலும் நன்மை பயக்கிறது. எல்லோரும் பிரார்த்திப்பதற்காகக் கூடி இருக்கிறோம் என்ற நினைவு பிரார்த்தனைச் சூழ்நிலை நம்மையும் பிரார்த்தனைக்காகத் தயார் செய்து, அதில் ஈடுபடுத்துகிறது.

பிரார்த்தனைக்கு முன்னோ, பின்னோ பல இடங்களில் பாடுகிறார்கள்; பஜனை செய்கிறார்கள்; இசை நம்மைப் பிணைக்கும் தன்மை கொண்டது. நமது ஆழ்மனத்தை எளிதில் ஊடுருவும் தன்மை கொண்ட நாதம் அதில் இருக்கிறது. காரண காரிய அறிவைப் புறந்தள்ளிவிட்டு, நம்மை எங்கோ ஒன்றிவிடச் செய்யும் வலிமை இசைக்கு உண்டு. அதனால்தான் மகாத்மா காந்தி 'ரகுபதி ராகவ' என்று பஜனைப் பாட்டிலே ஆழ்ந்துபோனார். ஆத்ம தரிசனத்துக்கு முழுக் கூட்டத்தையும் ஒன்றாக அழைத்துச் செல்ல பஜனைப் பாடல்களைக் கருவியாக உபயோகித்தார்.

கிறிஸ்துவ ஆலயங்களிலே சாமியாரது உபதேசத்துக்கு முன்னும், பின்னும் எல்லோரும் கூட்டமாக பஜனை கீதங்களை இசைக்கின்றனர். நம் மனத்தை ஒரு முகப்படுத்த உதவும் அரிய சாதனம் இந்த பஜனைப் பாடல்கள்.

கூட்டு வழிபாட்டிலிருந்து வந்தவர்களுடன் பேசிப் பார்த்தால் அன்பு, இனிமை, சாந்தம், உதவும் பண்பு எல்லாம் எப்படி அவர்களிடம் அந்த நிலையில் மேலோங்கி நிற்கிறது என்பது புலப்படும்.

இப்படிக் கூட்டுவழிபாடு செய்யும் மக்கள் கூட்டம் ஒன்று 'ஏமிஷ்' என்ற பெயரால் அமெரிக்காவில் பிலடெல்பியா நகரில் இருக்கிறது. அவர்கள் அனைவரும் குடும்பமாக, 'மற்ற குடும்பத்திற்காக வீடு கட்டவும் நிலம் உழவும்' என்று பலவிதங்களில் சமுதாயத்திற்காக வாழ்கின்றனர். ஏமிஷ் மக்கள் உலகில் ஒரு சிறிய — ஆனால், பெரிய தன்னிறைவு கொண்ட கூட்டம்.

தனிமனிதப் பிரார்த்தனையின் போதோ கூட்டு வழிபாட்டின் போதோ சிலர் கண்களில் நீர்வழிகிறது. சிலர் விக்கி விக்கி அழுகின்றனர். மனித மனம் தன்னைத்தானே திருத்திக்கொள்ளும் செயல் இது. வேண்டாத அழுக்குகளை நீக்கிப் பரிசுத்தம் பெறும் நேரம் அது.

மனிதன் இதன் மூலம் புதிய மனிதனாக — அன்பு, பொறுமை, சாந்தம் நிறைந்த மனிதனாக வெளி வருகிறான். அவன் குடும்பத்தில் இனிமை ஒளி வீசுகிறது. பிறரது உரிமைகளை மதிக்கிறான் அவன், பிறரது உரிமைகளை அபகரிப்பதைப் பற்றி அவன் கனவிலும் எண்ணுவதில்லை.

பிரார்த்தனை, பஜனை மனிதனைச் சுத்தப் படுத்துகிறது; புனிதமாக்குகிறது; பிறரை மதிக்கவும் பிறருக்கு உதவவும், நம்மைப் பக்குவப் படுத்துகிறது.

தனித்து தியானம் செய்ய முடியாதபோது கூட்டு வழிபாட்டில்—பஜனையில் ஈடுபடுங்கள். நல்லெண்ணம் இருக்கிறதே அது ஒரு சக்தி. 'பிறர் நலமுடன் வாழ வேண்டும்' என்றும் நாம் எண்ணும்போது அந்த சக்தி நம்மிடமிருந்து புறப்பட்டு, அந்த நபரை அடைகிறது. அந்த சக்தி அந்த மனிதருக்குத் தெம்பூட்டுகிறது. மனவலிமை தருகிறது. அந்த மனவலிமை உடல் நோயைக் குணப்படுத்தவல்லது. அந்த மனவலிமை அவர்கள் வாழ்வில் வாய்ப்புக்களையும் வளத்தையும் ஏற்படுத்த வல்லது.

எண்ணம் என்ற சக்தி, பிரார்த்தனையின் மூலம் — கூட்டுவழிபாட்டின் மூலம் நன்மை விளைவிக்கிறது. 'குமுதம்' பத்திரிகை நடத்தும் 'பிரார்த்தனை கிளப்'பிலிருந்து அந்தணர்கள் நடத்தும் ஹோமம் வரை — சாம வேதம்வரை — அனைத்தும் நன்மை நாடி செய்யப்படும் செயல்கள். அவைகளைப் பற்றி அறியாதவர்கள்தான் அவற்றைப் பற்றிக் குறைத்து மதிப்பிடுகிறார்கள். பிரார்த்தனையும், ஹோமமும் உலக நன்மைக்காகச் செய்யப்படும் செயல்கள்.

இன்று வெள்ளிக்கிழமை, அதோ மகாத்மா காந்தியின் வழிபாட்டுக் கூட்டம் ஆரம்பமாகிறது. பஜனை கீதங்கள் ஒலிக்கின்றன. கலந்து கொள்ளுங்கள்.

ஒரு ஜதை மிதியடி...

'எண்ணுவது உயர்வு' என்றார் பாரதி, தன் புதிய ஆத்திச்சூடியில். 'உயர்ந்த எண்ணங் களையே எண்ணுங்கள்' என்கிறார் பாரதி. நாம் உயர்வதற்கும், நம் சமூகம் உயர்வதற்கும் இதை விட அரிய மருந்து — வாசகம் வேறில்லை. நமது உயர்வினால் நமக்குக் கேடு செய்ய வரும் எதிரி யின் மனத்தைக்கூட மாற்றி அவரை யும் உயரச் செய்யலாம். எதிரி வஞ்சகமாக இருக்கிறா னென்று கருதி நாமும் கீழ்த்தரமான போர்த் தந்திரங்களைக் கையாண்டோமானால் நாமும் கீழே போவோம்; எதிரியும் கீழே போவான்.

'இன்று போய் நாளை வா' என்றானே ராமன், அதில் ஒரு தர்மம் இருக்கிறது; ஒரு பெருந்தன்மை இருக்கிறது; ஒரு வீரம் தெரிகிறது. 'எதிரி ஆயுதமில்லாமல் இருக்கிறான்; இதுதான் சமயம்; அவனைத் தொலைத்து விடுவோம்.' என்று தொலைப்பவன் உலக நியதிகளை அறியா தவன்; வாழ்வின் இயக்கங்களை அறியாதவன்; மனிதனின் அதி உன்னதப் பண்புகளால் தொடப் படாதவன். எதிரியை அழித்துவிடுவது யாரு டைய தர்மமாகவும் இருக்க முடியாது. எதிரியின் மனத்தை மாற்றி அவனை நண்பனாகச் செய்யும்

பண்பு இருக்கிறதே அதுதான் அதிமனிதப் பண்பு, நமது வாழ்க்கை அதி மனிதனாக வாழ முயலும் தேவனாகும் முயற்சிதான்.

ஜீன் வால்ஜீன் பற்றிய பிரபல பிரெஞ்சு நாவலைப் படித்திருப்பீர்கள். இரக்கப்பட்டு ஒரு திருடனை வீட்டுக்கு அழைத்துச் செல்கிறார் பாதிரியார். ரொட்டி அளிக்கிறார். இரவு தங்க இடமளிக்கிறார். காலையில் எழுந்த திருடன் அங்கிருக்கும் சில வெள்ளிக் கோப்பைகளைக் காண்கிறான். அவற்றை அப்படியே சுருட்டி எடுத்துக் கொண்டு வெளியேறுகிறான்.

போலீஸ்காரர்கள் அவனை வெள்ளிக் கோப்பையுடன் பிடித்து பாதிரியார் வீட்டுக்கு அழைத்து வருகிறார்கள். “இந்தக் கோப்பைகள் உங்களுடையதுதானே... உங்கள் வீட்டிலிருந்து தானே இவற்றைத் திருடினான்?” என்று போலீஸ் காரர்கள் கேட்கும்போது பாதிரியார் கூறுகிறார்: “இல்லை. நான்தான் அவனுக்குக் கொடுத் தேன்” என்று! திருடனின் உள்ளம் கரைகிறது, நமது உள்ளமும்தான்.

அங்கே யாரைப் பார்க்கிறோம்? ஒரு சாதாரண பாதிரியையா...? இல்லை. வெள்ளை அங்கியில் தொங்கும் கைகள் இறக்கைகளாக மாறி உயர்ந்து நிற்கும் ஒரு தேவனை நாம் காண்கிறோம். நாம் கை கூப்புகிறோம்.

மனிதனாக வாழ்ந்து விடுவது எளிது. அது அன்றாட வாழ்க்கை. உப்பு மிளகாய்ப் புளியின் போராட்டமாக இருக்கலாம் அது! நாம் அதைப் பின்னுக்கு வைத்து எண்ணத்தால் உயரும் நாள்

இருக்கிறதே— செயலால் தேவனாகும் முயற்சி இருக்கிறதே அதில்தான் வாழ்வின் தாத்பரியம் அடங்கிக் கிடக்கிறது.

நந்தானியேல் ஹாத்தானின் கவிதை ஒன்று.

"கடவுள் பேரில் பற்றுள்ளவர்களின் பெயர் களை எழுதிக்கொண்டிருக்கிறேன்" என்றது அந்தத் தேவதை. அதிலே அவன் பெயரைக் காணோம்! அவன் பெயர் 'ஆபூபென் ஆடம்.'

ஒருவேளை அவன் கோயிலுக்குப் போகாத வனாயிருக்கலாம்; போக நேரம் இல்லாதவனா யிருக்கலாம். ஆண்டவனுக்கு அர்ப்பணிக்க காசில்லாதவனாயிருக்கலாம்.

மறுநாள் இரவு அந்தத் தேவதை மற்றொரு பெயர்ப் பட்டியலை எழுதிக்கொண்டிருந்தது. அது கடவுளுக்குப் பிடித்தவர்களின் பெயர்ப் பட்டியல். அதில் அவன் பெயர் முதலில் இருந்தது. ஏன்...? அவன் மக்களை நேசிப்பவன்; மக்களிடம் அன்பு காட்டுபவன்; மக்களுக்கு உதவுபவன்.

மனிதன் தனக்காக வாழ்வதற்கு மேலே சென்று பிறருக்காகவும் வாழ முயலும்போது தான் அதிமனிதப் பண்புகளைத் தொடுகிறோம். இது நமது சொந்த வாழ்க்கையின் லட்சியமாக தர்மமாக அமைய வேண்டும். எல்லாராலும் எப்போதும் அந்த உயர்ந்த பண்புகளைத் தொட முடியாதிருக்கலாம். அந்த முயற்சி இருக்கிறதே— மனதில் நிலவும் அந்த நல்லெண்ணம் இருக் கிறதே— அதைத்தான் கடவுள் குறித்து வைத்துக் கொள்கிறார்.

தனிமனித வாழ்க்கையில் இப்படி ஒரு தர்மத்தைப் பற்றிச் சிந்திக்கும் நம் பொதுவாழ்க்கையில் காண்பதென்ன...? அரசியல் மேடைகளில் தலைவர்கள் பேசக் கேட்பதென்ன...?

எதிரியைக் கேவலமாக்கும் முயற்சிதான் இரவு பகலாக நடைபெறுகிறது. எதிரியை உயர்த்தும் முயற்சியல்ல; நியாயமான வாதங்களை எடுத்துச் சொல்லி எதிரியின் மனத்தை மாற்றும் முயற்சி அல்ல. நமது தலைவர்கள் நம்மைக் கேவலப்படுத்துகிறார்கள்.

இப்படி ஒரு நாளும் நமது அரசியல் இருந்ததில்லை. இங்கிலாந்தில் பாரிஸ்டர் படிப்பு படித்துவிட்டு இந்தியாவுக்கு வந்து— ஓர் அரைஞாண் வேட்டியைக் கட்டிக் கொண்டு மகாத்மாகாந்தி நம்மிடையே உலவியபோது, நமது உயர்பண்புகள் பொதுமேடையில் உலவின.

இப்போதோ சில மனிதர்கள் தங்களது கீழ்த்தர எண்ணங்களால் மக்களையும் கீழ்த்தரமாக்குகின்றனர். ஒரு தேவன் உயர் மனிதன் ‘தனது உயர் கொள்கைகளால் எல்லாரையும் உயர்த்துகிறான்; தேவனாக்குகிறான்.

மகாத்மா காந்தி ஆப்பிரிக்காவில் இருந்தபோது இனவெறிக் கொள்கைக்காகப் போராடினார். அப்போது அவரைச் சிறையில்போட்டார்கள். அப்போது தென்னாப்பிரிக்கா நாட்டின் பிரதமராக ஸ்மட்ஸ் என்பார் இருந்தார். இந்தியர்களும் கறுப்பர்களும், வெள்ளைக்காரர்கள் குடியிருப்புகளுக்குள் — அந்த எல்லைக்குள் நுழையக்கூடாது என்பது சட்டம் அங்கே,

ஸ்மட்ஸ்துரை அவர்களின் தலைவர். அவர் புகழ் பெற்ற இனவெறியர். இந்தியர்கள் அடிக்கப் பட்டார்கள்; உதைக்கப்பட்டார்கள்; காந்தி கொடுத்த தைரியத்தில் இவற்றை எல்லாம் தாங்கிக்கொண்டு இந்தியர்கள்— தமிழர்கள் சிறை சென்றார்கள்.

அங்கு நடந்ததை ஸ்மட்ஸ் துரை எழுது கிறார்: "எல்லாக் கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டியிருந்த போதிலும் காந்தி தனது மனித சுபாவத்தை மட்டும் எப்போதும் துறக்கவே யில்லை. கோபமோ, துவேஷமோ கொண்ட தில்லை. மிகுந்த நெருக்கடியான சந்தர்ப்பங் களில்கூட நமது நகைச்சுவையை அவர் இழந்தது கிடையாது.

அவர் சிறையிலிருந்தபோது என்னுடைய உபயோகத்திற்கென்று ஒரு ஜதை மிதியடிகளைத் தயாரித்து, விடுதலையானவுடன் எனக்கு சன் மானமாக அளித்தார். அதனை அநேக காலம் வரை நான் உபயோகித்துக் கொண்டிருந்தேன். ஆனால் அந்த மகானால் தயாரிக்கப்பட்ட மிதியடிகளின்மீது நான் நிற்கத் தகுதியுடையவன் அல்லன் என்ற உணர்ச்சி மட்டும் எனக்கு இருந்து கொண்டிருந்தது. இந்த மாதிரியான மனப்பான்மையுடன் தான் நாங்கள் போராடி னோம். எங்களிருவரிடையிலும் துவேஷமோ மனக்கசப்போ ஏற்பட்டது கிடையாது. அதே போல அவர் உபவாசமிருந்து எதிர்க்கட்சியின் மனத்தை மாற்றினார்.

காந்தியின் முறையானது, தான் துன்பம் அனுபவிப்பதின் மூலம் எதிரியின் அனுதாப

உணர்ச்சிகளைக் கிளப்பி விடும் தன்மையோடு — அவர்களுடைய கவனத்தையும் தன்பக்கம் இழுக்க வல்லது. தான் துன்பம் அனுபவிப்பதன் மூலம் மற்றவர்களைத் தூய்மைப் படுத்துவது என்கிற உயர்ந்த தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. கிறிஸ்துவ தர்மத்தின் முக்கிய அம்சமும் இதுதான்.''

இந்தக் கண்ணோட்டத்தில் நமது அரசியல் வானையும் நம் தலைவர்களையும் பற்றி கொஞ்சம் சிந்தியுங்கள். மொரார்ஜிதேசாயை நெருக்கடி காலத்தில் சிறையில் தள்ளியபோது தேசாய் யார்மீதும் குற்றம் சொல்லவில்லை. வஞ்ச உள்ளம் கொள்ளவில்லை; அதை அவர் பொருட்படுத்தவேயில்லை.

இன்றிருக்கும் புதிய தலைமுறைத் தலைவர்கள் எத்தனைப் பேரிடம் அந்தச் சகிப்புத் தன்மையும் பண்பும் படிந்திருக்கின்றன.

இன்று நம்மிடையே காந்தியடிகள் இல்லை!

பெயர் இருந்தும் செயல் இல்லை!

பொதுமக்களாகிய நமது தரம் இறங்கி விட்டதா? அல்லது தலைவர்களின் தரம் இறங்கி விட்டதா?

சிந்தியுங்கள்...!

தர்மத்தின் அடிச்சுவட்டில்...

தம்பீ, பொருள் செய்க!

உண்மை நாடும் பேரவா, நீதிக்காகப் போராடும் மனஉறுதி, ஊர் உலக நன்மைக்காகப் பாடுபடும் உள்ளம், அழகை ரசித்து இயற்கையுடன் ஒன்றிவிடும் மனநிலை— இவை மட்டும் தானா மனிதனின் உயர்நிலைத் தேவைகள்?

'பொருள் சேர்ப்பது மனிதனின் உயர்நிலைத் தேவையா?' என்ற கேள்வி எழுகிறது நமது ஊரில்; இளவயதிலேயே, 'காசு பணம் முக்கியமில்லை, பொருள் முக்கியமில்லை' என்ற போக்கில் தெரிந்தோ தெரியாமலோ போதிக்கப் படுகிறோம். இந்த எண்ணம் ஆணிவேராக நம்முடன் தங்கிவிடுகிறது. இது நல்லதா?

இவ்வுலகில் வாழ பொருள்—காசு—பணம் முக்கியம். 'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' என்றார் திருவள்ளுவர். ஆகவே பொருள் சேர்ப்பதை தொழில் செய்வதை, வளமாக வாழ்வதை உதாசீனம் செய்யாதீர்கள்; குறைத்து மதிப்பிடா

தீர்கள்; ஏதோ அது உண்மை அல்ல என்பது போல் உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளா தீர்கள்.

பொருள் நமக்குத் தேவை. நமக்கு உடல் இருக்கிறது. ஆத்மா சூடியிருக்கும் கோயில்தான் நம் உடல். அந்த உடல் ஜீவிக்க உணவு தேவை; தண்ணீர் தேவை; குளிர் வெப்பத்திலிருந்து காக்க ஒரு குடியிருப்பு தேவை. நம்மை நாம் மதிக்கவும், மானத்தைக் காக்கவும் உடைதேவை.

புத்தர் உண்மை எது என்று தேடிக் காட்டுக் குச் சென்றபோது, மற்றெல்லா தவமுனிவர்களை யும் போல உடலை வருத்தி ஒடுக்கிவிடுவதன் மூலம், 'உலக விசாரங்களுக்கு உண்மை காண லாம்' என்று நம்பினார். அவர் உடல் எலும்புக் கூடாகியது. அவரால் சிந்திக்க முடியவில்லை. அப்போது ஒரு பெண் கொண்டுவந்த உணவை புசிக்க ஆரம்பித்தார். பின் சொன்னார் தனது சீடர்களிடம்;

"சிந்திப்பதன் மூலம்தான் நாம் வாழ்க்கை யின் காரணத்தை அறியமுடியும். ஆசைகளின் மூலத்தை உணர முடியும். வயிற்றிலே உணவில்லாத போது நமது மூளை சரியாகச் சிந்திக்க முடியாது. ஆகவேதான் உண வருந்தினேன்" என்று.

உடலைப் பேணவும், வாழ்க்கைக்கு அதை ஒரு கருவியாக உபயோகிக்கவும் நாம் உடலுக்கு உணவு அளிக்க வேண்டும்; அதைப் பாதுகாக்க வேண்டும். அந்த உணவைப் பெறுவது, பெற்றுத் தருவது காசு பணம்தான் என்றால், நாம் அதை அலட்சியப்படுத்தக் கூடாது. பள்ளிக்கூடங்கள்

மட்டும் காசு பணத்தால் இயங்கவில்லை. நமது கோவிலும், பூஜையும், எல்லாம் துறந்த மடமும், மடாதிபதிகளும் காசு பணத்தால்தான் இயங்கு கிறார்கள். பொருள் இருந்தால்தான் நாம் நமக்கு மேலே சென்று பிறருக்கு உதவமுடியும். வழி காட்ட முடியும். பிறருக்கு உதவுதல் என்பது ஓர் உயர் நிலைத்தேவை. பொருள் சேர்ப்பதன் மூலம் அதை அடைய முடியும்.

அந்தப் பொருளை நியாயமான வழியில் சேர்க்கிறோமோ, அல்லது ஊரை ஏமாற்றி, ஏழை களை வஞ்சித்து, தவறான வழிகளில் சேர்க் கிறோமோ என்பதில் தான் தெளிவு வேண்டும்.

புத்தர் கூறினார்: "நமது மூளையையும் சிந்தனையையும் கெடுக்கக்கூடிய மது பொருட் களை விற்று, அதன் மூலம் வருமானத்தை சேர்க்காதே" என்று.

செய்யும் தொழிலில் நேர்மை வேண்டும். அப்போது தான் செய்யும் தொழில் தெய்வமாக நின்று நம்மைப் பாதுகாக்கும்.

நல்ல வழிகளில் பொருள் சேர்க்க முடியாது என்று பலர் வாதாடுகிறார்கள். உண்மைக்காக வாதாடுகிறேன் என்று சொல்லி, தன் கட்சிக் காரனின் உண்மையை மட்டுமே மிகைப்படுத்தும் ஒரு வழக்கறிஞர் தொழிலில் கூட மோகன்தாஸ் காந்தி என்ற ஒருவர் உண்மையே பேசி இருக் கிறார். நியாயத்துடன் நடந்துகொண்டிருக் கிறார்.

காய்கறி பயிர் செய்பவன் உண்மையாகப் பொருள் சேர்க்கிறான். உலக ஞானத்தைப் போதிக்கும் ஆசிரியர் உண்மையான வழியில்

தான் பொருள் சேர்க்கிறார் மக்கள் வரிப்பணத்தைப் பொது நிதியாகக் கருதி, அதை நிர்வகிக்கும் ஓர் அரசியல்வாதி அல்லது அதிகாரி உண்மையாகத்தான் தன் சம்பளத்தைப் பெறுகிறான். இன்றைக்கு ஒரு புதிய கருவியை, புதிய பொருளைப் படைக்கும் தொழிலறிஞன் உண்மையான வழியில்தான் பொருள் சேர்க்கிறான்.

பொருள் சேர்ப்பது— பொருள் சேர்க்க உழைப்பது— வேலை பார்ப்பது ஓர் ஆத்ம அர்ப்பணம். உழைப்பு என்ற நீரைச் சிந்தி, கறிகாய் பயிர் செய்து பலன் பெறுகிறோம்.

தமிழ்நாட்டைப் போன்ற இல்லாத, நாடுகளில் எல்லா மட்டங்களிலும், ஆரம்பப் பள்ளியிலிருந்து, 'தம்பீ பொருள் செய்க!' என்பது தாரக மந்திரமாக இருக்க வேண்டும். அதை மூலாதாரமாக வைத்து மற்ற உரிமைகள் அனைத்தும் பின்னப்பட்டிருக்கவேண்டும். பொருள் செய்வதற்கான சூழ்நிலையை கிராமங்களிலும், நகரங்களிலும் நாம் நிறுவவேண்டும். ஆரம்பப் பள்ளியிலிருந்து பொருள் சேர்க்க கற்றுக்கொடுக்கும் 'பொருளாதாரப் பாடம்' ஆரம்ப நிலையிலிருந்து சொல்லிக்கொடுக்கப்பட வேண்டும் நமது ஊரிலோ, பொருளாதாரம் உயர்நிலைப் பள்ளியில்கூட இல்லை. கல்லூரியிலும் விரும்பிப் படிப்பவர்களுக்கு மட்டுமே தரப்படும் பாடமாக உள்ளது.

பொருள் என்பது என்ன?

நமது உழைப்பின் பலன்; நமது சிந்தனையின் பலன்; அதை நாம் உருவாக்கிறோம். விவசாயி தனக்காகவும், பிறருக்காகவும் உருவாக்குகிறான்.

நெசவாளர்கள் தனக்காகவும் பிறருக்காகவும் உருவாக்குகிறார்கள்.

கோயிலிலே அர்ச்சிப்பவர்கள் தங்களுக்காகவும் உங்களுக்காகவும் அர்ச்சிக்கிறார்கள். பத்திரிகைக்காரர்கள் தங்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் தங்கள் உழைப்பைப் பத்திரிகை என்ற பெயரில் பரிமளிக்கச் செய்கிறார்கள்.

எந்த நாடு பொருள் வளத்தால் சிறந்திருக்கிறதோ, அதற்குத்தான் உலக அரங்கில் மதிப்பு; அந்த நாடுதான் உலக அரங்கில் வல்லரசாய் விளங்குகிறது.

அமெரிக்கா உலகின் மாபெரும் வல்லரசாய் விளங்குவது அதன் பொருள் வளத்தால்தான். ரஷியாவும், சைனாவும் வேறுபடுவது— சைனாவின் இல்லாமையும், ரஷ்யாவின் பொருள் வலிமையும்தான்.

உணவு — உடை — இடம் எல்லாவற்றையும் பொருள் என்ற ஒன்றால் வாங்கிவிடலாம். பொருள் அடிப்படைத் தேவை. அதை நம் நாடும். நம் அறிஞர்களும், நம் ஆட்சியாளர்களும் முக்கியமான ஒன்றாகக் கருதி, செயல்படவில்லை என்றால், நாம் ஒருநாளும் முன்னேறமாட்டோம்.

அதைக் கருதாதவரை ஆட்சியாளர்களின் பேச்சு வெறும் வாய்ப்பந்தல்தான். நமது முன்னோர் வகுத்து நம்மிடம் விட்டுப்போயிருக்கும் ஆத்மிக பாரம்பரியம் எல்லாம் உதவாக்கரைப் பொருள்கள் தான்.

அதைத்தான் வள்ளுவர் கூறுகிறார்:

'ஊரில் மழை பெய்யாவிட்டால் (சோற்றுக்கு வழி இல்லாவிட்டால்) கடவுள்கூட கோயிலில் பூஜையை இழப்பார்' என்று.

அதையே வேறு வார்த்தையில் சொல்லுவோமானால், "மகனே! ஆத்மிகத்தைப் பற்றி அலட்டிக் கொள்ளாதே! பதவி, அதிகாரம், புகழ், சரித்திரம் என்று உன்னை ஏமாற்றிக்கொள்ளாதே. முக்கியத்தை முதலில் வை. பொருள் சேர். பொருள் சேர்க்கும் வழியை, தொழில் முறைகளை — புதிய டெக்னாலஜிகளை — கிராமந்தோறும் சொல்லிக்கொடு. இளம்பிள்ளைகளிலிருந்து எல்லோருக்கும் சொல்லிக் கொடு ஒரு குஜராத்தியைப் பார். ஒரு பஞ்சாபியைப் பார். ஒரு அமெரிக்கனைப் பார். ஒரு சிங்கப்பூரானைப் பார்.

கருத்தை வேறெதிலும் செலுத்தாதே அடுத்த தலைமுறையாவது பிழைக்கட்டும்."

நமது ஏழ்மை கடவுளின் விருப்பமல்ல...

எனது அபிமான இளைஞன் சந்தர். சந்தர் பிறந்த போது அவன் காலில் சிறிது ஊனம் இருந்தது. பாதங்கள் உள்ளே மடங்கியிருந்தன. நடக்கும் வயதில் அவன் தனது கணுக்கால்களின் மூலம் நடக்கவேண்டியிருக்கும். 'இறைவன் விட்ட வழி' என்று அவன் பெற்றோர் சும்மா இருக்க வில்லை. டாக்டர்களிடம் தூக்கிச் சென்றார்கள். குழந்தை கத்தக் கத்த கொஞ்சங் கொஞ்சமாக எலும்பை வளைத்து ஓராண்டில் பாதத்தை நேர்ப்படுத்தினார்கள்.

இன்று அவன் இளைஞன்; மருத்துவக் கல்லூரிகளின் ஓட்டப்போட்டியில் முதல் பரிசு வாங்கி வருகிறான் அவன். வீட்டில் ஒரு பெட்டி நிறைய மெடல்கள். நன்றாகக் கால் உள்ளவர் களுக்கெல்லாம் அவற்றை வாரிக் கொடுக் கிறான்! அத்தனை மெடல்கள். கால் ஊனம்— நடப்பதைப் பாதிக்கவில்லை; அவன் கம்பீரத் தைப் பாதிக்கவில்லை; அவன் ஓட்டத்தைப் பாதிக்கவில்லை; அவன் ஓட்டப்பந்தயத்தில் பரிசுகள் பெறுவதைப் பாதிக்கவில்லை.

அவனைப் பார்க்கும்போது மனத்திற்குள் ஒரு கணம் வியந்துபோவேன். பேசும் நிலை இழந்து அவனை அணைத்துக்கொள்வேன். தட்டிக் கொடுப்பேன்.

குறை நாம் நினைத்தால்தான் குறை; பெரிது படுத்தினால்தான் குறை. எத்தனையோ குறை யுள்ளவர்கள் குறைகளை எல்லாம் மீறி ஒளிவிடும் போது, எந்தவிதக் குறைகளும் இல்லாதவர்கள் இல்லாததை எல்லாம் கற்பனை செய்துகொண்டு புலம்புவதையும், அழுவதையும் பார்க்கும்போது நம்முள் கேள்விக் குறி எழுகிறது.

ஏன் அழுகிறார்கள் இவர்கள்? ஏன் அவல நிலையில் தாங்கள் இருப்பதாகப் புலம்பு கிறார்கள் இவர்கள்? ஏன் தங்களால் சாதிக்க முடியாது என்று தீர்மானமாக நம்பி மனம் நைந்து போகிறார்கள் இவர்கள்?

தன்னம்பிக்கை இல்லாது போக என்ன காரணம்?

நெப்போலியன் ஹில் அமெரிக்காவின் தலை சிறந்த புத்தகாசிரியர். சுயமுன்னேற்றம், சுய வளர்ச்சி என்பது பற்றி புகழ்பெற்ற சில புத்தகங் களை எழுதியவர் அவர். கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளாக அமெரிக்காவில் இத்தகைய புத்தகங்கள்தான் அதிகம் விற்பனை ஆகின்றன. அது பற்றிப் பின்னால் பேசுவோம்.

ஓரிடத்தில் ஹில் ஒரு சம்பவத்தை விவரிக் கிறார். அவர் விவரித்த சம்பவம் என்னை 'கப்'பென்று பிடித்து நிறுத்திவிட்டது!

பியூலர் ஒரு நீக்ரோ விவசாயியின் மகன். ஏழைக் குடும்பம். நீக்ரோக்கள்—தெற்கில்—நிரந்தரமாக ஏழைகளாய்த்தான் இருந்தனர். அவர்களுக்கு அமைந்த வாழ்க்கை அவ்வளவுதான் என்று அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள்.

ஆனால், பியூலரின் தாயோ வேறுபட்ட மனுஷி. தங்கள் ஏழ்மை வாழ்க்கை இப்படியே போய்க் கொண்டிருக்கக் கூடாது என்று திடமாக நம்பினார்— தீர்மானித்தார் அவர். 'உலகில் செல்வமும், பொருளும் கொழித்திருக்க—ஏன் நாம் மட்டும் இல்லாதவர்களாய் ஏழைகளாய் வாழவேண்டும்? இதில் எங்கோ கோளாறு இருக்கிறது' என்று எண்ணினார் அவர்.

தனது மகனைக் கூப்பிட்டு வைத்து அந்த ஏழைத் தாய் தன் எண்ணங்களைக் கூறுவாள்: "நாம் ஏழையாயிருக்கிறோம். அது கடவுளின் விருப்பம் என்று ஒரு நாளும் நீ நம்பிவிடாதே. அது கடவுளின் விருப்பமே அல்ல. நாம் ஏழையாயிருக்கிறோம்— ஏனென்றால் உன் தந்தை பணக்காரனாவது பற்றி ஒரு நாளும் ஆசைப் பட்டது கிடையாது. அதற்காக மெனக்கெட்டது கிடையாது. நமது குடும்பத்தில் யாரும் இருக்கிற மாதிரியைத் தவிர வேறு மாதிரி செல்வமுள்ளவர் களாக— காசு பணம் நிறைந்தவர்களாக ஆகவேண்டும் என்று எண்ணியது கிடையாது" என்பாள்.

"ஆசைப்பட்டது கிடையாது!" என்ன மகத்தான விளக்கம்! என்ன மகத்தான கண்டு

பிடிப்பு! ஓர் ஏழை நீக்ரோ தாய் விளக்குகிறார் நிலைமையை மகனுக்கு!

"ஆசைப்பட்டது கிடையாது!" இந்த வாசகங்கள் அந்த இளம் பியூலரின் மனதிலே பசுமரத்தாணி போல் பதிந்துவிட்டது. "நான் ஆசைப்படுவேன். நான் பணக்காரனாவேன்!" என்று அந்த இளைஞன் தனக்குத்தானே கூறிக்கொண்டான். பலமுறை கூறிக்கொண்டான் ஒவ்வொரு முறை கூறிக்கொண்ட போதும் உள்ளத்தில் உற்சாகம் பிறந்தது; உடலில் கிளுகிளுப்பு தோன்றியது. மனத்தில் தான் பணக்காரனாகும்—செல்வந்தனாக விளங்கும் ஓர் உருவம் கற்பனையில் தோன்றியது.

முதலில் சோப்பு விற்றான் அந்த இளைஞன். பத்து ஆண்டுகளில் பணம் சேர்த்து அந்தச் சோப்புக் கம்பெனியையே விலைக்கு வாங்கினான்! அவன் ஒரு நீக்ரோ. வெள்ளையர் நாட்டில் வேலைக்காரத் தொழில் செய்து பிழைக்கும் கறுப்பு மனித வர்க்கம். ஏழை மனிதன் ஆனால் அவனை இந்த எந்தக் குறைபாடுகளும் தடுத்து நிறுத்தி வைக்கவில்லை.

அவன் ஏழையாயிருக்க வேண்டுமென்பது கடவுளின் பிரியமல்ல, அவன் தந்தை பணக்காரனாக வேண்டும் என்று ஓர் அசையை நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

அந்த வாசகங்சளைத் திரும்பத் திரும்பப் படியுங்கள். நாம் எண்ணாவிட்டால், சிந்திக்காவிட்டால், ஆசைப்படாவிட்டால் எப்படி ஒரு காரியம் தானே நடக்கும்?

மகத்தான பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து பிரிந்து நம்மை நாமே ஆளலாம்—ஆளவேண்டும் என்று மகாத்மா காந்தி போன்ற சிலர் விரும்பினார்கள். அது நடந்தது. நாம் நினைக்காவிட்டால் ஆசைப்படாவிட்டால் எப்படி நமக்கு விடுதலை கிடைக்கும்?

இருக்கும் சூழ்நிலையைத் தாண்டிப் பார்க்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும். பலர் அதே போலத்தான் "நாம் குஜராத்திக்காரர்கள் மாதிரி தொழில் செய்ய முடியாது. தமிழ்நாடு குஜராத்தைப் போல் செல்வம் நிறைந்ததாக ஆக முடியாது" என்கிறார்கள். பலர், 'வடஇந்தியத் தலைவர்கள் பொல்லாதவர்கள். அவர்களிடமிருந்து விடுதலையோ மாநில சுயாட்சியோ ஒரு நாளும் வாங்க முடியாது, என்கிறார்கள்.

பால் வாளிக்குள் விழுந்து 'செத்தேன்' என்ற தவளை செத்துப் போயிற்று. கை, கால்களை உதைத்துக் கொண்ட தவளை அங்கே அந்த அலைச்சலினால் ஏற்பட்ட வெண்ணெய் மீது உட்கார்ந்து வெளியே தாவியது. பறவைக் கூட்டம் வேடன் விரித்திருந்த வலையில் விழுந்து மாட்டிக் கொண்டது. பறவைகள் என்ன செய்கின்றன? 'அடடா மாட்டிக்கொண்டோம்!' என்று அவனுடன் கூட்டணி உடன்பாடு செய்து கொண்டனவா? இல்லை. அப்படியே மொத்தமாக வலையைத் தூக்கிக்கொண்டு பறக்க ஆரம்பித்து விட்டன.

முடியும் என்ற நம்பிக்கை; நம்பிக்கை தந்த வலிவு.

பியூலரின் தாய்—அந்த நீக்ரோ அன்னை—பியூலருக்கு மட்டும் அறிவுரை வழங்கவில்லை. உங்களுக்கும் எனக்கும் தமிழ்நாட்டுக்குமாகத் தான் அறிவுரை வழங்கியிருக்கிறார்.

தமிழ்நாடு ஏழையாகவே இருக்கவேண்டும்—பிறர் முகம் பார்த்தே வாழவேண்டும் என்பது கடவுளின் விருப்பமல்ல. நம் நாடு செல்வமுள்ள நாடாக— புகழ் பெற்ற பழம்பெரும் தமிழ் நாடாக— விளங்கவேண்டும் என்ற ஆசை — உண்மையான ஆசை—தீவிரமான ஆசை நமக்குக் கிடையாது. இருக்கும் நிலையிலிருந்து மீள முடியாது என்று நாமும் நம் தலைவர்களும் எண்ணிக்கொண்டிருக்கிறோம்.

கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்!

இருக்கின்ற காய்களை வைத்து வாழ்க்கையை விளையாடுங்கள்...

கொஞ்சம் வயதேறியபின் சைக்கிள் விடக் கற்றுக் கொள்கிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் சைக்கிள் விடுவது எப்படி இருக்கும்? அதேபோலக் கொஞ்சம் வயதேறிய பின் நாட்டியம் ஆடக் கற்றுக் கொள்ளவேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறது; அதிலும் நீங்கள் ஆண் என்றால் அதை எப்படி வரவேற்பீர்கள்...? கொஞ்சம் கஷ்டமாயிருக்கும். அதற்காக வெட்கப் பட்டுக் கொண்டு பிறர் பார்த்தால் என்ன சொல்வார்களோ— சிரிப்பார்களோ என்று நமது ஆசைகளை அடக்கி ஒடுக்கிக்கொண்டு செல்பவர்கள் ஆட்டு மந்தைக்காரர்கள்.

பெர்னார்டு ஷா கூறுகிறார்: "முதலில் பனிச் சறுக்கு விளையாட்டில் இறங்குபவன் பலமுறை விழுந்து எழுந்து தான் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். எந்தத் துறையிலும் நீ புதிதாய் இறங்குகிறாய் என்றால், உனக்கு முன் அதிலே— அந்தத் திறனில் கைவந்தவர்கள் பலர் இருக்கத்தான் இருப்பார்கள். அவர்களை எல்லாம் பார்த்து நம் செய்கையைத் தீர்மானம் செய்ய வேண்டு

மானால் நம்மால் ஒரு காரியம்கூட செய்ய முடியாது" என்கிறார்.

"ஒரு சிறந்த அற்புதமான புத்தகத்தை எழுத வேண்டும் என்று நான் விஷயங்களைச் சேகரித்துக் கொண்டிருந்தேனானால், நான் ஆயுள் பூராவும் காத்திருக்க வேண்டும்" என்று எழுதுகிறார் ஒரு விஞ்ஞான எழுத்தாளர் நாளும் புதிது புதிதாக கண்டுபிடித்துக்கொண்டே இருக்கிறார்கள் என்று எல்லாவற்றையும் கண்டுபிடித்து முடிப்பதற்காக காத்திருக்க முடியுமா?

நம்மில் பலரும் பலவற்றிலும் ஒரு பூரணத்வத்தை எதிர்பார்க்கிறோம். அப்பழுக்கில்லாமல்— குற்றங்குறையில்லாமல் ஒரு காரியம் செய்வது என்பது என்றுமே முடியாது. எல்லாவற்றையும் மிகச் சரியாக செய்யவேண்டும் என்று அதன் நுணுக்கங்களில் காலத்தைச் செலவிடுபவர்கள் அது சரியாக அமையாதபோது மனமுடைந்து போகிறார்கள். தங்களைப் பற்றிக் குறை கூறிக்கொண்டு தன்னம்பிக்கை இழக்கிறார்கள்.

வாழ்க்கை ஓர் ஓட்டம் நிறைந்த செயல். செய்வன வற்றைத் திருந்தச் செய்ய வேண்டும். உண்மை, ஆனால் அதுவே லட்சியமாகிவிடக் கூடாது. ஏனெனில் வாழ்வில் அதற்கெல்லாம் நேரமில்லை. தெரிந்த அளவில் காரியங்களைச் செய்துகொண்டு மேலே போகிறவர்களே வெற்றி காண்கிறார்கள் எனது நண்பர் — ஒரு நிர்வாகி — கூறுவார்:

"ஒருவன் தவறு செய்கிறானா இல்லையா என்பதை நான் பொருட்படுத்த மாட்டேன். உண்மையானவனா, நல்ல நோக்கம் உள்ளவனா, நம்பக் கூடியவனா? என்று மாத்திரம்தான் கவனிப்பேன். இந்தத் தடவை சரியாகச் செய்ய வில்லை என்றால், அடுத்த முறை சரியாகச் செய்து விட்டுப் போகிறான்" என்பார்.

அதேபோல வாழ்க்கையில் பல எதிர்பாராத சம்பவங்கள் வரக்கூடும். பலவற்றிற்குக் காரண காரியங்களை நம்மால் கற்பிக்க முடியாது. அப்போதெல்லாம் 'இந்தச் சம்பவம் நமது நன்மைக்காகவே தான் நிகழ்ந்திருக்கிறது; நம்மை சரியான பாதையில் செலுத்தவே இப்படி ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது' என்று தத்துவ ரீதியில் விஷயங்களை அணுகவேண்டும். ஏன்? எதிர் பாராத விஷயங்களை நிகழ்வது நம் கையில் இல்லை. ஆகவே, அவற்றை ஏற்றுக்கொண்டு மேலே காரியங்களைச் செய்யவேண்டும்.

நாம் ஆணாகவோ பெண்ணாகவோ பிறந்தி ருப்பது, ஏழைக் குடும்பத்திலோ — படிக்காத குடும்பத்திலோ பிறந்திருப்பது என்று எந்தவிதச் சூழ்நிலை இருந்தாலும், அவற்றுக்கெதிராகக் கரித்துக் கொட்டி திட்டிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, நிலைமைகளை ஏற்றுக் கொள்ளக் கற்றுக் கொள்ள வேண்டும். கோடைக் காலத்தில் வெயில் தகிக்கிறது என்று என்னதான் குறைப் பட்டுக் கூக்குரலிட்டாலும், திட்டினாலும் அது மாறப்போவதில்லை. அதைப்போல, இயற்கை நமக்கு அளித்துள்ள கட்டுப்பாடுகளை ஏற்று

அதற்குள் நாம் நம் வாழ்வின் வெற்றிக்கான ‘பதினைந்தாம் புலி’ ஆட்டம் ஆடவேண்டும்! இருக்கிற காய்களை வைத்து வாழ்க்கையை விளையாட வேண்டும்.

முல்லா நசுருத்தீனின் கதையைக் கேள்விப் பட்டிருப்பீர்கள். அரசருக்குக் கேரட் பிடிக்காது. அரசர் முல்லாவைப் பார்த்து, “இந்தக் கேரட்டைச் சாப்பிடு” என்று சொன்னபோது, முல்லா அதைக் கடித்து கடித்துத் துப்பினார்.

அரசர் கேட்டார்: “என்ன உனக்குத்தான் கேரட் தின்னப் பிடிக்குமே... ஏன் அது கசக்கிறாற்போலத் துப்புகிறாய்?” என்றார், முல்லா பதில் சொன்னார்: “அரசே! நான் அரசருக்குத்தான் அடிமையே தவிர கேரட்டிற்கு அல்ல!” என்றார்.

இருக்கிற சந்தர்ப்பத்தைப் புத்திசாலித் தனமாக உபயோகிப்பதுதான் வாழ்க்கை.

சிலர் குடும்பத்திற்காக என்றும், உறவினர்களுக்காக என்றும் தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்கின்றனர். தியாகம் செய்வது உன்னதப் பண்புதான். ஆனால் சகஜமாக தியாகம் செய்பவர்கள், இப்படி தியாகம் செய்வதன் மூலம் பிறரது அன்பை, பாராட்டுதலைப் பெற, இதை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் தன்னம்பிக்கை இல்லாதவர்கள்.

நம்மை அழித்துக்கொள்ள வேண்டும் என்றால் அதற்கு ஒரு மாபெரும் லட்சியம் வேண்டும்.

மற்றபடி லட்சியமில்லாமல் அழித்துக்கொள்வது உலகிலிருந்து தப்பிக்கும் வழியாகும். இல்லை யானால் நம்மிடம் வேறு ஏதும் இல்லாததால், இதை உபயோகித்துப் பிறர் அனுதாபத்தைப் பெறும் முயற்சியாகும். பிறருக்கு இப்படி உப யோகமாயிருக்கிறோம் என்ற சமாதானத்தில் நம் சுயத் தன்மையை இழக்கிறோம் நாம்.

சிலர் தனிமை கண்டு பயப்படுவார்கள். இவர்கள் சதா யாருடனாவது கூடி இருக்க முயல் வார்கள். யாரையாவது எப்போதும் சார்ந்து கொண்டுபோய்க் கொண்டிருப்பார்கள். நட்பு வேறு; சார்ந்திருப்பது வேறு. சமமாயிருப்பது வேறு; சுமையாயிருப்பது வேறு. நாம் தனிமையை ரசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். தனிமையில் இருக்கும்போதுதான் நாம் நம்மைப் பற்றிய சுய சிந்தனை, சுய ஆராய்ச்சி செய்ய முடியும். அது வன்றி ஆற்றுடனும் நீருடனும், மலையுடனும், வனத்துடனும், தென்றலுடனும், நிலவுடனும், கடலோடும், மாலைக் கதிரவனோடும் ஒன்றி யிருக்க முயல்வது ஒரு பெரிய ஆத்மீக அனுபவ மாகும். நாம் இயற்கையை ரசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். தனிமையை ரசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

'தனிமை கண்டதுண்டு அதிலே சார மிருக்குதம்மா' என்றார் பாரதி. 'இனிது இனிது ஏகாந்தமினிது' என்றார் ஔவையார். தனிமை யும், அமைதியும் மௌனமும் மனிதனுக்கு வலிவைச் சேர்க்கும்.

ஒரு சிலர், "உலகில் இது இப்படித்தான் இருக்க வேண்டும்" என்று சொல்லிக்கொண்டு தங்களையும்—பிறரையும் கஷ்டப்படுத்துவார்கள். அவர்களுக்கு விஷயங்களை வெள்ளை அல்லது கறுப்பு என்று இருவகையாகத்தான் பிரிக்கத் தெரியும். ஒன்று, இவன் நமக்கு வேண்டியவன்; இல்லாவிட்டால் எதிரி என்று சிலர் கணக்கிடுவார்கள்.

நேரு தன் அனுபவத்தில் கூறுகிறார்: "உலகில் எல்லாவற்றையும் கறுப்பு வெள்ளை என்று பிரித்துவிட முடியாது. இரண்டும் கலந்த சாம்பல் நிறமும் பழுப்பு நிறமும் இருக்கிறது."

அங்கே அனுபவசாலிக்கேற்படும் சகிப்புத் தன்மை புலப்படுகிறது. தன்னம்பிக்கை அதிகம் உள்ளவனுக்குத் தான் சகிப்புத்தன்மை தோன்றும். அவனுக்குத்தான் தவறு செய்தவர்களைக்கூட மன்னித்து மறக்கும் பெருந்தன்மை உண்டு.

ஊருக்கோர்
உரிமைப் பாதுகாப்புக் கழகம்

நீதி பற்றிய உணர்வு நம் ஒவ்வொருவரிடமும் வேண்டும். எப்போது நீதி உணர்வு நம்மிடம் இல்லாது போகிறது?

'நீதியோ இல்லையோ, நம் தலை தப்பினால் போதும்' என்ற சுயநலம் மேவும்போது; 'நீதிக்காகப் போராடினால் என் வேலை போய் விடும்— பதவி போய் விடும்' என்ற பயம் மேவும் போது; 'என்னைப் பாதிக்காதவரை அடுத்த வீட்டுக்காரனை போலீஸ் இழுத்துச் சென்றால் என்ன, சிறையில் அடைத்தால் என்ன?' என்ற அசட்டை மேவும்போது; 'உலகில் எங்கே நியாயம் இருக்கிறது?' இது வல்லவனுக்கான உலகம். இவ்வுலகில் 'வல்லவன் வகுத்ததே வாய்க்கால்' என்ற தத்துவம் மேவும்போது.

எந்தச் சமுதாயத்தில் நீதி உணர்வு மங்கி வருகிறதோ, அந்தச் சமுதாயத்தின் அடிப்படை நெறிகள் புரையோடி வருகின்றன என்று பொருள். புரையோடிய மரம் பலகீனமான மரம்; அது சாகத் தயாராயிருக்கிறது.

இதோ ஒரு நீதிபதி அரசியல்வாதியிடம் லஞ்சம் வாங்கி, வழக்கை அவனுக்குச் சாதகமாக தீர்ப்புக் கூறுகிறார். இதோ ஓர் அரசியல்வாதி லஞ்சம் வாங்கிக்கொண்டு, முறையானவர்களைப் புறக்கணித்து ஒரு செல்வந்தருக்கு 'லைசென்ஸ்' வழங்குகிறார். இதோ ஒரு கல்லூரியில் 'அட்மிஷ'னிலிருந்து 'பாஸ்' போடுவதுவரை பணத்தால் நடைபெறுகிறது. அப்படித் தேறிய ஒரு 'புத்திசாலி'க்கு ஓர் ஐ.ஏ.எஸ். வேலையும் வாங்கித் தர முடிகிறது.

இப்படி ஒரு சமுதாயம் இருந்தால் அதை என்ன வென்பீர்கள்? சர்வாதிகாரி வாழும் நாடு என்பீர்களா? அல்லது பேடிகளும்— கோழைகளும் குடிமக்களாய் உலவும் தேசம் என்பீர்களா?

அப்படி ஒரு சமுதாயத்தைத் தேட ஆப்பிரிக்காவுக்கா— உகாண்டாவுக்கா செல்ல வேண்டும்? அது உங்கள் தலைவாய்ப் படியில் இருக்கிறது என்றால், 'இல்லை, இல்லை' என்று சத்தியமா செய்யப் போகிறீர்கள்?

ஆவின் கடைமணி நடு நடுங்க, கேவலம் ஒரு பசு தன் கன்றை இழந்ததற்குக்கூட நியாயம் வழங்க வந்த சோழ நாடு இது! தான் தவறு செய்தோம் என்று அறிந்ததும் சடசடவென்று சாய்ந்தானே சிம்மாசனத்திலிருந்து அந்தப் பாண்டியன் வாழ்ந்த பாண்டிய நாடு இது. நீதிக்கு ஒரு கோயில் எடுப்போம் என்று, கங்கை நீரைக் கொண்டு வந்து கண்ணகித் தெய்வத்திற்குச் சிலை எடுத்த சேரலாதன் ஆண்ட சேரநாடு இது.

அத்தகையதோர் நாட்டில், நீதிக்கும்—உரிமைக்குமாகப் போராடிய பெருமக்கள் வாழ்ந்த நாட்டில், தரத்தை நாம் எங்கு கொண்டு வைத்திருக்கிறோம்? ஒரு சர்தார் வேதரத்தினமும் ஒரு 'கல்கி'யும், ஒரு காமராஜரும், ஒரு சத்திய மூர்த்தியும், ஓமந்தூராரும் வாழ்ந்த நாட்டில் இன்று நெறிகள் தவறிவிட்டன என்றால், நம் மிடம் நீதி உணர்வு செத்துவிட்டது என்பதா? நமக்கு அக்கறை இல்லை என்பதா? தமிழர் களை—இந்தியர்களைப் பயம் பிடித்து ஆட்டு கிறது என்பதா?

நீதி பேணப்படவில்லை என்றால், பாது காக்கப் படவில்லை என்றால் நாடு என்ன வாகும், நிரந்தரமாக ஊழலிலும், லஞ்சத்திலும், அநியாயத்திலும், அக்கிரமத்திலும் ஒரு நாடு வாழ்ந்து வந்ததாக சரித்திரம் இல்லை. மாபியா என்ற இத்தாலியக் கொள்ளைக்காரர்களிடம் கூட சில நெறிகள் இருக்கின்றன.

ஒருவன் ஹரிஜன் என்பதால் அவனுக்கு சமுதாயத்தில் மதிப்பு கிடையாது; ஒருவன் ஒரு குறிப்பிட்ட சாதி என்பதால் அவனுக்கு அட்மிஷன் கிடையாது; ஒருத்தி பெண் என்பதால் அவள் ஒதுக்கப்படுவாள் என்றெல்லாம் நடைமுறைப் பழக்கத்தை அனுசரித்து வரும் ஒரு சமுதாயம்; நீதியை மதிக்காத சமுதாயம் நேர்மையைப் புறக்கணிக்கும் சமுதாயம்.

"இன்றைய காரியம் ஆயிற்று; நம் காரியம் ஆனால் சரிதான்' என்று பேசுபவர்களின் தலையில் அதே சுயநலம் துன்பமாக விடியும். இது உலக நியதி.

அநீதியையும்—அக்கிரமங்களையும் கண்டித்து விட்டால் போதுமா? இல்லை. நாம் செயலில் இறங்க வேண்டும்; கடைப்பிடித்தாக வேண்டும். இல்லாது போனால் நமது சந்ததிகளுக்கு நெறிகளும்— நல்ல மரபுகளுமற்ற ஒரு சமுதாயத்தை விட்டுவிட்டுச் செல்வோம்.

தனிமனிதர் ஒவ்வொருவனும் நீதிக்குப் பணிவேன் நேர்மையாக நடந்துகொள்ள முயல்வேன் என்று தீர்மானம் செய்து கொள்ள வேண்டும். அப்படி ஒத்த உள்ளம் உள்ளோர் ஊர் தோறும் கூடி ஒரு சங்க அமைப்பை உருவாக்கிக்கொள்ள வேண்டும். உண்மைக்காகப் போராடுவோம்; அநீதியை எங்கிருந்தாலும் எதிர்ப்போம் என்று சங்கற்பித்துக் கொள்ள வேண்டும்.

சிறு ஊரில் ஒத்துழையாமையிலிருந்து கடை, கதவடைப்பு, மௌன ஊர்வலம், உண்ணா விரதம், நீதிமன்றம் என்று எது எந்தச் சமயத்திற்கு உகந்ததோ, அந்த முறைகளை அனுசரிக்க நாம் தயங்கக்கூடாது.

'மக்கள் நல உரிமைக்கழகம்' என்று அமெரிக்காவில் இருக்கிறது. கறுப்பு மனிதனுக்கு அநீதி இழைத்தாலும் ஒரு மெக்சிகனுக்கு அநீதி இழைக்கப்பட்டாலும் அது போராடுகிறது. நல்ல

எண்ணம் படைத்தோரெல்லாம் அதற்கு நிதி உதவி செய்கின்றனர். நாட்டில் நீதி எல்லோருக்கும் சமமாக வழங்கப்பட வேண்டும் என்பதில் அக்கறைகொண்ட பணக்காரர்கள் அதற்கு உதவுகிறார்கள்.

அதைவிட ஒவ்வொரு போலீஸ்காரரிடமும் ஒவ்வொரு நீதிபதியிடமும் மனச்சாட்சியின்படி நடக்கும் ஒரு சட்டத்தை மதிக்கும் நேர்மை நிலவுகிறது. அது வேண்டும் நம்மிடம்.

ஊருக்கு ஊர் நாம் கூட்டம் போட்டு அநீதிக்கு எதிராக மௌனவிரதம் இருந்தாலே சிலசமயம் உலகம் திருந்திவிடும்.

எண்ணங்கள் வழிநடத்தும்...

'மனிதன் தன்னைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் என்பதைத் தெரிந்துகொள்வதன் மூலம் அவனது வருங்காலத்தைப் பற்றிக் கூறிவிட முடியும்' என்று கருதுகிறார்கள் அமெரிக்க மனோதத்துவ அறிஞர்கள்.

'உங்கள் மனத்தில் நிகழும் எண்ண ஓட்டங்களை விவரியுங்கள். அதன் மூலம் உங்கள் குண நலங்களைப் புரிந்து கொள்ளமுடியும்' என்று கூறுகிறார்கள் அவர்கள்.

எண்ணங்கள் மனத்தில் முதலில் படங்களாக விரிகின்றன. "உங்களை நீங்கள் ஒரு மிருகமாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். என்ன மிருகமாக மாறி இருக்கிறீர்கள்?"

"எலி"

"எலி ஒரு சிறிய மிருகம். நீங்கள் பயந்த சுபாவமுடையவர்கள். பதுங்கும் குணம் படைத்தவர்கள். பிறரைப் பற்றிப் பெரிதும் அஞ்சு

வீர்கள்; நீங்கள் பலகீனம் கொண்டவர்களாக உங்களைக் கருதுகிறீர்கள்!'

"நான் என்னைப் பெரிய புலியாக, சோழ நாட்டுப் புலியாகப் பார்க்கிறேன்!" என்று சொல்கிறீர்கள்...

"ஆகா! நீங்கள் அஞ்சாநெஞ்சம் படைத் தவர்கள்: எதிர்த்துப் போராடும் வலுவுண்டு உங்களிடம், அடிமைத்தளைகளை உடைத் தெறிவீர்கள். உங்களை நீங்கள் ஒரு வீரனாகக் கருதுகிறீர்கள்" என்கிறார் மனோதத்துவ நிபுணர்.

— இத்தகைய கற்பனைச் சிகிச்சை மனோதத் துவம் (Imagery Therapy) கடந்த இருபதாண்டுகளாக அமெரிக்காவில் பழக்கத்திற்கு வந்திருக்கிறது. 'கற்பனை மனோ சிகிச்சை, மிக சுலபமானது. எதையும் மனத்தில் படம் பிடிக்கும்போது — அதைப் பழக்கப்படுத்தும் போது நமது நடை முறைப் பழக்கவழக்கங்கள் மாறுகின்றன என்ற அடிப்படையில் அமைந்தது இந்தக் கற்பனை மனோசிகிச்சை.

'தண்ணீரைக் கண்டு பயம் ஏற்படுகிறது என்றால், தண்ணீரில் மூழ்கி மூச்சு திணறி இறந்து போவது போன்ற கற்பனை உங்கள் கண்முன் எழுகின்றது என்றால் மாற்று என்ன...? தண்ணீர் கொல்லும் குணமுடையது அல்ல. தண்ணீரை மிடறு மிடறாகக் குடிக்கிறோம். 'ஜில்'லென்ற தண்ணீர் கடுங்கோடையில் நமக்கு ஆசுவாசம் தருகிறது; உயிர் தருகிறது; தண்ணீரில்தான் கப்பல் விடலாம்; நிஜப்படகு விடலாம்; கப்பல் பயணம் செய்யலாம், மிதக்கும் ரப்பர் சாதனம்

அணிந்துகொண்டு ஏரியில்— குளத்தில் மிதக்கலாம்; மிதப்பவை சுகமான அனுபவம். அப்படி சுகமாக மிதப்பதை அனுபவியுங்கள். தண்ணீரில் மீன்குஞ்சுபோல் நீந்துவதாக மனத்தில் கற்பனை செய்யுங்கள்' என்கிறார் மனநூலார்.

இப்படி எதற்காக பயப்படுகிறோமோ, கவலைப்படுகிறோமோ, துக்கப்படுகிறோமோ அவற்றுக்கெல்லாம் நேர் மாறான நிகழ்ச்சிகளை சம்பவங்களை மனத்தில் கற்பனை செய்வதன் மூலம்— திரும்பத் திரும்ப கற்பனை செய்வதன் மூலம் பயத்தை — கவலையை — துக்கத்தைப் போக்கிவிடலாம் என்கிறார்கள். இது மிக எளிதான செயல்; எப்படி...?

உங்கள் கற்பனை உங்களுக்குச் சொந்தமானது. அதில் இஷ்டப்பட்டபடி நீங்கள் ஆட்சி செய்யலாம். ராஜகுமாரனாகலாம், சினிமா கதாநாயகனாகலாம். பெரிய அரசியல் தலைவர் ஆகலாம்; பணக்காரராக ஆகலாம். உங்கள் மனத்திரையில் நிகழ்வதை யாரும் பார்த்துக் கொண்டிருப்பதில்லை. ஆகவே, அதை நீங்கள் இஷ்டப்பட்டபடி மாற்றி அமைக்கலாம்; சுருக்கலாம்; அழிக்கலாம், உங்கள் லட்சியத்தை அங்கே காணலாம்.

உங்கள் மனத்திரையில் நீங்கள் எப்படி உங்களை உருவாக்குகிறீர்களோ அப்படி ஆகலாம் என்பதுதான் கற்பனை 'மனோசிகிச்சை; நமது மனக்கற்பனை நமது சூழ்நிலையை நாம் கணித்திருக்கும் முறையினாலும் நமது பழைய அனுபவங்களின் நினைவுகளாலும் ஆனது.

முதல் முறை மேலதிகாரியைப் பார்க்கப் போன போது அவர் நாய் போல 'வள்'ளென்று விழுந்தால், அந்த 'வள்'ளென்ற உணர்வுதான் நினைவில் அந்தச் சம்பவத்துடன் நம் மனத்தில் உருவாகும். அடுத்த முறை பார்க்கப்போகும் போது இந்தப் பழைய நினைவு வந்து நம் மனத்தில் பயத்தை எழுப்பும். நாம் என்ன செய்யலாம்? ஏதோ நாய் பிடிக்கச் செல்பவன் போல— உங்களிடம் நாய்க்குத் தெரியாத சுருக்குக் கயிறு இருப்பது போல கற்பனை செய்து கொள்ளலாம். அல்லது 'இது போன்ற நாய்களை எல்லாம் ஒரு நாளில் நாய் பட்டிக் காரன் வந்து பிடித்துக்கொண்டு போகத்தான் போகிறான்... நான் பார்த்துக்கொண்டு இருக்கத் தான் போகிறேன் என்ற கற்பனையை, நாயைப் பட்டியில் அடைக்கும் நினைவை மனத்தில் கொண்டு வந்து ஓர் ஏளனத்தை வரவழைத்து நமக்கு நாமே தைரியமூட்டிக் கொள்ளலாம்.

வேறு ஒரு கற்பனையைப் பார்ப்போம்...

ஓர் இளைஞன் பயத்துடன் நடுக்கத்துடன் முதல் தடவையாக தான் காதல் கொண்ட ஒரு பெண்ணுடன் பேசுகிறான்; தன் காதலைத் தெரிவிக்கிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். பதிலுக்கு அந்தப் பெண் சீறுகிறாள்; வெடிக் கிறாள்; தன் தந்தையிடம் கூறி அவனைப் பழி வாங்குவதாகக் கூறுகிறாள் என்றோ, அல்லது அவன் காதலைக் கேட்டுக் கைகொட்டிச் சிரிக் கிறாள் என்றோ வைத்துக்கொள்ளுங்கள். நமது கதாநாயகனுக்கு சப்தநாடியும் ஒடுங்கி விடுகிறது.

அவமானம், குற்ற உணர்வு, தாழ்வு மனப் பான்மையால் விரட்டப்பட— இளைஞன் தன்னைத் தானே நிந்தித்துக் கொள்ளக்கூடும். தான் கேவலம் ஒரு பெண்ணின் காதலுக்குக்கூட அருகதையில்லாத உலகில் உபயோக மற்ற மனிதன் என்ற எண்ணம் புகுந்து வாட்டக் கூடும்.

இளைஞன் என்ன செய்யலாம்...?

'இவளில்லாவிட்டால் என்ன? உலகில் எத்த னையோ பெண்கள் இருக்கிறார்களே' என்று ஒரு பெண்கள் கல்லூரியைத் தன் மனத்தில் படம் பிடிக்கலாம். மாறாக, தான் பெரிய பாடகன் என்றும், சினிமா நடிகன் என்றும் பெண்களை மயக்கும் ரகசியங்களைக் கண்களில் தேக்கி வைத்திருக்கும் 'மன்மதன்' என்றும்; பெண்கள் அவன் மேல் வந்து வந்து விழுவதாகவும் கற்பனை செய்யலாம்.

நமது கற்பனைக்கேற்ப நமது செயலும், நடத்தைகளும் அமைகின்றன.

எண்ணங்களை முகம் பிரதிபலிக்கிறது...

ஒரு கம்பீரமான இளைஞன் என்னிடம் பேச வேண்டுமென்று வந்தார். நல்ல உயரம். நல்ல நிறம். சுருண்ட தலைமுடி. பளிச்சென்ற முகம். இனிமையான குரல். அவர் பேச ஆரம்பித்ததும் சொன்ன முதல் வார்த்தை — 'என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை' என்பதுதான். தனக்கிருக்கும் நடுக்கத்தை, பயத்தை, தாழ்வுமனப்பான்மையை அழாக்குறை யாக விளக்கினார். எனக்கு ஒரு பக்கம் கோபம்; மற்றொரு பக்கம் என் மனம் நைந்துபோயிற்று.

திருச்சியில் ஒரு கல்லூரியில் எக்ஸிபிஷன் வைத்திருந்தார்கள். 'உலக அதிசயம்' என்ற தலைப் பில் ஒரு காட்சி. அதாவது உலக அதிசயத்தைக் காண நீங்கள் பல படிகளை, பல பாதைகளை, வண்ண விளக்குகளாலும், துணிகளாலும் அலங் கரிக்கப்பட்ட சுற்று வழிகளை எல்லாம் கடந்தாக வேண்டும்! நிறைய சஸ்பென்ஸ் கொடுத்துவிட்டு, உங்களை ஒரு 'டெலிபோன் பூத்' போன்ற ஒரு சிறிய இடத்திற்குக் கடைசியாக அழைத்துச் செல்கிறார்கள். நமக்கு வியப்பாக இருக்கிறது. வினாடிகள் ஓடுகின்றன. காத்திருக்கிறோம். திடீரென்று ஒரு வண்ணச் சீலை விலகுகிறது.

அங்கே முழுநீளக் கண்ணாடி தென்படுகிறது. அங்கே உங்களை நீங்களே காண்கிறீர்கள்...

'நீங்கள்தான் உலகின் மிகப் பெரிய அதிசயம். உங்களைப் போன்ற மற்றொரு நகல் இவ்வுலகில் வேறு இல்லை. உங்களிடம் வேறு யாரிடமு மில்லாத ஒரு பெரும் தனித்தன்மை இருக்கிறது. ஆகா, இதைப்போல் வேறு எங்காவது பார்த்தி ருக்கிறீர்களா?' என்று சொல்லாமல் சொல் கிறார்கள்!

எனக்கு அதைவிட்டு வெளியேவர மன மில்லை. சற்று நின்று தலையை சரிப்படுத்திக் கொண்டேன். கன்னத்தை, மூக்கைத் தொட்டுப் பார்த்துக்கொண்டேன். கழுத்தைத் திருப்பி எனது Profile—எப்படி இருக்கிறது என்று பார்த்து மகிழ்ந்து போனேன். கொஞ்சம் அங்கசேஷ்டை களையும் செய்து பார்த்தேன்.

நிஜம்தான், உள்ளுக்குள்ளேயே பெரிய ஆள் இருப்பதாகத்தான் பட்டது!

என்னைப் பார்க்க நண்பரை அப்படி ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று தான் ஆசைப்பட்டேன். அவர் தன்னைப் புரிந்து கொள்ளவில்லையே என்பதில் வருத்தம், இப்படி யும் இருப்பார்களா என்பதில் ஒரு கோபம்.

அப்படித்தான் 'மால்கம் மால்ட்ஸிடம்' ஒரு பெண்மணி வந்து சேர்ந்தார். 'மால்கம் மால்ட்ஸ்' அமெரிக்காவில் ஒரு புகழ்பெற்ற பிளாஸ்டிக் சர்ஜன். தன்னம்பிக்கை ஊட்டும் புத்தகங்களை எழுதியவர்.

அவரிடம் அந்தப் பெண்மணி கூறினார்: 'தனது மூக்கு சரியில்லை' என்று. பார்த்தார் மால்ட்ஸ். நன்றாகப் புலப்படுமளவுக்கு மூக்கு அப்படி ஒன்றும் மோசமாக இல்லை. எனினும் மூக்கை நன்கு சரிவர அமைத்துவிட்டால் — ஆபரேஷன் செய்து ஆழகாக்கிவிட்டால் — அந்தப் பெண்மணிக்குத் தன்னைப் பற்றிய மதிப்பும் பெருமையும் உயரும் என்று எண்ணி அறுவை செய்தார். பிரமாதமாக அழகான மூக்கு அமைந்தது.

புதியமுக அமைப்புடன் வீட்டுக்குச் சென்ற அந்தப் பெண்மணி நான்கு நாளில் மீண்டும் வந்தார்: 'மூக்கு இன்னமும் எனக்குப் பிடித்த மாதிரி இல்லை' என்றொரு குறையுடன்!

மால்கம் மால்ட்ஸ் பார்த்தார். மூக்கு அற்புத மாக இருந்தது; முக அமைப்பு அற்புதமாக இருந்தது. சற்றுநேர விவாதத்திற்குப்பின் அந்தப் பெண்மணியிடம் கூறினார்:

"அம்மா, மூக்கு எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. உங்கள் மனத்தில் உங்களைப் பற்றிக் கொண்டுள்ள எண்ணம்தான் சரியாயில்லை. உங்களுக்கு அருவருக்கத்தக்க மூக்கு இருக்கிறது என்ற எண்ணம் உங்கள் மனத்தில் படிந்து போயிருக்கிறது. அது மாறும்வரை, நான் உங்கள் முகத்தை என்னதான் செய்தாலும் நீங்கள் குறைபடத் தான் போகிறீர்கள். குறை மூக்கி லில்லை. முகத்தில் இல்லை. உங்களைப் பற்றி நீங்கள் கொண்டுள்ள எண்ணம்—Self image— சரியில்லை. அதைத்தான் சரிப்படுத்த வேண்டும். மூக்கை அல்ல" என்றார்.

அதிலிருந்து, "மக்கள் தங்களைப் பற்றிக் கொண்டுள்ள எண்ணத்தால்தான் பாதிக்கப்படு கிறார்கள்' என்ற பேருண்மையைக் கண்டார்.

அதன் விளைவாக நம்மை நாம் எப்படிக் காண்கிறோமோ அதன்படிதான் நம் செயல்கள் அமைகின்றன என்பதை அவர் உணர்ந்தார். பின்னால் (Psyco cybernetics) என்ற தலைப்பில் ஓர் அரிய — Self Image - Psychology நூலை அவர் எழுதினார். கடந்த இருபதாண்டுகளுக்கு மேல் அது உபயோகமுள்ள புத்தகமாக விற்பனை ஆகிறது.

தன்னைப்பற்றித் தானே குறைப்பட்டு வாழ்ந் தால் என்ன ஆகும்?

எதுகுறை என்று கற்பனை செய்கிறோமோ அதுவே உண்மையாகிவிடும். ஓர் ஆரோக்கிய மான வாழ்க்கைக்கு நம்மிடம் நம்மைப் பற்றிய ஒரு மதிப்பு— ஒரு கௌரவம் வேண்டும்.

நம் மனத்தில் கொண்டுள்ள எண்ணங்கள்தான் நம்மை உயரமாக்குவதும், குள்ளமாக்குவதும். மகாத்மா காந்திக்கு மெலிந்த உடல். ஆனால், அவர் கொண்டிருந்த சில எண்ணங்கள் அவரை எப்படி ஓர் அதி அற்புதத் தலைவனாக்கியது என்று எண்ணிப் பாருங்கள்.

லெனின் எல்லாரையும்விடக் குள்ளம். ஆனால், அவர் மேடை ஏறினால் ஆயிரமாயிரம் முகங்களிலே பிரகாசம் தென்படுமாம், ஏதோ வெளிச்சத்தைப் பாய்ச்சியதைப் போல. என்ன காரணம்...?

அவருடைய எண்ணங்கள்— துணிச்சலான எண்ணங்கள், நம்பிக்கையூட்டும் எண்ணங்கள்...

உயரம் குள்ளம் என்றோ, தோல் கறுப்பு சிவப்பு என்றோ, செய்யும் தொழில் சிறியது பெரியது என்றோ உங்களைச் சிறுமைப் படுத்தாதீர்கள்.

சரியான எண்ணங்கள் மனிதனை வைரம் பாய்ந்த மரம்போல் ஆக்கி, ஒளிபரப்பும் நட்சத் திரமாய்க் காட்டும். நம்மிடம் அபாரமான சக்தி கள் இருக்கின்றன.

நம்மை நாம் சரியாக மதிப்போம்.

நல்ல எண்ணங்களால் நம்மை உயர் மனிதனாக்குவோம்.

இன்று உங்களுக்கு நல்ல நாளாக அமையட்டும்

நாம் நம்மிடமுள்ள குறைகளைக் கண்டு கோபப் படுகிறோம். புலம்புகிறோம். நம்மை நாமே நொந்து கொள்கிறோம் என்றால் அதற்கு மாற்று என்ன...? நாம் இனி புதிய மனிதனாய் வரவேண்டும்—உலவ வேண்டும்— என்ற லட்சியம் இருக்க வேண்டும்.

“என்னிடம் இந்த இந்தக் குறைகள் உள்ளன! நான் இவற்றை மாற்றிக் கொள்ளப் போகிறேன், திருத்திக்கொள்ளப் போகிறேன்” என்று திடமாக தீர்மானம் செய்யவேண்டும்.

மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற நினைப்பும், கவனமும் சதா நம்முடன் இருந்து கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் நாம் பழைய பழக்கங்களுக்கு அடிமையாகி பழையபடி தான் நடந்துகொள்வோம். ஒரு கவனம், சதா அந்த நினைப்பு (Self Awareness) வேண்டும் என்கிறார்கள் மனநூலார்.

நம்மிடம் சிலர் யோசனை கேட்க வருவார் கள். மனசிகிச்சை நிபுணர்களிடம் சிலர் செல் வார்கள். அவர்களில் பலர் கேட்பதை எல்லாம் கேட்டுவிட்டு, “அது எப்படி முடியும்...?” என்று

தாங்கள் செய்கிற காரியங்களுக்கு சமாதானம் கூறிக்கொண்டிருப்பார்கள். அவர்களை நுணுகி ஆராய்ந்தால் மாறவேண்டும் என்ற ஆசை இருக்கும் அளவுக்கு அவர்களிடம் தங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்ற முனைப்பு கொஞ்சம்கூட இருக்காது.

மனசிகிச்சை நிபுணர்களையே அவர்கள் தங்கள் பக்கம் சாய்க்கப் பார்ப்பார்கள்? மீண்டும் நான்கைந்து நாட்கள் கழித்து உங்களிடம் வந்து, "என்னைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள். நான் என்ன செய்ய வேண்டும்? இருக்கும் வாழ்க்கை நரகமாயிருக்கிறது!" என்பார்கள்.

உங்கள் புத்திமதியை எல்லாம் சாவகாச மாகக் கேட்டுவிட்டு, வேதாளம் பழையபடி முருங்கை மரத்தில் ஏறிக்கொண்ட கதையாக, பழையபடி அதே நிலைக்கு அவர்கள் போய் விடுவார்கள்.

மனித வாழ்க்கை என்பது விதையானது செடியாகி, பூவாகி, பிஞ்சாகிப் பழுப்பதுபோல தானே ஏற்படுவது. நாம் விதைக்குத் தண்ணீரும் மண்ணும் இடலாம்— சூரிய வெளிச்சமுள்ள இடத்தில் செடியை வைக்கலாமே தவிர, வேறு ஒன்றும் அதிகம் செய்ய முடியாது. மற்றபடி எல்லா செயல்களும் விதையிலிருந்து வரவேண்டிய செயல்கள். மனிதர்கள் தங்கள் வாழ்க்கையைத் திருத்திக் கொள்ளத் தாங்களே கவனமாயிருந்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமே தவிர பிறர் ஏதும் செய்ய முடியாது. பிறர் அவர்களது வாழ்க் கையை வாழமுடியாது. சிலர் இப்படித் தங்கள் வாழ்க்கையைப் பிறர் கையில் ஒப்படைத்துவிட்டு

நிம்மதியாயிருக்க முயல்வார்கள். கையாலகாத— தன்னம்பிக்கையற்ற — இனம் இப்படித் தன் பொறுப்பு எல்லாவற்றையும் தலைவன் கையில் ஒப்படைத்துவிட்டுத் தூங்க ஆசைப்படும், ஜனநாயகத்தில் விழிப்பு வேண்டும்.

“ஏன் வாழ்கிறோம்... எப்படி வாழ்கிறோம்... எப்படி வாழவேண்டும்...?” என்று பலவிதங் களிலும் சுயசிந்தனை செய்தாலொழிய நமக்கு வாழ்க்கையைப் பற்றித் தெளிவேற்படாது.

நல்ல புத்தகங்கள் தெளிவைக் கொடுக்கும்: நல்ல மனிதர்கள் வழி காட்டக் கூடும். ஆனால், ‘மற்ற எல்லாம் நம்மிடமிருந்து வரவேண்டிய செயல்கள். நம் வாழ்க்கையை நாம்தான் வாழ் கிறோம். வாழ்க்கையைப் பற்றி ஒரு தெளி வேற்படும்போது, அதற்கேற்ற எண்ணங்களை நாம் தேர்ந்தெடுக்கலாம், அதற்கான செயல்களை நாம் மேற்கொள்ளலாம். இதன் மூலம் நமது வாழ்க்கை நமது கட்டுப்பாட்டில்— நாம் விரும்பும்படி அமையும்.

இதை வேறுவிதமாகவும் அணுக ஆலோசனை கூறுகிறார்கள் மனோதத்துவப் பேராசிரியர்கள். நம்மிடம் என்ன குறைகளிருக்கின்றன என்று முதலில் பட்டியல் போட்டுப் பிரலாபிக்க வேண் டாம். எதைப் பற்றி நீங்கள் அதிகம் சிந்திக்கிறீர் களோ அதுவாகவே நீங்கள் ஆகிவிடுவீர்கள். இப்படி நம்மிடம் ஒரு குறைபாடு உள்ளதே என்று பிரலாபித்தால் அந்த குறைபாடு இன்னும் அதிகமாக அழுந்தி மனத்தை ஆக்கிரமித்துக் கொள்ளும். இப்படி நடந்துவிடுமோ என்று பயந்தால் அந்தப் பயமே நிஜமாக நடந்துவிடும்.

எண்ணத்திற்கு அத்தனை வலிவுண்டு. மாறாக உங்களிடமுள்ள நல்ல குணங்களை, நல்ல பழக்கங்களைப் பட்டியல் போடுங்கள். அதைப் பாராட்டுங்கள். அதில் மகிழுங்கள். அதில் அதிகம் கவனம் செலுத்துங்கள். என்ன நம்மிடம் இருக்கிறது என்பதைவிட, என்ன நம்மிடம் இல்லை என்ற எண்ணங்களே நமது முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

செட்டியார் கடைக்குப் போகிறீர்கள் என்றால் — செட்டியார் உங்களிடம்.

"இன்று கடையில் உப்பு இல்லை. வெங்காயம் தீர்ந்துவிட்டது. நல்லெண்ணெய் லாரியில் எடுத்து வரப் போயிருக்கிறார்கள்!" என்று கடையில் இல்லாததையா உங்களிடம் ஒப்புவிக்கிறார்?

"வாருங்கள்! வாருங்கள்! என்ன வேண்டும் உங்களுக்கு? உங்களுக்குப் பிடித்த மாதிரி உளுத்தம் பருப்பு வந்திருக்கிறது. ஒரு கல் இல்லை; புதுத் துவரம் பருப்பு நேற்றுத்தான் வந்தது. டேய்! சாருக்கு ஒரு கிலோ அந்தப் புது வெல்லத்தைக் கட்டு!" என்று சொல்வதை நாம் கண்டதில்லை...?

ஏன் நாம் செட்டியார் காட்டும் நல்ல பாடங்களை நம் வாழ்க்கைக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது? மாயவரத்தில் என் உறவினர்களின் எத்தனையோ மளிகைக் கடைகளில் உட்கார்ந்திருக்கிறேன். எனது உறவினர்கள் இதை கலையாகப் பயின்று தங்கள் வாடிக்கைக்காரர்களை வரவேற்பதைக் காணும்போது அங்கே ஓர் உயரிய நாடகத்தை விறுவிறுப்புடன் பார்க்கும் உற்சாகம் ஏற்படும்.

ஓர் எழுத்தாளன் என்ற அளவில் மனித முயற்சிகளைப் பல்வேறு கோணங்களில் நான் அங்கே கவனிப்பதுண்டு!

உலகமே நமக்கு ஒரு பள்ளிக்கூடம். தெருவில் கறிகாய் விற்கும் பெண்மணியிலிருந்து பல்கலைக் கழகப் பேராசிரியர் வரை—இந்த முழு உலகமும் நமக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கக் காத்திருக் கிறது. நமக்குத் தெரிந்துகொள்ளும் ஆர்வம் வேண்டும்; நாம் காணும் அனுபவங்களிலிருந்து நம்மை உயர்த்திக்கொள்ளும் நோக்கம் வேண்டும்.

பிறர் நம்மைப் பாராட்டும்போது நம்முள் ஓர் தன்னம்பிக்கை பிறக்கிறது; ஒரு மகிழ்ச்சி நிலவுகிறது; அன்று பூராவும் நமது நாள் நல்ல நாளாக அமைகிறது. அதனால்தான் மேனாட்டி னர் காலையில் எழுந்ததும் சந்திக்கும் மனிதர் களைக் கண்டு இன்று நல்ல காலைப் பொழு தாய் அமையட்டும் என்று பொருள்படும்படி பார்ப்பவர்களிடம் எல்லாம் "குட்மார்னிங்!" என்று சொல்கிறார்கள். அதைச் சொல்லும் போது, "காலைப் பொழுது நல்லதாய் எனக்கும் அமையட்டும்; உனக்கும் அமையட்டும்" என்று கூறுகிறார்கள். பொதுவாக, "இன்று நல்ல நாள்!" என்று கூறும்போது உலகெங்கிலுமுள்ள நல்ல வற்றை எல்லாம் ஒன்று திரட்டி, அந்த நன்மையை ஒரு சொல்லால் கூறுகிறோம். ஒரு நல்லெண்ணம்— ஒரு நல்ல ஆசை. அதற்கு வலிவுண்டு — பலனுண்டு.

"காலையில் நம்மைப் பார்த்து. 'குட்மார்னிங் சொல்பவர்கள் எல்லாம் செயற்கையாகச் சொல் கிறார்கள். அதில் உண்மையில்லை. போலித்தனம் தொனிக்கிறது" என்று சிலர் சொல்லக்கூடும்.

நாம் நம்புகிறோமோ இல்லையோ—முதலில் கொஞ்சம் நல்ல விஷயங்களை அப்படிப் பாவனை செய்தால் அந்தப் புறச்செயல் நம்மைப் பற்றிக் கொண்டு நமது மனோபாவத்தை மாற்றிவிடும் என்று கூறுகிறார்கள் மனநூலார். அரசனும் நானும் என்ற புகழ் பெற்ற ஆங்கில நாடகத்தில் வரும் ஆசிரியை பாடுவார்.

"எனக்குக் கைகால் உதறல் எடுக்கும். தொடை நடுங்கும். ஆனாலும் ஏதோ மகிழ்வுற்ற நிலையில் இருப்பதாகப் பாவனை செய்து கொண்டு சீட்டி அடிப்பேன்!" என்றொரு வசனத்தைப் பேசுகிறார்.

'உங்களைப் பார்த்தால் என்ன கம்பீரமாக இருக்கிறது; மனத்திற்கு என்ன கலகலப்பாக இருக் கிறது' என்று சொன்னவுடன் நண்பரின் முகத்தில் புன்னகையும் பெருமிதமும் ஒளி வீசுவதைக் காண்பீர்கள். அந்த மகிழ்ச்சிச் சிரிப்பு நம்மையும் பற்றிக்கொள்ளும். ஆகவே நல்ல வார்த்தை சொல்வோமே!

நான் சில சமயம் எங்கோ தொழில் நினை வாக விமானத்தில் ஏறிக்கொண்டிருப்பேன், அல்லது வெளியூரில் இறங்கி அங்கு செய்ய வேண்டிய அன்றைய வேலையை எண்ணிக் கொண்டு விமானத்தில் இருந்து இறங்கிக் கொண்டிருப்பேன்.

ஒரு சாதாரண விமான சிப்பந்தி என் கவனத்தைச் சிதற வைப்பார். மலர்ந்த முகத்துடன், "இன்று உங்கள் நாள் நல்ல நாளாக அமையட்டும்!" என்று சிரித்துக் கொண்டு கூறுவார்.

நான் அவரை ஆர்வத்துடன் நோக்குவேன். ஏதோ வானிலிருந்து தேவாதி தேவர்கள் எல்லாம் வந்து அங்கே மனிதராக நிற்பது போலவும் நான், 'முடியவேண்டும்' என்று சொல்லும் காரியத்திற்கு ஆசி கூறுவது போலவும் எண்ணிக்கொள்வேன். அவர் சகஜமாக எல்லோருக்கும் அந்த இனிய வார்த்தையைக் கூறிக்கொண்டிருக்கக் கூடும். ஆனால், எனக் கென்னவோ யாரோ எனக்காகத் தனிப்பட்டு முன்கூட்டி வாழ்த்துவது போலத் தோன்றும். அந்த மகிழ்ச்சி என் பேச்சில் நடையில் தென்படும்.

ஏன் தினமும் காலையில், மதியத்தில், மாலை யில் நல்ல வார்த்தை சொல்லி நம்மையும் சுற்றி இருப்போரையும் ஊக்கப்படுத்தக் கூடாது...?

உங்களுக்கு...

இன்று நல்ல நாளாக அமையட்டும்.

மக்கள் சக்தி இயக்கம்

உயர் லட்சியங்களுக்காக ஓர் இயக்கம். இளைஞர்களாலான இயக்கத்தை வைத்து சாதனைகளால் ஒரு பரிபூரண சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த மக்கள் சக்தி இயக்கம் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது.

"நாடு நலம் பெற வேண்டும், வளம் பெற வேண்டும். தமிழர்களது அறிவுக்கும் திறமைக்கும் ஈடான ஓர் உன்னதமான தமிழ்ச் சமுதாயத்தை நாம் உருவாக்க வேண்டும். நல்லவர்களும், படித்தவர்களும், நாட்டின் பால் அக்கறை கொண்டு 'இது எனது நாடு' என்ற உணர்வுடன், பொது வாழ்வில் இறங்க

வேண்டும். இதற்காகப் பல தியாகங்களையும், தேவையானால் சில காயங்களையும் ஏற்றுக்கொள்ளத் தயாராகும் போது தான் இந்த நாட்டில் மாற்றம், அடித்தளத்தில் வேர்விடும்!"

இந்தக் கொள்கைகளை முன் வைத்து மக்கள் சக்தி இயக்கம் செயல் படுகிறது.

மக்கள் சக்தி இயக்கம் சுயவளர்ச்சி, சுய பொருளாதார மேம்பாடு, சமுதாய விழிப்புணர்ச்சி என்ற மூன்று குறிக் கோள்களைக் கொண்டது.

சுய வளர்ச்சி

ஆன்மிக அடிப்படையில் உயர் வாழ்க்கை நெறிகளுடன் கூடிய தனி மனித வளர்ச்சியில்தான் சமுதாய வளர்ச்சி இருக்கிறது. முடிவெடுக்கும் திறன், லட்சியத் தெளிவு, முன்னேறும் ஆர்வம், முன்னேற்றத்திற்கான திட்டங்கள், சளைக்காத மனம், செயல் என்று, சுய வளர்ச்சியின் பல்வேறு பாகுபாடுகளையும் இன்றைய மனவியல் அறிவு நமக்குப் போதிக்கிறது. சுய வளர்ச்சி பெற்ற தனி

நபர்களாலான சமுதாயம்தான்' ஒரு முழு வளர்ச்சி பெற்ற சமுதாயமாக அமையும்.

சுய பொருளாதார வளர்ச்சி

தமிழ்நாட்டில் சொந்தக் காலிலே நின்று சுய தொழில் செய்ய வேண்டு மென்ற மனோபாவம் தமிழர்களிடையே குறைவு. கஷ்ட நஷ்டங்களை ஏற்று சுயதொழில் செய்து உற்பத்தியை பெருக்க வேண்டும் என்ற நிலை தமிழ்நாட்டில் என்றைக்கு ஏற்படுகிறதோ, அன்றுதான் தமிழ்நாட்டின் மொத்த வருமானமும், தமிழனின் சராசரி வருமானமும் அதிக மாகும்.

சமுதாய விழிப்புணர்ச்சி

இந்தியாவில் படித்தவர்களுக்கும், பாமரர்களுக்கும், பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் உள்ள இடைவெளி அதிக மாகிக்கொண்டு வருகிறது.

அந்த அடித்தளத்து மக்களை நம்முள் ஒருவராய் எண்ணி, அவர் களுக்குக் கை கொடுத்துத் தூக்கிவிடும் போதுதான் நம்மை நாம் ஒரு முழு

மனிதனாகவும், நமது சமுதாயத்தை ஒரு வளர்ச்சி பெற்ற சமுதாயமாகவும் நாம் கருத முடியும்.

'நம்மால் முடியும் தம்பி' என்பது நமது தாரக மந்திரமாகும்.

தமிழர்களின் அடிப்படை மனோ பாவங்கள் மாறாதவரை எந்தவித கல்வி அபிவிருத்தியிலோ, பொருளாதார வளர்ச்சியிலோ ஒரு நிரந்தரமான மாற்றத்தைக் கொண்டு வர இயலாது.

வழிபட்டுத் துதிபாடும் தமிழர்களது மனோபாவம், நெளுவெடுத்து வேலை செய்யும் மனோபாவம், புதியன காணத் தயங்கும்.

சம்பிரதாய மனோபாவம், பொது சுகாதாரத்தில் அக்கறையற்ற நிலை, சுயதொழில் செய்யப் பயப்பட்டு ஊழியம் செய்யப் புறப்படும் மனோபாவம்.

நமது வரியில்தான் இந்த அரசாங்கம் செயல்படுகிறது. அதை நிர்வகிப்பதில் நமக்கும் பங்குண்டு என்கிற பொறுப்பை மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

ஜனநாயகம் சரியாகச் செயல்பட, அரசியல் கடிவாளங்களான நீதிமன்றம், அர சாங்க நிர்வாகம், சட்டசபை, பத்திரி கைகள் எல்லாம் தனித்து நின்று நாட்டின்பால் அக்கறை கொண்டு பார பட்சம் பார்க்காமல், தவறு கண்டவிடத் துத் திருந்தும் துணிவு பெற்ற அரசியல் அங்குசங்களாகச் செயல்பட வேண்டும்.

நடைமுறை வாழ்வில் எளிமை யாகவும் இனிமையாகவும் அனைவ ரோடும் பழகுங்கள். முக்கியத்துவம் பெற வேண்டும் என்ற வேட்கையை மனதில் வளர்த்துக்கொண்டு, சுயலாபம் கருதி பொது சேவை செய்ய வராதீர்கள். ஆடம் பரமான தோரணையும், ஜபர்தஸ்தான தோற்றங்களும் அசிங்கமான அரசியல் வாதிக்கு மட்டுமே உரியது என்று ஒதுக்கிவிடுங்கள்— தற்பெருமை பேசு வதனால் நாம் பிறர் துயரங்களை போக்கிட முடியாது. குறுக்கு வழியில் பணம் சேர்த்தவர்களையும் நெறியற்ற வாழ்வை வாழ்ந்து கொண்டு அரசியலில் படாடோபமாய் வலம் வருகின்றவர் களையும் தூசுக்குச் சமமாய் நினையுங் கள். புறக்கணியுங்கள்.

தனி மனிதன் வளர்ச்சி பெற்று வளமான வாழ்வு வாழத் துடிக்கும் மனித உணர்வு, சமுதாய ஈடுபாடு என்ற குணத்தால் இந்தப் பிரபஞ்சம் முழுவதையுமே தொடுகிறது. அந்த ஆத்மீக அடிப்படையில்தான் மக்கள் சக்தி இயங்குகிறது! நம்மை எல்லாம் தொடுகிறது. மக்கள் அனைவரையும் இணைக்கிறது.

வாழ்க வையகம்!

வாழ்க வளமுடன்!

நன்றி!

குமுதம், ஜூன் 21, 1990

இயக்கப் பத்திரிகை

‘நம்பு தம்பி நம்மால் முடியும்’

மாதப் பத்திரிகைக்கான
ஆண்டுச் சந்தா **20** ரூபாய்.

மக்கள் சக்தி இயக்கத்தில்
என்ன நடக்கிறது?
என்ன செய்யலாம்
என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

முகவரி:
தலைமையகம்,
மக்கள் சக்தி இயக்கம்
17ஏ, சௌத் அவென்யூ,
(பஸ் நிலையம் அருகில்)
திருவான்மியூர், சென்னை–600 041.

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி
எழுதிய இதர நூல்கள்

- உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள்
- நெஞ்சமே அஞ்சாதே நீ!
- தட்டுங்கள் திறக்கப்படும்
- மனம் பிரார்த்தனை மந்திரம்
- தலைவன் ஒரு சிந்தனை
- எண்ணங்கள்
- மனித உறவுகள்!
- ஆத்ம தரிசனம்
- பிரச்சினைகளுக்கு முடிவு காண்பது எப்படி?
- நாடு எங்கே செல்கிறது?
- சிந்தனை தொழில் செல்வம்
- நம்மால் முடியும் தம்பி– நம்பு!
- நீதான் தம்பி முதலமைச்சர்
- ஜேம்ஸ் ஆலனின் வாழ்க்கை அமைக்கும் எண்ணங்கள்

கங்கை

பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794